| 417. | **மித்திரா வருணர்கள்:** மருத்துக்கள் மித்திரா வருணர்களுடைய தேரைப் பூட்டுகிருர்கள். | 738 |
| 418. | **மித்திரா வருணர்கள்:** சரியான வழியில் செல்ல மித்திரனுடைய வழியில் நடப்போமாக. | 739 |
| 419. | **மித்திரா வருணர்கள்:** மித்திரன் பாவிக்கும் வழியைப் புலப்படுத்துகிருன். | 740 |
| 420. | **மித்திரா வருணர்கள்:** புவியிலே தேவைக்குரிய சலமிருக்கிறது. | 742 |
| 421. | **மித்திரா வருணர்கள்:** தேவர்கள் சத்தியத்தைப் பாலிப்பவர்கள். | 743 |
| 422. | **மித்திரா வருணர்கள்:** மித்திரா வருணர்கள் மழையைப் பிறப்பிப்பவர்கள். | 743 |
| 423. | **மித்திரா வருணர்கள்:** மித்திரா வருணர்களுடைய ஆக்ஞையால் பசுக்களிடம் பாலுண்டு. | 744 |
| 424. | **மித்திரா வருணர்கள்:** ஆத்திரேயன் பசுக்களை ஜயிக்க மித்திரா வருணர்களை நாடுகிருர். | 745 |
| 425. | **மித்திரா வருணர்கள்:** மித்திரா வருணர்கள் அனைவரையும் அரசு புரிகிருர்கள். | 746 |
| 426. | **மித்திரா வருணர்கள்:** மித்திரா வருணர்கள் அழைக்கப்படுகிருர்கள். | 746 |
| 427. | **அசுவினிகள்:** அசுவினிகள் சூரியனுடைய வடிவத்தை ஒளிப்படுத்த நிறுத்துகிருர்கள். | 746 |


Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 428. | **அசுவினிகள்:** பொய்யற்றவர்கள் எங்கு இருக்கிருர்கள்? | 748 |
| 429. | **அசுவினிகள்:** அசுவினிகளுக்கு மது வித்தை தெரியும். | 749 |
| 430. | **அசுவினிகள்:** நாங்கள் அசுவினிகளோடு சேர்வோமாக. | 751 |
| 431. | **அசுவினிகள்:** அசுவினிகள் உதயத்தில் முதலில் தோன்றுகிருர்கள். | 752 |
| 432. | **அசுவினிகள்:** இரு அசுவினிகள் அன்னங்களைப் போல் வருகிருர்கள் - கருப்போபநிஷதம். | 753 |
| 433. | **உஷை:** உஷை சோதியின் மகள். | 755 |
| 434. | **உஷை:** மானிடர்களை எழுப்பி ஒளியைத் தருகிருள். | 756 |
| 435. | **ஸவிதா:** ஸவிதா தன்னிலே எல்லா வடிவங்களையுமேந்துகிருன். | 757 |
| 436. | **ஸவிதா:** ஸவிதா நல்லவர்களைப் பாலிக்கிருன். சத்தியத்தைப் பற்றுகிருன். | 758 |
| 437. | **பர்ஜன்யன்:** பர்ஜன்யனுடைய செயல்கள். | 759 |
| 438. | **பூமி:** புவியின் மகிமை. | 761 |
| 439. | **வருணன்:** வருணனுடைய மாயைகள். | 762 |
| 440. | **இந்திராக்கினிகள்:** இந்திராக்கினிகள் ஆற்றலும் அறிவும் - போர்களில் தடைபடாதவர்கள். | 763 |
| 441. | **மருத்துக்கள்:** ஏவயாமருதன் அறிந்த மருத்துக்கள். | 764 |


## ஆருவது மண்டலம்


| | | |
|---|---|---|
| 448. | **அக்கினி:** அக்கினி தாயும் தந்தையுமாயிருக்கிருன். | 767 |


hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 443. | **அக்கினி:** அக்கினியே மனிஷியும் உணவு மாகும். | 769 |
| 444. | **அக்கினி:** அக்கினியைப் போற்றுபவன் சோதியை விரும்புகிறான். | 771 |
| 445. | **அக்கினி:** அக்கினி அனைவருக்கும் உயிரை அளிக்கிறான். | 772 |
| 446. | **அக்கினி:** அக்கினி சனங்களிலே வசிக்கிறான். | 774 |
| 447. | **அக்கினி:** அக்கினி விபத்துக்களை விலக்கு கிறான். | 775 |
| 448. | **அக்கினி வைசுவா நரன்:** வைசுவாநரனிட மிருந்து வீரர்கள் தோன்றுகிறார்கள். | 777 |
| 449. | **அக்கினி வைசுவா நரன்:** வைசுவா நரன் நீமைக்கப்பால் கடந்துகிறான். | 778 |
| 450. | **அக்கினி வைசுவா நரன்:** வைசுவா நரனை எவன் என என்னால் கூற இயலாது. | 779 |
| 451. | **அக்கினி:** பகைவர்களைச் சிதறடிக்கவும். | 781 |
| 452. | **அக்கினி:** பகைவனைப்போல் பாபத்தை வெல்லுவோமாக. | 782 |
| 453. | **அக்கினி:** நிந்தனையிலிருந்து நீங்குங்கள். | 783 |
| 454. | **அக்கினி:** அக்கினியைப் போற்றுபவன் செழிக்கிறான். | 784 |
| 455. | **அக்கினி:** அக்கினி பேரறிஞன். | 786 |
| 456. | **அக்கினி:** காத்தியால் எங்களைக் கூர்மைப் படுத்தவும். | 787 |
| 457. | **அக்கினி:** அதர்வன் அக்கினியைப் பிறப்பித் தான். | 790 |
| 458. | **இந்திரன்:** தேவர்கள் இந்திரனைப் போரிலே முதல்வனாய் நியமித்தார்கள். | 796 |


Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 459. | **இந்திரன்:** இந்திரனுக்குப் பிரதிநிதியில்லை. | 798 |
| 460. | **இந்திரன்:** கர்வமுள்ளவனைத் தாழ்த்தவும். | 801 |
| 461. | **இந்திரன்:** இந்திரன் விஷ்ணுவோடு சேர்ந்து அஹியைக் கொன்றான். | 804 |
| 462. | **இந்திரன்:** இந்திரன் எங்கே இருக்கிறான்? | 806 |
| 463. | **இந்திரன்:** இந்திரனே மனிதர்களால் அழைக்கத் தகுந்தவன். | 808 |
| 464. | **இந்திரன்:** இந்திரன் போற்றுபவனிடம் பரா முகமாயிரான். | 810 |
| 465. | **இந்திரன்:** இந்திரன் நன்மையையும் புன்மை யையும் செய்கிறான். | 812 |
| 466. | **இந்திரன்:** நடுங்கும் சனங்களைப் பாலிக்கவும். | 814 |
| 467. | **இந்திரன்:** இந்திரன் அழிப்பான்; பாலிப்பான். | 816 |
| 468. | **இந்திரன்:** இந்திரனுடைய வீரச் செயல்கள் கூறப்படுகின்றன. | 817 |
| 469. | **பக்கன்:** நான் இந்திரனை மனத்தாலும் இருதயத்தாலும் விரும்புகிறேன். | 819 |
| 470. | **இந்திரன்:** இந்திரனுடைய பலத்துக்கு எல்லை யில்லை. | 820 |
| 471. | **இந்திரன்:** இந்திரனுக்குச் சமமாகவோ மேலாகவோ எவனுமில்லை. | 821 |
| 472. | **இந்திரன்:** மகத்தான போருக்குப் பயங்கர மான தேரிலே ஏறவும். | 822 |
| 473. | **இந்திரன்:** இந்திரன் கவிகளுக்காக சோதி யையும் புவியையும் புலப்படுத்தினான். | 823 |
| 474. | **இந்திரன்:** நீ ஆரியர்களையும் தாஸர்களையும் அழித்தாய். | 824 |


hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 475. | **இந்திரன்:** நாங்கள் இந்திரனோடு இணைந்திருக்கிறோம். | 825 |
| 476. | **இந்திரன்:** செல்வத்தை எப்பொழுது அளிப்பாய்? | 826 |
| 477. | **இந்திரன்:** உன் எக்களிப்பால் தோன்றுபவை. | 827 |
| 478. | **இந்திரன்:** இந்திரன் ஊக்கப்படுத்துகிறான். | 828 |
| 479. | **இந்திரன்:** இரவும், பகலும், மாஸங்களும் இந்திரனைப் போற்றுகின்றன. | 829 |
| 480. | **இந்திரன்:** இந்திரன் புத ஒலிகளோடு உஷைகளிலே பரவுகிறான். | 830 |
| 481. | **இந்திரன்:** நான் மனத்தோடு இந்திரனைப் போற்றுகிறேன். | 831 |
| 482. | **இந்திரன்:** இந்திரனே அனைவரையும் நடத்துகிறான். | 832 |
| 483. | **இந்திரன்:** இந்திரன் எல்லாப் பொருள்களையும் மறிகிறான். | 833 |
| 484. | **இந்திரன்:** ஆற்றலை அளிக்கும் ஸோமரஸ மளிக்கப்படுகிறது. | 833 |
| 485. | **இந்திரன்:** சூரியனுக்கும் உஷைகளுக்கும் திருமணம். | 834 |
| 486. | **இந்திரன்:** இந்திரன் பிரம்மனையிருக்கிறான். | 838 |
| 487. | **இந்திரன்:** போரிலே பாலனமாக இந்திரனைப் போற்றவும். | 842 |
| 488. | **பலதேவர்கள்:** இந்திரனுடைய செயல்கள் மர்மமானவை. | 844 |
| 489. | **அக்கினியும் பலதேவர்களும்:** ஒரு தடவை சோதி பிறப்பிக்கப்பட்டது. | 850 |


Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 490. | **விசுவே தேவர்கள்:** உலகத்தின் தந்தையான உருத்திரனைப் போற்றவும். | 853 |
| 491. | **விசுவே தேவர்கள்:** விசுவே தேவர்கள் போற்றப் படுகிறார்கள். | 856 |
| 492. | **விசுவே தேவர்கள்:** வணக்கம் சோதியையும் புவியையும் ஏந்துகிறது. | 859 |
| 493. | **விசுவே தேவர்கள்:** பாலனத்துக்கு விசுவே தேவர்கள். | 862 |
| 494. | **பூஷா:** பூஷா கருமியின் இருதயத்தைக் குத்துகிறான். | 865 |
| 495. | **பூஷா:** பூஷாவின் சக்கரம் அழிக்காது. | 866 |
| 496. | **பூஷா:** பூஷா செல்வங்களின் பிரவாகமாயிருக்கிறான். | 867 |
| 497. | **பூஷா:** பூஷா சூரியனுக்காகத் தன் நங்கச் சக்கரத்தைப் பிரேரிக்கிறான். | 868 |
| 498. | **இந்திரனும் பூஷாவும்:** ஆடுகள் பூஷாவை ஏந்தினால் குதிரைகள் இந்திரனே ஏந்துகின்றன. | 869 |
| 499. | **பூஷா:** பூஷா சூரியனுடைய தூதனையிருக்கிறான். | 870 |
| 500. | **இந்திராக்கினிகள்:** இந்திராக்கினிகளுடைய தாய் எங்குமிருக்கிறாள். | 870 |
| 501. | **இந்திராக்கினிகள்:** இந்திராக்கினிகள் பகைவர்களை அழிக்கிறார்கள். | 872 |
| 502. | **ஸரஸ்வதி:** பொன் தேரிலே செல்லும் ஸரஸ்வதி பகைவர்களை அழிக்கிறாள். | 874 |
| 503. | **அசுவினிகள்:** பிரகஸ்பதி கூறும் அசுவினிகளின் மகிமை. | 876 |
| 504. | **அசுவினிகள்:** சூரியனுடைய புதல்வி அசுவினிகளின் தேரிலே ஏறுகிறாள். | 878 |


hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com




| சூக்தம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 505. | **உஷை:** உஷை வீரனைப் போல் இருளை விலக்குகிறாள். | 880 |
| 506. | **உஷை:** அங்கிரஸர்கள் உஷையின் உதவியால் பசுக்களை மீட்டார்கள். | 881 |
| 507. | **மருத்துக்கள்:** மருத்துக்கள் மனிதர்களுடைய இருதயங்களில் இருக்கிறார்கள். | 883 |
| 508. | **மித்திரா வருணர்கள்:** மித்திரா வருணர்கள் உழைத்து சீவிக்கும் மனிதர்களைப் பாலிக்கிறார்கள். | 885 |
| 509. | **இந்திரா வருணர்கள்:** இந்திரா வருணர்கள் பகைவர்களை சத்தியத்தால் பாலிப்பவர்கள். | 887 |
| 510. | **இந்திரா விஷ்ணுக்கள்:** இந்திரா விஷ்ணுக்கள் நாம் வாழ உலகத்தைச் செய்தார்கள். | 889 |
| 511. | **சோதியும் புவியும்:** சோதி புவிகள் சலத்தோடு சேர்ந்திருக்கிறார்கள். | 890 |
| 512. | **ஸவிதா:** ஸவிதா தன் பொன் கைகளை நாவலனைப் போல் நீட்டுவாளாக. | 892 |
| 513. | **இந்திரனும் சோமனும்:** இந்திரா சோமர்கள் சோமனை உயர்த்தினார்கள். | 893 |
| 514. | **பிரகஸ்பதி:** பிரகஸ்பதி பகைவர்களுடைய கோட்டைகளை இடிக்கிறான். | 894 |
| 515. | **சோமனும் உருத்திரனும்:** எங்களை வருணனுடைய பாசங்களிலிருந்து விலக்குங்கள். | 894 |
| 516. | **போர்ப் படைகள்:** போர் வீரர்களும் போர்க் கருவிகளும் போர் முழக்கங்களும் போற்றப் படுகின்றன. | 895 |


Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com

hariram1by9@gmail.com

# இருக்கு - வேதம்

★

## முதலாவது மண்டலம்

### 1. அக்கினி

#### 1. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. நான், புரோகிதனும், யக்ஞத்தின் தேவனும், இரத்தினமளிப்பவனும், ஹோதாவுமான அக்கினியைப் போற்றுகிறேன்.

2. பழைய ரிஷிகளாலும், புதிய – ரிஷிகளாலும் போற்றத் தகுந்தவனுமான அவன் இங்கு தேவர்களை ஏந்தி வருவானாக.

3. அக்கினியைத் தினந்தோறும் வழிபடுபவன் செழிப்பதும், சிறப்புள்ளதும், மக்களைப் பெருக்குவதுமான செல்வத்தைப் பெறுகிறான்.

4. அக்கினியே! உன்னால் எங்கும் பரத்தப்படும் இன்னலாகாத யக்ஞமானது தேவர்களிடஞ் செல்லுகிறது.

5. ஹோதாவும், அறிஞனும், செயலாளனும், சத்தியனும், மிக்கப் புகழுள்ளவனும், தேவனுமான அக்கினி தேவர்களோடு இங்கு வருவானாக.

6. அக்கினியே! அங்கிரஸனே! அளிப்பவனுக்கு உன்னால் செய்யப்படும் நலமெல்லாம் உனக்கே நிச்சயமாகத் திரும்பும்.

7. அக்கினியே! நாங்கள் தினந்தோறும் இரவிலும் பகலிலும் மனத்தில் வணக்கஞ் செய்பவர்களாய் உன்னிடம் வருகிறோம்.

vedicfastro.blogspot.com



8. நாங்கள், துலங்குபவனும், யக்ஞங்களைப் பாலிப்பவனும், ஸத்தியத்தைச் சதா துலக்குபவனும், உன்னுடைய சொந்த இடத்திலே வளர்பவனுமான உன்னிடம் வருகிறோம்.

9. அக்கினியே! நாங்கள் உன்னிடம் சுலபமாய் வரமகனிடம் தந்தைபோல் இருக்கவும்: எங்களுடைய நன்மைக்காக எங்களிடம் எப்பொழுதும் நிலைக்கவும். 9

## 2. வாயு

### 2. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. அழகுள்ளவாயுவே! நீ வா: உனக்காக இந்த ஸோமங்கள் - பிழியப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பருகவும்; எங்களுடைய அழைப்பைக் கேட்கவும்.

2. வாயுவே! உன்னைத் தொழுபவர்கள், ஸோமத்தைப் பொழிந்து, உரிய காலத்தை அறிந்து உன்னை மொழிகளால் ஏத்துகிறார்கள்.

3. வாயுவே! உன்னுடைய அனுகூலமான மொழி - அவியளிப்பவனுக்கும், ஸோம ரஸத்தைப் பருக உன்னை யழைக்கும் - மற்றவர்களான பலருக்கும் - தோன்றுகிறது'

4. இந்திரனே! வாயுவே! உங்களுக்கு இச் ஸோமங்கள் பொழியப்பட்டிருக்கின்றன. உணவோடு, இங்கு எங்களிடம் வாருங்கள்: ஸோமபானங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

5. யக்ஞத்தில் வசிக்கும் இந்திர வாயுக்களே! பொழிந்துள்ள இவற்றை நீங்கள் அறிகிறீர்கள். இங்கு துரிதமாய் வாருங்கள். 14.

6. வாயுவே! இந்திரனே! நீங்கள் பொழியப்படுபவனுடைய யக்ஞத்துக்கு வாருங்கள்: நரர்களே! இங்ஙனம் உங்கள் வருகையால், செயலால், யக்ஞம் பூர்த்தியாகிறது.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



7. நான் சுத்த பலமுள்ள மித்திரனையும், பகையழிக்கும் வருணனையும் அழைக்கிறேன்: நான் புவியின் மீது ஸத்தையளிக்க வல்ல செயலை நடத்தும் இவ்விருவர்களையும் அழைக்கிறேன்.

8. மித்திரா வருணர்களே! ருதத்தை வளர்ப்பவர்களும், ருதத்தை அளிப்பவர்களுமான நீங்கள், இந்த யக்ஞத்தை சத்தியமான பயனோடு சேர்க்கிறீர்கள்.

9. அறிஞர்களான மித்திராவருணர்களே! எங்களுடைய யக்ஞத்தைச் செம்மைப்படுத்துவீர்களாக. பலத்தையும் பாலிப்பீர்களாக. நீங்கள் பலருடைய நன்மைக்காகத் தோன்றுகிறீர்கள்: நீங்கள் பல மக்களுக்குச் சரணமளிக்கிறீர்கள். 18.

## 3. அசுவினிகள்

### 3. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. அசுவினிகளே! தூய செயல்களைப் பாவிப்பவர்களும், நீண்ட கைகளுமுள்ள நீங்கள் யக்ஞ உணவுகளை நீட்டிய கைகளால் பெற்றுங்கொள்ளுங்கள்.

2 அசுவினிகளே! பல செயல்கள் உள்ளவர்களும், தலைவர்களும், அறிஞர்களுமான நீங்கள், தடைபடாத மனத்தோடு எங்கள் மொழிகளைச் செவியுறுங்கள்.

3. அசுவினிகளே! பொய்யற்றவர்களும், பகையழிப்பவர்களும், வீரர்களின் முகப்பிலிருக்கும் தலைவர்களுமான நீங்கள், சீர்பட்ட தர்ப்பையின் மீது தெளிக்கப்பட்ட ஸோமங்களுக்கு வாருங்கள்.

#### இந்திரன்

4. இந்திரனே! சித்திரபலனுவே! இங்கு வா: விரல்களால் பிழியப்பட்டவையும், எப்பொழுதும் சுத்தமாயிருப்பவையுமான இந்த ஸோமங்கள் உன்னை விரும்புகின்றன.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5. இந்திரனே! அறிவால் அறியப்படுபவனும், விப்பிரனுல் பிரேரிக்கப்படுபவனுமான நீ, ஸோமத்தை யளிக்கும் அறிஞனே அணுகி அவனுடைய மொழிகளை ஏற்றுக்கொள்ளவும். 29.

6. குதிரைகளுள்ள இந்திரனே! நீ வேத மொழி களை ஏற்க வா; இந்த யக்ஞத்திலே எங்கள் அவியைப் பெற்றுக்கொள்.

### விசுவேதேவர்கள்

7. விசுவேதேவர்களே! மானிடர்களை ஏந்துபவர் களும், தாங்குபவர்களுமான நீங்கள், வழிபடுபவனுடைய ஸோமத்துக்கு வாருங்கள்.

8. மழையைப் பொழிபவர்களும், துரிதமாய்ச் செல்பவர்களுமான விசுவேதேவர்கள், ஸோமத்துக்கு தினங்களை நோக்கிச் செல்லும் சூரியனுடைய கதிர்கள் போல் வருவார்களாக.

9. அழிவில்லாதவர்களும், அகண்ட அறிவுள்ளவர் களும், துரோகமற்றவர்களும், தாங்குபவர்களுமான விசுவேதேவர்கள், யக்ஞத்தைப் பற்றுவார்களாக.

### ஸரஸ்வதி

10. சுத்தஞ் செய்பவளும், சக்தியையளிப்பவளும், செல்வத்தைத் தருபவளுமான ஸரஸ்வதி, எங்கள் யக் ஞத்திலே, அளிக்கப்படும் அவிகளை விரும்புவாளாக.

11. ஸத்தியத்தில் இன்புறுபவர்களை ஊக்கப்படுத்து பவளும், உண்மையான மனமுள்ளவர்களைக் கற்பிப்ப வளுமான ஸரஸ்வதி, எங்கள் யக்ஞத்தை ஏற்றுள்.

12. ஸரஸ்வதி தன் செயல்களால் மகத்தான நதி யைப் புலப்படுத்துகிறாள்: தன் சொந்த வடிவத்திலே எல்லா ஞானங்களையும் ஒளிப்படுத்துகிறாள். 30

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 4. இந்திரன்

### 4. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. நல்ல செயல்களை நடத்தும் இந்திரனை நாங்கள் பாலனத்துக்காக, கறப்பதற்காகப் பசுவை அழைப்பது போல் அழைக்கிறோம்.

2. ஸோமபானஞ் செய்பவனே எங்கள் யக்ஞங் களுக்கு வா: ஸோமத்தைப் பருகு: செல்வங்களைத் தரும் உன் திருப்தி பசக்களையளிக்கிறது.

3. நாங்கள், உன்னருகிலிருக்கும் நல்ல அறிஞர் களின் நடுவே உன்னைத் தெரிந்து கொள்கிறோம். எங்களிடம் வா: மற்றவர்களுக்கு உன்னைப் புலப்படுத்த எங்களைப் புறக்கணித்துச் செல்லாதே.

4. வழிபடுபவனே! உன் நண்பர்களுக்கு உத்தமப் பொருள்களையளிப்பவனும், அறிஞனும், இன்னலற்றவனு மான இந்திரனிடஞ் செல்லவும்: துதிப்பவனின் ஆற்றல் தன்மையை - அவனிடம் வினவாதே!

5. அவனைப் போற்றும் எங்களுடைய யித்விஜர்கள் — 'நிந்திப்பவர்களே' இங்கிருந்தும் அவன் போற்றப் படும் எந்த இடத்திலிருந்தும் சென்று விடுங்கள் எனக் கூறுவார்களாக. 35

6. பகையழிப்பவனே! எங்கள் பகைவர்கள் நாங்கள் செழிக்கிறோம் எனச் சொல்வார்களாக: நண் பர்கள் எங்களை வாழ்த்துவார்களாக: நாங்கள் இந்திர னுடைய ஆதரவில் தோன்றும் நலத்தில் எப்பொழுதும் இருப்போமாக.

7. பரந்துள்ளவனான இந்திரனுக்கு, மூன்று யக்ஞங் களில் இருப்பதும், யக்ஞத்தின் செல்வமும், மானிடர் களை இன்புறுத்துவதும், யாகத்தைப் பூர்த்தி செய்வதும், அளிப்பவனுக்கு இன்பத்தைத் தருபவனுல் விரும்பப் படுவதுமான ஸோம ரஸத்தை அளிக்கவும்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



8. சதக்கிரதுவே! நீ இந்த ஸோம ரஸத்தைப் பருகி இந்திரனைக் கொல்பவனுனுய்: நீ போரிலே வீரனைப் பாலிக்கிறுய்.

9. இந்திரனே! சதக்கிரதுவே! போரிலே வலியனுன உனக்கு, நாங்கள் செல்வத்தைப் பெற அவியை அளிக்கிறேம்.

10. மகானும், நல்ல செயல்களை நிறைவேற்றுபவனும், பொழிபவனின் நண்பனும், செல்வத்தைப் பாலிப்பவனுமான இந்திரனைப் பாடவும். 40

## 5. இந்திரன்

### 5. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. நண்பர்களே! தோத்திரங்களைக் கூறும் நீங்கள் இங்கு வாருங்கள்; உட்காருங்கள்; இந்திரனைப் பாடுங்கள்.

2. பல செல்வங்களைப் பொழிபவனும், பகைவர் களையழிப்பவனுமான இந்திரனை ஸோமம் பிழியப் படுங்கால் போற்றுங்கள்.

3. இந்திரன் எங்களுடைய காரிய சித்திக்குத் தோன்றுக - செல்வம் பற்றுவதற்குத் தோன்றுக - அறிவைப் பற்றுவதற்குத் தோன்றுக-அவன் உணவோடு எங்களிடம் வருக.

4. போர்களிலே இந்திரன் நேரிலே தன் குதிரைகளை இணைப்பதற்கு முன்பே பகைவர்கள் ஓடுகிறார்கள்: அவனைப் பாடுங்கள்.

5. ஸோமத்தைப் பருகுபவனின் திருப்திக்காக தயிரோடு கலக்கப்பட்டுள்ள இந்த சுத்தமான ரஸங்கள் ஊற்றப்படுகின்றன. 45



6. இந்திரனே! நற்செயல்களை நடத்தும் தலைமைத் தன்மையைத் தாங்கவும், ஸோமத்தைப் பருகவும் நீ வலிமையோடு உடனே வளர்ந்தாய்.

7. துதியாருகனுன இந்திரனே! இந்தப் பரவும் ஸோமங்கள் உன்னுள் நுழைக: நீ பேரறிவைப்பெற அவை உன்னை சுகப்படுத்துக.

8. சதக்கிரதுவே! ஸாமகானங்கள் உன்னை மேம்படுத்தின: இருக்குக்கள் உன்னை மேம்படுத்தின: எங்கள் துதிகள் உன்னை மேம்படுத்துக.

9. தடைபடாத பாலகனுன இந்திரன் எல்லா ஆண்மைத் தன்மைகள் இருக்கும் இந்தப் பலவித யக்ஞச் செல்வங்களை அனுபவிப்பானுக.

10. துதியாருகனுன இந்திரனே! எங்கள் தேகங்களை மனிதர்கள் துன்புறுத்தாமலிருப்பார்களாக: ஈசனுன நீ இம்மையை விலக்கவும். 50

## 6. இந்திரன்

### 6. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. இவ்வுலகங்களிலுள்ள அனைவரும்-இந்திரனுடைய மகத்தான சூரியனையும், அழியாத அக்கினியையும், சலனமாடுங்காற்றையும், சோதியில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களையும் இணைக்கிறார்கள்.

2. தேர்ப்பாகர்கள் அவனுடைய தேரின் இரு பக்கங்களிலும், விரும்பத்தகுந்தவையும், நரர் ஏந்துபவையும், ஊக்கமுள்ளவையுமான இரு சிகப்பான குதிரைகளைச் சேர்க்கிறார்கள்.

3. மானிடர்களே! தினந்தோறும் புலனற்றவர்களுக்குப் புலன்களையும், உருவற்றவர்களுக்கு உருவங்களையும் தன் கதிர்களால் அளிக்கும் இந்திரனுல் உங்களுடைய பிறப்பு ஒவ்வொரு தினத்திலும் சாத்தியமாகிறது.

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



### மருத்துக்களும் இந்திரனும்

4. யக்ஞாருகர்களான மருத்துக்கள், தோற்று விக்கப்படும் மழையைப் பார்த்து - இந்திரன் - மேகங் களிலே கருத்தன்னையைத் தொடங்க அவனை ஊக்கப் படுத்தினர்கள்.

5. இந்திரனை நீ, திடப் பொருள்களைத் தகர்ப்பவர் களும், தாங்குபவர்களுமான மருத்துக்களோடு சேர்ந்து, குகையினுள் மறைக்கப்பட்டிருந்த பசுக்களைக் கண்டு பிடித்தாய். 55

6. தேவர்களைத் தொழும் ஸ்தோதாக்கள், புகழ் பெற்றவர்களும், செல்வம் தரும் தங்கள் திறத்தை யறிபவர்களுமான மருத்துக்களின் கணத்தை இந்திரனைத் தொழுவதுபோல் தொழுகிறார்கள்.

7. மருத்துக்களே! நீங்களும், இந்திரனும் ஸமமான சோதியுள்ளவர்கள்: இன்புறுபவர்கள்: நீங்கள் அச்ச மற்ற இந்திரனோடு எங்களுக்குத் தோன்றுவீர்களாக.

8. குற்றமற்றவர்களும், விரும்பத்தருந்தவர்களும், சோதி செல்லுபவர்களுமான மருத்துக்களோடுள்ள, ஆற்றலுள்ள, இந்திரனைப் போற்ற இந்த யக்ஞம் செய்யப்படுகின்றது.

9. நீங்கள் வானிலிருந்தோ, சோதியிலிருந்தோ இங்கு வாருங்கள்: ஏனெனில், இந்த யக்ஞத்திலே-அறிஞன்-உங்கள் துதிகளை நன்கு கூறுகிறான்.

10. இந்தப் புவியிலிருந்தோ, மேலிருக்கும் சோதியி லிருந்தோ அல்லது பரந்த வானிலிருந்தோ வந்து எங்களுக்குச் செல்வத்தையளிக்க நாங்கள் இந்திரனை அழைக்கிறோம். 60

## 7. இந்திரன்

### 7. மதுச்சந்தஸ வைகுவாமித்திரன்

1. கர்யகர்கள் ஸாமகானங்களாலும், ஹோதாக்கள் ரிக்குக்களாலும், அத்வர்யுக்கள் மந்திரங்களாலும் இந்திரனையே போற்றுகிறார்கள்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



2. எல்லாப் பொருள்களையும் பொருந்தச் செய்யும் இந்திரன் மொழியால் இணையும் குதிரைகளோடு வருகிறான்: பொன்மய எழிலுள்ள இந்திரன் வச்சிராயுத மேந்துகிறான்.

3. இந்திரன் எல்லாப் பொருள்களும் புலனாக சூரியனை வானிலே உயர்த்தினான். கதிர்களால் மலையை ஒளிப்படுத்தினான்.

4. இந்திரனே! உக்கிரனான நீ ஆயிரஞ் செல்வங் களிருக்கும் உக்கிரப் போரிலே உன்னுடைய உக்கிர பாலனங்களால் எங்களைப் பாலிக்கவும்.

5. நாங்கள் அற்ப செல்வத்துக்கும், அகண்ட செல்வத்துக்கும் வச்சிராயுதத்தை விருத்திரன் மீது வீசுப வனும், எங்கள் நண்பனுமான இந்திரனை அழைக்கிறோம் 65.

6. விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்பவனும், மழை பொழிபவனுமான நீ இந்த மேகத்தைத் திறக்க வும். நீ எங்கள் விருப்பங்களுக்கு-எப்பொழுதும் மறுத் துரைக்காதவன்.

7. வேறு தேவர்களுக்குக் கூறப்படும் உத்தமத் துதிகள் எல்லாம் இந்திரனுக்குரியவை: நான் இந்திர னுக்கேற்ற துதியை யறியவில்லை.

8. வர்ஷிப்பவனும், தீரத்தால் தலைவனும், மறுத் துரைக்காதவனுமான இந்திரன், பசுக்களின் மந்தையைக் காக்கும் காளைபோல் மானிடர்களைத் தன் திறத்தால் பாலிக்கிறான்.

9. ஏகனான இந்திரன், மனிதர்களையும், செல்வங் களையும், புவியின் மீதுள்ள பஞ்ச சனங்களையும் அரசு புரிகிறான்.

10. நாங்கள் உங்களுக்காக மனிதர்களின் நடுவே எங்கும் இருக்கும் இந்திரனை அழைக்கிறோம்: அவன் எங்களுக்கே தனியனாக. 70

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


## 8. இந்திரன்

### 8. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. இந்திரனே! போற்றத் தகுந்ததும், ஜெயத்தின் மூலமாயிருப்பதும், பகைவர்களைத் தாழ்த்துவதுமான திரண்ட செல்வத்தை எங்களுக்களிக்கவும்.

2. நாங்கள் ஸநாதனமாகி கைகலந்த போரிலோ, குதிரை மீது செய்யப்படும் சண்டையிலோ, அச்செல்வத்தால் பகைவர்களை ஜயிப்போமாக.

3. இந்திரனே! உன்னுல் பாலனமாகி, எங்கள் பகைவர்களை முற்றும் ஜயிக்க நாங்கள் கனத்த ஆயுதத்தை ஏந்துகிறோம்.

4. இந்திரனே! உன்னை நண்பனுகவுள்ள நாங்கள், சரம் எய்யும் சூரர்களோடு அணிவகுத்து வரும் படைகளை ஜயிக்கும் திறமுள்ளவர்களாகிறோம்.

5. இந்திரன் மகான்; அவன் மேலானவன்: வச்சிராயுதனுக்கு ஸதா மகிமை தோன்றுக. அவனுடைய வலிய படைகள், சோதிகள் சதா பரந்திருக்க. 75

6. அறிவை விரும்பும் மேதாவிகளும், சந்தானத்தைப் பெற நினைப்பவர்களும், களத்திலே ஜயிக்க எண்ணுபவர்களும் இந்திரனை நாடி விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள்.

7. ஸோமத்தைப் பருகி இந்திரனுடைய வயிறு கடல்போல் பரவுகிறது: அது மிகுந்த நீர் உள்ள மேல் வாய்போல் ஈரமாயிருக்கிறது.

8. தொழுபவனுக்கு இந்திரனுடைய மொழிகள் சத்தியமாகின்றன; அவை பல விதத நலமளிப்பவை; பசுக்களைத் தருகின்றன; மதிப்புக்குரியவை: பழுத்த கனிகளைத் தாங்கும் மரக்கிளைகள் போல் இருக்கின்றன.

9. இந்திரனே! உன்னுடைய செல்வங்கள் என் போல் உள்ள ஒவ்வொரு ஸ்தோதாவையும் பாலிப்பவை

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com


10. இந்திரன் ஸோமத்தைப் பருக விரும்பத்தகுந்தவையும், துதிக்கத் தகுந்தவையுமான ஸ்தோமமும் தோத்திரமும் கூறப்படுக. 80

## 9. இந்திரன்

### 9. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. இந்திரனே! வா: எல்லா ஸோமங்களோடும் இன்புறவும்: பிறகு வீரத்தில் வலியனுகி பகைவர்களை ஜயிப்பவனுகவும்.

2. ஸோமம் பிழியப்பட்டுள்ளது. ஊக்கமளிப்பதும், உற்சாகந் தருவதுமான இந்த ஸோமத்தை-இன்புறுபவனும், எல்லாச் செயல்களை நடத்துபவனுமான இந்திரனுக்கு அளியுங்கள்.

3. இந்திரனே! சுத்தமோ வாயுள்ளவனே! நீ இன்புறுத்தும் ஸோமங்களோடு இன்பமாகவும், எல்லா மனிதர்களாலும் போற்றத் தகுந்த நீ, தேவர்களோடு இந்த யக்ஞத்துக்கு வா.

4. நான், பொழிபவனும் பாலிப்பனுமான உனக்கு நீ விரும்புவதும் உன்னிடம் அணுகுவதுமான ஸ்தோமத்தைக் கூறியுள்ளேன்.

5. இந்திரனே! போதுமான செல்வமும் அதற்கதிகமாகவும் உன்னிடமிருக்கின்றன: பலவிதமான அருமையான செல்வங்களை எங்கள் முன் நிலைப்படுத்தவும். 85

6. செல்வனுன இந்திரனே! எங்களிடம் முயற்சியுண்டு, சிறப்புண்டு: செல்வத்தைப் பெற எங்களை இந்த யக்ஞத்திலே ஊக்கப்படுத்தவும்.

7. இந்திரனே! பசுக்கள் இருப்பதும், உணவுள்ளதும், பூரணுயுசுள்ளதும், தேயாததும், அளவுக்கோ எண்ணிக்கைக்கோ அதிகமாயிருப்பதுமான செல்வத்தை எங்களுக்களிக்கவும்.



hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


8. இந்திரனே! சகடங்களில் ஏந்தி வரப்படும் உணவுகளையும், ஆயிரம் வழிகளால் வரும் பெரிய புகழையும், பொருளையும் எங்களுக்களிக்கவும்.

9 நாங்கள் எங்களுடைய செல்வம் பாலனமாக, செல்வ பதியும், இருக்குக்களின் இலக்கும் யக்ஞஸ்தானத்துக்கு வருபவனுமான இந்திரனே எங்களுடைய துதிகளால் துதித்துக் கொண்டு அழைக்கிறோம்.

10. அடிக்கடி பிழியப்படும் சோமங்களோடு யக்ஞகர்த்தா, மிக்க வலியனும் நித்திய நிலயத்தில் வசிப்பவனுமான இந்திரனின் மகத்தான பராக்கிரமத்தைப் போற்றுகிறுன். 90

## 10. இந்திரன்

### 10. மதுச்சந்தஸ வைசுவாமித்திரன்

1. உத்காதாக்கள் உன்னைப் பாடுகிறார்கள்: ஹோதாக்கள் துதியா ருதமான உன்னைப் போற்றுகிறார்கள்: அறிஞன் உன்னை மூங்கில் கம்பைப் போல் உயர்த்துகிறுன்.

2. பொழிபவனுன இந்திரன் மலியின் உச்சிகளிலே சேர்ந்த சோம ஒளஷதியோடு பலவணக்கச் செயல்களை செய்துள்ள தொழுபவனின் நோக்கத்தை அறிகிறுன்: இந்திரன் அவனிடம் மருத்துக்களின் கணத்தோடு வருகிறுன்.

3. சோமபானஞ் செய்யும் இந்திரனே! நீண்ட பிடரிகேசமுள்ளவையும், வலியவையும், புஷ்டாங்க முள்ளவையுமான குதிரைகளை இணைத்து எங்களுடைய துதிகளைச் செவியுற அருகில் வா.

4. வசுவே! வா: ஸ்தோமங்களுக்குப் பதிலளிக்கவும்: துதிகளுக்கு விடையுரை இசைக்கவும்: இந்திரா! எங்கள் யக்ஞத்தையும் பிரம்மத்தையும் வளர்க்கவும்.

5. சக்கரன், எங்கள் புதல்வர்களிடமும் நண்பர்களிடமும் பிரியமுடன் பேச, பல பகைவர்களை அழிக்கும்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com


இந்திரனுக்குச் செழிப்பிக்கும் ஸ்தோத்திரம் கூறத் தருந்தது. 95

6. நாங்கள் நட்புக்காகவும், செல்வத்துக்காகவும், மிக்க ஆற்றலுக்காகவும் இந்திரனைப் பற்றுகிறோம். ஏனெனில், வலியனுன இந்திரன் எங்களுக்குச் செல்வத்தைத் தந்து, எங்களைப் பாலிக்கும் திறமுள்ளவனுயிருக்கிறுன்.

7. இந்திரனே! உன்னுல் உணவு எங்கும் செழிக்கிறது: பெறுவதர்க்குச் சுலபமாகிறது: சுத்தமாயிருக்கிறது: வச்சிராயுதனே! மேயும் நிலங்களைத் திறந்து விடவும்: செல்வத்தையளிக்கவும்.

8. நீ உன் பகைவர்களைக் கொல்லுங்கால், சோதியும், புவியும் உன்னைத் தாங்க இயலவில்லை: நீ சோதியின் சலங்களைப் பிரேரிக்கவும்: பசுக்களைத் தாராளமாயளிக்கவும்.

9. அனைத்தையும் செவியுறுபவனே! என் அழைப்புக்குத் துரிதமாய்ச் செவிகொடுக்கவும்: இந்திரனே! என் மொழியை உன் உள்ளத்துள் தாங்கவும்: என்னுடைய இந்த ஸ்தோமத்தை நண்பனின் மொழிகளைப் போல் அருகில் வைத்துக்கொள்ளவும்.

10. நாங்கள், பொழிபவனும், போர்களிலே எங்களைச் செவியுறுபவனுமான உன்னை அறிகிறோம்: நாங்கள் ஆயிரஞ்செல்வம் தரும் உன் ஆதரவுகளை விரும்புகிறோம். 100

11. இந்திரனே! ருசிகனின் மகனே! துரிதமாய் வரவும்: இன்பமாகி சோமத்தைப் பருகவும்: துதியாருகமான ஆயுளை நீட்டவும்: ரிஷியான என்னை ஆயிரங் கலைகளுள்ளவனுகச் செய்யவும்.

12. துதியாருகனே! எங்களுடைய இந்தத் துதிகள் உன்னை எப்பொழுதும் சூழ்க: நீடுழி வாழும் உன் ஆற்றலை இவை வளர்க்க: உனக்கு அனுகூலமாகும் இவை எங்களை இன்புறுத்துக. 102

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 11. இந்திரன்

### 11. ஜேதா மாதுச் சந்தஸன்

1. எங்களுடைய எல்லாத்துதிகளும், கடலைப் போல் பரந்தவனும், தேர்ப்போர் செய்யும் வீரர்களின் நடுவே மிக்க தீரனும், உணவின் பதியும், சான்றோர்களைப் பாலிப்பவனுமான இந்திரனை மேம்படுத்துகின்றன.

2. இந்திரனே! வலிமையைத் தாங்கும் உன்னுடைய நட்பால் நாங்கள் ஆதரவாகி பயமன்னியிலிருக்கிறோம்: நாங்கள் ஜயிப்பவனும் ஜயிக்கப்படாதவனுமான உன்னைப் போற்றுகிறோம்.

3. இந்திரன் தன் பழைய நித்திய செல்வதானங்களையும், பாலனங்களையும், துதிக் கருத்தாக்களுக்குப் பசுக்களையும், உணவுகளையும், பொருள்களையுங் கொடுப்பவனுக்குத் தவறுமல் தருகிறன்.

4. புரங்களைப் புடைப்பவனும், எப்பொழுதும் இளைஞனும், கவியும், வரம்பில்லாத வலியனும், எல்லாச் செயல்களைப் புட்டிப்படுத்துபவனும், வச்சிராயுதனும், புருஸ்துதனுமான இந்திரன், பிறந்தான்.

5. வச்சிராயுதத்தை ஏந்தும் நீ, பசுக்களை மறைத்து வைத்திருந்த வலனின் குகையைத் திறந்தாய்: அவனுல் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் உன்னுடைய நட்பைப் பெற்றவுடன் அச்சமகன்றார்கள். 107

6. சூரனே! நான் இந்த ஸோமத்தை யளிக்குங்கால் உன் தானத்தைப் புகழ்ந்து, உன் செல்வங்களை விரும்பி, மீண்டும் உன்னிடம் வருகிறேன். யக்ஞகர்த்தாக்கள் உன் தானத்தை அறிவதால் துதியாருகனை உன்னிடம் வருகிறார்கள்.

7. இந்திரனே! நீ மாயாவியான சுஷ்ணனை மாயைகளால் கொன்றாய். மேதாவிகள் உன்னுடைய இந்த மகிமையை அறிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மிக்க உணவை யளிக்கவும்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



8. தோத்திரிப்பவர்கள் தங்களின் எல்லாத்திறங்களோடும் ஆயிரங்களும் இன்னும் அதிகமாய் தானமளிப்பவனும் உலகத்தின் தலைவனுமான இந்திரனை ஏற்றுகிறார்கள். 110

## 12. அக்கினி

### 12. மேதாதிதி-காண்வன்

1. நாங்கள், ஹோதாவும், விசுவஞ் செல்பவனும், இந்த யக்ஞத்தைப் பூர்த்தி செய்பவனும் தேவர்களின் தூதனுமான அக்கினியை வலிக்கிறோம்.

2. யக்ஞஞ் செய்பவர்கள், தங்கள் அவிகளோடு பிரஜாபாலகனும், அவிகளை வகிப்பவனும், பலரால் விரும்பப்படுபவனுமான அக்கினியாம் அக்கினியை அழைக்கிறார்கள்.

3. அக்கினியே! மந்தனத்தால் பிறந்த நீ, சீர்படுத்திய தருப்பைக்கு தேவர்களை அழைத்து வா: நீ எங்களுக்காக அவர்களுடைய ஹோதா: துதியாருகன்.

4. நீ தூதனின் கடமையைச் செய்வதால் அவிகளை விரும்பும் தேவர்களை எழுப்பவும்: நீ அவர்களோடு தருப்பையின் மீது அமரவும்.

5. அவிகளால் அழைக்கப்படுபவனும் துலங்குபவனுமான அக்கினியாம் நீ எங்களுடைய, அரக்கர்களால் காக்கப்படும் பகைவர்களைப் பற்றப்படுத்தவும். 115

6. எப்பொழுதும் இளைஞனும், அறிஞனும், மனையைப் பாலிப்பவனும், அவிகளை ஏந்திச் செல்பவனும், ஆருதிகளை ஏந்திச் செல்லுபவனுமாயுமுள்ள அக்கினி, அக்கினியால் மூட்டப்படுகிறன்.

7. யக்ஞத்திலே, கவியும் சத்தியத்தைப் பாலிப்பவனும், தேவனும், நோயை நீக்குபவனுமான அக்கினியைப் போற்றவும்.

8. தேவனான அக்கினியே! தூதனான நீ உன்னை உபசரித்து அவியளிப்பவனுக்குப் பாலகனாகவும்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



9. பாவகனே! தேவர்களை இன்புறுத்த அவிகளை அளித்து அக்கினியை அணுகுபவனுக்குச் சுகத்தை யளிக்கவும்.

10. பாவகனும் பிரகாசிப்பவனுமான அக்கினியே! எங்கள் யக்ஞத்துக்கும் அவிகளுக்கும் தேவர்களை அழைத்து வரவும். 120

11. எங்களுடைய புதிய பனுவலால் போற்றப் பட்டு, மக்கட்களைத் தரும் உணவையும், செல்வத்தையும் எங்களுக்களிக்கவும்.

12. அக்கினியே! சுத்த ஒளியோடு பிரகாசமாகி எல்லா தேவ அவிகளோடுமுள்ள நீ எங்களுடைய இந்த ஸ்தோமத்தால் இன்பமாகவும். 122

## 13. ஆப்பிரீ சூக்தம்

### 13. மேதாதிதி காண்வன்

#### ஸமிந்து

1. அக்கினியே! ஸுசமித்தனும், ஹோதாவும், சுத்தப்படுத்துபவனுமான நீ, அவியளிப்பவர்களிடம் தேவர்களை அழைத்து வா; நீ யஜிக்கவும்.

#### தநூநபாதன்

2. தநூநபாதனை கவியே! இன்று எங்களுடைய இனிய ரஸமுள்ள யக்ஞத்தை தேவர்களிடம் அவர்களுடைய உணவுக்காகச் செலுத்தவும்.

#### நராசம்ஸன்

3. நான், இந்த யக்ஞத்துக்கு அவிகளை அளிப்பவனும், இனிய நாவுள்ளவனும், அன்பு மிகுந்தவனுமான நராசம்ஸனை அழைக்கிறேன்.

#### இளை

4. அக்கினியே! நீ எங்களால் துதிக்கப்பட்டு சுகசலனமுள்ள தேரிலே தேவர்களை ஏந்தி வா; ஏனெனில் நீ மனிதர்களால் கற்பிக்கப்பட்ட ஹோதாவாகிறாய்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



#### தருப்பை

5. அறிஞர்களே! கட்டுக்களில் நன்கு சேர்க்கப்பட்டுள்ளதும், நெய்யங்கமிருப்பதும், அமுதத் தோற்றமுள்ளதுமான தருப்பையைப் பரத்துங்கள். 127

#### கதவுகள்

6. யக்ஞத்தை வளர்ப்பவையும், இதுவரை பிரவேசிக்கப்படாதவையும், பிரகாசிப்பவையுமான கதவுகள் திறக்கப்படுக. ஏனெனில், இன்று நிச்சயமாக யக்ஞஞ் செய்யப்படவேண்டும்.

#### உஷையும் இரவும்

7. நான், எங்களுடைய இந்த யக்ஞத்திலே தருப்பையின் மீது அமர அழகான உஷையையும் இரவையும் அழைக்கிறேன்.

#### ஹோதாக்கள்

8. நான், இனிய மொழிகளும், தெய்வத்தன்மையுள்ளவர்களும், கவிகளும், ஹோதாக்களுமான இருவர்களை எங்களுடைய இந்த யக்ஞத்தை நடத்த அழைக்கிறேன்.

#### மூன்று தேவிகள்

9. இன்பத்தைத் தருபவர்களும், தேயாத தேவிகளுமான இளையும், ஸரஸ்வதியும், மஹியும் தருப்பையின் மீது அமர்வார்களாக.

#### துவஷ்டா

10. நான், முதல்வனும் விசுவரூபனுமான துவஷ்டாவை அழைக்கிறேன்; அவன் எங்களுக்குத் தனியருளுக. 132

#### வனஸ்பதி

11. தேவனே! வனஸ்பதியே! எங்களுடைய அவியைத் தேவர்களிடஞ் செலுத்தவும்; அளிப்பவனுக்கு அறிவு தோன்றுக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



12. தொழுபவனுடைய மனையிலே சுவாஹாவால் இந்திரனுக்களிக்கப்படும் யக்ஞத்தை நடத்து; நான் இங்கு தேவர்களை அழைக்கிறேன். 134

## 14. விசுவே தேவர்கள்

### 14. மேதாதிதி காண்வன்

1. அக்கினியே! நீ இந்த எல்லா தேவர்களோடு எங்களுடைய வணக்கத்துக்கும், வழிபாடுகளுக்கும் சோமரஸத்தைப் பருக வா: நீ யஜிக்கவும்.

2. விப்பிரனுன அக்கினியே! கண்வர்கள் உன்னை அழைக்கிறார்கள்; உன்னுடைய செயல்களைப் போற்றுகிறார்கள். அக்கினியே! நீ தேவர்களோடு வா

3. அக்கினியே! நீ இந்திரனையும், வாயுவையும் பிரகஸ்பதியையும், மித்திரனையும், பூஷாவையும், பகனையும், அக்கினியையும், ஆதித்தியர்களையும், மருத்துக்களின் கணத்தையும் யஜிக்கவும்.

4. திருப்தியளிப்பவையும், இன்புறுத்துபவையும், பிந்துக்களாய்ப் பாண்டங்களுள் விழுபவையுமான சோமங்கள் உங்களுக்காக ஊற்றப்படுகின்றன.

5. பாலனம் விரும்புபவர்களும், புலவர்களும், தருப்பைகளைப் பரப்புபவர்களும், அவி தருபவர்களும், வண்ண மளிப்பவர்களுமான அறிஞர்கள், அக்கினியாம் உன்னைப் போற்றுகிறார்கள். 139

6. நெய்யங்கமுள்ளவையும், நினைத்தவுடன் இணபவையும், உன்னை ஏந்தி வருபவையுமான குதிரைகள் தேவர்களை சோமரஸத்தைப் பருக தாங்கி வருக.

7. அக்கினியே! யக்ஞாருக்கர்களும், ருதம் வளர்ப்பவர்களுமான தேவர்களை அவர்களுடைய மனைவிகளோடு யக்ஞத்திலே கலந்துகொள்ளச்செய்யவும். பிரகாசிக்கும் நாவுள்ளவனே! அவர்கள் பருக சோம ரஸத்தையளிக்கவும்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



8. யக்ஞாருக்கர்களும், துதியாருகர்களுமான அவர்கள், சோமம் அளிக்கப்படுங்கால் உன் நாக்கால் ரஸத்தைப் பருகுவார்களாக.

9. விப்பிரனும், ஹோதாவுமான அக்கினி, உஷையோடு எழும் தேவர்களையெல்லாம் சூரிய மண்டலத்திலிருந்து இங்கு அழைத்து வருவாளுக.

10. அக்கினியே! நீ எல்லா தேவர்களோடும், இந்திரனோடும், வாயுவோடும், மித்திரனுடைய நேஸ்டிரகளோடும் இனிய சோம ரஸத்தைப் பருகவும். 144

11. அக்கினியே! மனிதனுல் ஹோதாவாக ஸ்தாபிக்கப்பட்ட நீ, யக்ஞங்களில் இருக்கிறாய்; எங்களுடைய இந்த அவியைச் செலுத்தவும்.

12. தேவனே! அக்கினியே! திறமையும், துரிதமாயுமுள்ள ரோகித – குதிரைகளைத் தேரிலே இணைக்கவும்; அவற்றால் தேவர்களை இங்கு அழைத்து வா. 146.

## 15. ருதுவும் பல தேவர்களும்

### 15. மேதாதிதி காண்வன்

1. இந்திரனே! நீ ருதுவோடு சோமரஸத்தைப் பருகவும். திருப்தி செய்யும் சோம பிந்துக்கள் உன்னுள் நுழைக. அங்கு அவை நிலைக்க.

2. மருத்துக்களே! நீங்கள் ருதுவோடு யக்ஞப் பரத்திலிருந்து சோமத்தைப் பருகுங்கள். யக்ஞத்தைச் சுத்தப்படுத்துங்கள். நீங்கள் தான சீலர்கள்.

3 நேஷ்டிரியான நீ, உன் மனைவியுடன் தேவர்களிடம் எங்கள் யக்ஞத்தைப் போற்றவும். நீ ருதுவோடு சோமத்தைப் பருகவும். நீ இரத்தினங்களைத் தருகிறாய்.

4. அக்கினியே! தேவர்களை இங்கு அழைத்து வா. அவர்களை மூன்று இடங்களில் கிரமப்படுத்து. நீ ருதுவோடு பருகு.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5. இந்திரனே! நீ அறிஞனின் அருமையான பாண்டத்திலிருந்து, இடையறாத நட்புள்ள ருதுவை அநுசரித்து ஸோமத்தைப் பருகு. 151

6. கை பற்றிய விரதங்களுள்ள மித்திரா வருணர்களே! நீங்கள் எங்களுடைய திடமுள்ளதும், தடை படாமலுமுள்ள யக்ஞத்திலே ருதுவோடு நிலைத்திருங்கள்.

7. கைகளில் சில ஏந்தி செல்வத்தை விரும்பும் அறிஞர்கள் யாகத்திலும் யக்ஞங்களிலும் பொருள் தரும் அக்கினியைப் போற்றுகிறார்கள்.

8. திரவிணோதஸன் புகழுக்குரிய செல்வங்களை எங்களுக்கு அளிப்பானாக. நாங்கள் அவற்றைத் தேவர்களுக்காக விரும்புகிறோம்.

9. திரவிணோதஸன் நேஷ்டிரியின் பாத்திரத்திலிருந்து ருதுக்களோடு பருக விரும்புகிறான். அறிஞர்களே! வாருங்கள். அவியை அளியுங்கள். சென்று விடுங்கள்.

10. செல்வந்தருபவனே! நாங்கள் உன்னை நான்காவது தடவை ருதுக்களோடு போற்றுவதால் நீ எங்களுக்கு அளிப்பவனாகவும்.

11. அசுவினிகளே! யக்ஞாக்கனிகளோடு பிரகாசிப்பவர்களும், உத்தமச் செயல்களுள்ளவர்களும், ருதுவோடு யக்ஞத்தை நடத்துபவர்களுமான நீங்கள் இனிய ஸோமத்தைப் பருகுங்கள்.

12. விசேஷப் பயன்களை அளிப்பவனான நீ – அக்கினியே! கார்ஹபத்தியத்தோடு ஐக்கியமாகி ருதுவோடு யக்ஞத்தை நடத்துகிறாய். நீ வழிபடுபவனுக்குத் தேவர்களை யளிக்கவும். 158

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



# 16. இந்திரன்

## 16. மேதாதிதி காண்வன்

1. இந்திரனே! உன்னுடைய குதிரைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் உன்னை ஸோமரஸத்தைப் பருக இங்கு ஏந்தி வருக. சூரிய ஒளியுள்ள அறிஞர்கள் உன்னை ஒளிப்படுத்துவார்களாக.

2. அவனுடைய குதிரைகள் இந்திரனை சுகசலனமுள்ள தேரிலே நெய் கலந்த தானியங்கள் பரத்தப்பட்டுள்ள யக்ஞத்தின் இடமான இங்கே ஏந்தி வருக.

3. நாங்கள் இந்திரனைக் காலை யக்ஞத்தில் அழைக்கிறோம்; நாங்கள் அவனை அடுத்த யக்ஞத்திலும் அழைக்கிறோம்; நாங்கள் இந்திரனை ஸோமரஸத்தைப் பருக அழைக்கிறோம்.

4. இந்திரனே! உன்னுடைய நீண்ட பிடரிகேசங்களுள்ள குதிரைகளோடு எங்கள் ஸோமத்துக்கு வா. இரஸம் பொழியப்படுகிறது. நாங்கள் உன்னை அழைக்கிறோம்.

5. எங்களுடைய இந்த ஸ்தோமத்தைப் பற்று; எங்களுடைய இந்த யக்ஞத்துக்கு வர; இரஸம் பொழியப்பட்டிருக்கிறது. தாகமுள்ள மானைப் போல் பருகு. 163

6. இந்த சொட்டும் ஸோமங்கள் தருப்பையின்மீது சொரிகின்றன. இந்திரனே! நீ அவற்றை, உன்னைப் பலப்படுத்த பருகு.

7. எங்களுடைய இந்த உத்தம ஸ்தோமம் உன்னுடைய இருதயத்தைப் பரிசித்து உன்னைச் சுகப்படுத்துக. பொழிந்துள்ள ஸோமத்தைப் பருகு.

8. விருத்திரர்களைக் கொல்லும் இந்திரன் தன் மதத்துக்காக ஸோமத்தைப் பருகப் பொழியப்படும் ஒவ்வொரு யக்ஞத்துக்கும் போகிறான்.

9. சதக்கிரதுவே! எங்கள் விருப்பத்தை பசுக்களாலும் குதிரைகளாலும் திருப்தி செய்யவும். நாங்கள் ஆழ்ந்த தியானத்திலாகி உன்னைப் போற்றுகிறோம். 167

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 17. இந்திரா வருணங்கள்

### 1.7 மேதாதிதி காண்வன்

1. நான் சக்கரவர்த்திகளான இந்திரனுடைய, வருணனுடைய பாலனத்தை நாடுகிறேன். அவர்கள் இருவர்களும்-நாங்கள் விரும்பும் வண்ணம் எங்களைச் சுகப்படுத்துவார்களாக.

2. மானிட பாலகர்களான நீங்கள், என்னைப் போலுள்ள விப்பிரனுடைய விருப்பத்துக்கு இணங்கி பாலனத்தை அளிக்க எப்பொழுதும் விளங்குகிறீர்கள்.

3. இந்திரா வருணர்களே! எங்கள் விருப்பங்கள் போல் எங்களைச் செல்வத்தால் திருப்தி செய்யுங்கள். நாங்கள் எப்பொழுதும் உங்கள் அருகிலிருக்க விரும்புகிறோம்.

4. எங்களுடைய சுத்த யக்ஞங்களின் கலவைகள் இருக்கின்றன. ஸுமதிகளுள்ள அறிஞர்களின் கலவை ஸ்தோமங்களும் இருக்கின்றன. உணவு அளிப்பவர்களின் நடுவில் நாங்கள் சேர்க்கப்படுவோமாக.

5. இந்திரன் ஆயிரங்களை அளிப்பவர்களின் நடுவில் அளிப்பவனாயிருக்கிறான். வருணன் துதியாருகர்களின் நடுவே துதிக்கத் தகுந்தவன். 172

6. நாங்கள் அவர்களுடைய பாலனத்தால் செல்வங்களை அனுபவிக்கிறோம். நாங்கள் அவற்றைக் குவிக்கிறோம். ஆனால் இன்னும் மிகுந்திருக்கிறது.

7 இந்திரா வருணர்களே! நான் உங்கள் இருவர்களையும் பலவித செல்வங்களுக்கு அழைக்கிறேன். நீங்கள் எங்களை ஜயப்படுத்துங்கள்.

8. இந்திரா வருணர்களே! எங்கள் மனங்கள் உங்கள் இருவர்களையும் நாடுகின்றன: எங்களைத் துரிதமாய் சுகப்படுத்துங்கள்.

9. இந்திரா வருணர்களே! என்னால் உங்களுக்களிக்கப்படும் நல்ல ஸ்துதியானது உங்களிடஞ்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



சேர்க. இசைந்துள்ள இந்த துதியைக் கிரகித்து உயர்த்துங்கள். 176

## 18. பிரமணஸ்பதி

### 18. மேதாதிதி காண்வன்

1. பிரமணஸ்பதியே! நீ ஸோமமளிப்பவனைத் தேவர்களின் நடுவே உசிஜி மகனை கட்சீவதனைப்போல் மேம்படுத்தவும்.

2. செல்வனும், நோய் நீக்குபவனும், பொருள்களைப் பற்றுபவனும், புட்டியைச் செழிப்பவனும், துரிதனுமான பிரமணஸ்பதி எங்களிடம் அனுகூலமாகுக.

3. பிரமணஸ்பதியே! தூர்த்தனின் பழிச்சொல் எங்களிடம் வராமலிருக்க நீ எங்களைப் பாலிக்கவும்.

4. இந்திரனும், பிரமணஸ்பதியாலும், ஸோமனாலும் பாலிக்கப்படும் மனிதன் வீரனாகிறான்; அவனுக்கு அழிவில்லை.

5. ஸோமனே! பிரமணஸ்பதியே! தட்சிணையே! நீங்கள் அவனைப் பாவத்திலிருந்து பாலியுங்கள். 181

6. நான் அற்புதனும், இந்திரனுடைய நண்பனும், விரும்பத் தகுந்தவனும், ஈகையனுமான ஸதஸஸ்பதியிடமிருந்து அறிவை வேண்டுகிறேன்.

7. ஸதஸஸ்பதியின் உதவியின்றி அறிஞனுடைய எந்த யக்ஞமும் சித்தமாகாது; அவன் நம்முடைய செயல்களின் யோகத்திலே சேர்கிறான்.

8. அவன் அவியளிப்பவனைச் செழிப்பிக்கிறான்; அவன் யக்ஞத்தை நன்றாக நிறைவேற்றுகிறான்; நம்முடைய பனுவல் அவனால் தேவர்களிடஞ் சேர்கிறது.

9. நான் மிக்கத் துணிந்தவனும், மிகுந்த புகழுள்ளவனும், சோதிபோல் துலங்குபவனுமான நராஸம்ஸனைக் கண்டுள்ளேன். 185

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


## 19. அக்கினியும் மருத்துக்களும்

### 19. மேதாதிதி காண்வன்

1. அக்கினியே! நீ இந்த சுந்தர யக்ஞத்துக்கு, ஸோமபானத்தைப் பருக அழைக்கப்படுகிருய். நீ மருத்துக்களோடு வா.

2. அக்கினியே! மகத்தான உனக்குச் செய்யப்படும் யக்ஞத்திலே எத்தேவனுக்கும்,எம்மனிதனுக்கும் அதிகார மில்லை; நீ மருத்துக்களோடு வா.

3. அக்கினியே! தேவர்களும், துரோகமற்றவர் களும், பெரிய சலங்களையறிபவர்களுமான மருத்துக் களோடு நீ வா.

4. உக்கிரர்களும், வலிமையில் வெல்லப்படாதவர் களும், மழையைத் தருபவர்களுமான மருத்துக்களோடு அக்கினியே, நீ வா.

5. அக்கினியே! நீ பிரகாசிப்பவர்களும், உக்கிர வடிவமுள்ளவர்களும், மேலான செல்வமிருப்பவர்களு மான மருத்துக்களோடு வா. 190

6. அக்கினியே! நீ சூரியனுக்கு மேலே இருக்கும் ஒளிமய உலகிலுள்ள தேவர்களான மருத்துக்களோடு வா.

7. அக்கினியே! நீ மேகங்களைக் கலைப்பவர்களும், கடல்களை அலைகளால் குலுக்குபவர்களுமான மருத்துக் களோடு வா.

8. சூரியனுடைய ரசிமிகளோடு வானிலே பரவுப வர்களும் தங்கள் பலத்தால் சமுத்திரத்தைக் கலக்குபவர் களுமான மருத்துக்களோடு அக்கினியே, வா.

9. அக்கினியே! நான் முன்போல் உன் பானத்துக் காக இனிய ஸோமத்தைப் பொழிகிறேன்; நீ மருத்துக் களோடு வா. 194

vedicfastro.blogspot.com


## 20 ரிபுக்கள்

### 20. மேதாதிதி காண்வன்

1. செல்வங்களைத் தரும் இந்த ஸ்தோமம், ஜன்மங் களை அடையும் தேவர்களுக்கு அறிஞர்களால், அவர் களுடைய வாய்களால் கூறப்படுகிறது.

2. அவர்கள் இந்திரனுக்குச் சொல்லால் இணையுங் குதிரைகளை மனத்தால் கற்பித்தார்கள். செயல்களால் செம்மையாகும் யக்ஞத்தில் அவர்கள் கலந்துகொண்டார் கள்.

3. அவர்கள் அசுவினிகளுக்கு, எங்குஞ் செல்வதும் சுகத்தைத் தருவதுமான தேரையும், பால் தரும் பசுவை யும் செய்தார்கள்.

4. சத்திய மந்திரங்களறிந்தவர்களும், நீதிமான் களும், வியாபகர்களுமான ரிபுக்கள் மூப்படைந்திருந்த பெற்றோர்களை இளமைப்படுத்தினர்கள்.

5. ரிபுக்களே! உங்களுக்கு மதந்தரும் ஸோமரஸங் கள் மருத்துக்களிடமிருக்கும். இந்திரனோடும், ஒளிமய ஆதித்தியர்களோடும் அளிக்கப்படுகின்றன. 199

6. ரிபுக்கள், தேவனான துவஷ்டாவால் கற்பிக்கப் பட்ட புதிய பாண்டத்தை நான்காய்ச் செய்தார்கள்.

7. அவர்கள் எங்கள் துதிகளால் அசைந்து ஸோமத்தை யளிப்பவனுக்குப் பல அருமையான செல் வங்களைத் தருவார்களாக. அவர்கள் மூவ்வேழு யக்ஞங் களைப் பூர்த்தி செய்வார்களாக.

8. யக்ஞத்தைத் தாங்கும் ரிபுக்கள் மானிட வடிவங் களில் இருந்தார்கள். அவர்கள் தங்கள் நற்செயல்களால் யக்ஞத்தில் தேவர்களோடு பாகத்தை அடைந்தார் கள். 202

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 21. இந்திராக்கினிகள்

### 21. மேதாதிதி காண்வன்

1. நான் இங்கு இந்திரனையும், அக்கினியையும் அழைக்கிறேன். நாங்கள் அவர்களுக்கு ஸ்தோமத்தை யளிக்க விரும்புகிறோம். மிக்கப் பருகும் அவர்களே ஸோம ரஸத்தைக் குடிப்பார்களாக.

2. மனிதர்களே! யக்ஞங்களில் இந்திரனையும் அக்கினியையும் போற்றுங்கள். அவர்களை அலங்கரியுங்கள். அவர்களை காயத்திரிகளோடு பாடுங்கள்.

3. நாங்கள் யக்ஞத்தை நடத்தும் எங்களுடைய நண்பனின் நலத்துக்காக ஸோமரஸத்தைப் பருகுபவர்களான இந்திராக்கினிகளைப் பானஞ்செய்ய அழைக்கிறோம்.

4. நாங்கள் உக்கிரர்களான இருவர்களையும், பொழியப்பட்டுள்ள ஸோமமிருக்கும் யக்ஞத்துக்கு அழைக்கிறோம். இந்திரனே! அக்கினியே! இங்கு வாருங்கள்.

5. மகான்களும், சபாபதிகளுமான இந்திரனும், அக்கினியும், அரக்கர்களை அழிப்பார்களாக. நரமாமிசத்தைப் புசிப்பவர்கள் மக்களின்றியாவார்களாக. 207

6. இந்திரனே! அக்கினியே! ஞானத்தைத் தரும் இடத்திலே, இந்த சத்தியத்தால் விழித்திருங்கள்: எங்களுக்குச் சுகத்தை யளியுங்கள். 208

## 22. அசுவினிகளும் மற்றவர்களும்

### 22. மேதாதிதி காண்வன்

1. காலையில் தங்கள் தேரை இணைக்கும் இரு அசுவினிகளை எழுப்புங்கள். அவர்கள் இந்த ஸோம ரஸத்தைப் பருக வருவார்களாக.

2. நாங்கள், தேவர்களும், உத்தமப் பாகர்களும், உயர்ந்த தேரில் செல்லுபவர்களும், சோதி பற்றுபவர்களுமான இரு அசுவினிகளை அழைக்கிறோம்.

vedicfastro.blogspot.com



3. அசுவினிகளே! உங்கள் தசையிலே தேன் சொட்டுகிறது. அது ஸத்தியநாதத்தை எழுப்புகிறது. அதனுல் யக்ஞத்தை ஊக்கப்படுத்துங்கள்.

4. அங்கு, தேரிலே செல்லும் உங்களுக்கு ஸோம மளிப்பவனுடைய இடம் தூரமாகாது.

### ஸவிதா

5. நான், பாலனத்துக்காக தங்கக் கைகளுள்ள ஸவிதாவை அழைக்கிறேன். அவன் வழிபடுபவர்களின் இடத்தை நிலைப்படுத்துவான். 213

6. சலங்களின் மகனுன ஸவிதாவை, எங்களுடைய பாலனத்துக்காகப் போற்றவும். நாங்கள் அவனுடைய விரதங்களை விரும்புகிறோம்.

7. நாங்கள் வசுவின் பலவித செல்வத்தை விபாகஞ் செய்பவனும், மனிதர்களை ஒளிப்படுத்துபவனுமான ஸவிதாவை அழைக்கிறோம்.

8. நண்பர்களே! உட்காருங்கள்: ஸவிதா தம்மால் போற்றப் படவேண்டும். ஏனெனில், அவன் செல்வங்களைத் தருபவனுகிருன்.

### அக்கினி

9. அக்கினியே! நீ துவஷ்டாவையும், தேவர்களின் பிரியமான மனைவிகளையும் ஸோம ரஸத்தைப் பருக அழைத்து வா.

10. இளைஞன் அக்கினியே! நீ தேவர்களின் மனைவிகளையும், ஹோதாவின் பத்தினியையும், பாரதியையும், வருத்திரியையும், திஷணையையும் இங்கு எங்களுடைய பாலனத்துக்காக அழைத்து வா. 218

### தேவிகள்

11. மனிதர்களைப் பாலிப்பவர்களும், பின்னப் படாத சிறகுகளிருப்பவர்களுமான தேவியர்கள் மகத்தான சுகத்தோடும், காப்போடும் எங்களைப் பாலிப்பார்களாக.

Astrologer Hariram Thejus

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



### இந்திராணி முதலியவர்கள்

12. நான் இங்கு இந்திராணியையும், வருணனியையும், ஆகனேயியையும் எங்களுடைய சுவஸ்திக்காக சோமபானத்துக்கு அழைக்கிறேன்.

### சோதியும் புவியும்

13. மகான்களான சோதியும், புவியும் தங்கள் ரஸங்களான பனித்துளிகளால் இந்த யக்ஞத்தை ஈரப்படுத்துவார்களாக – இதப்படுத்துவார்களாக. எங்களைப் புட்டியால் பூர்த்தி செய்வார்களாக.

14 அறிஞர்கள், தங்கள் செயல்களால், கந்தர்வனின் நிலையான நிலயத்திலிருக்கும் சோதிபுவிகளின் நெய் போலுள்ள சலனங்களைச் சுவைக்கிறார்கள்.

### பூமி

15. புவியே! நீ எங்களுக்கு விரிந்து பரவவும்; முட்களின்றி விளங்கவும்; எங்களுக்கு நிலையான இடமாகவும்; எங்களுக்கு மகத்தான சுகத்தையளிக்கவும். 228

### தேவர்கள்

16. தேவர்கள், புவியின் எந்த இடத்திலிருந்து விஷ்ணு சந்தங்களோடு கடந்து செல்லப் பரந்த அடியை வைத்தானை அந்த இடத்திலிருந்து எங்களைப் பாலிப்பார்களாக.

### விஷ்ணு

17. விஷ்ணு இவ்வுலகத்தைக் கடந்தான்; அவன் மும்முறை தன் பாதத்தை வைத்தான்; அவன் பாதப் புழுதியிலே பிரபஞ்சமெல்லாம் திரட்டப்பட்டது.

18. தாரகனும், தடைபடாதவனுமான விஷ்ணு மூன்று அடிகளை வைத்தான். அதனால் அவன் தருமங்களைத் தாங்கினான்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



19. விஷ்ணுவின் செயல்களைக் காண்மின். அவற்றால் வழிபடுபவன்–விரதங்களை நிறைவேற்றுகிறான். விஷ்ணு, இந்திரனுடைய போற்றத் தகுந்த நண்பனாயிருக்கிறான்.

20. அறிஞர்கள், விஷ்ணுவின் அந்த பரமபதத்தை வானைக் காண்பதுபோல் எப்பொழுதும் காண்கிறார்கள்

21. விழித்திருப்பவர்களும், வழுத்துபவர்களுமான விப்பிரர்கள் விஷ்ணுவின் அந்தப் பரம பதத்தை நன்றாய் ஒளிப்படுத்துகிறார்கள். 229

## 23. வாயுவும் மற்றவர்களும்.

### 23. மேதாதிதி காண்வன்

1. நலமளிக்கும் இந்தத் தீவிர சோமரஸங்கள் பொழியப்படுகின்றன: வாயுவே! வா! நீ அளிக்கப்படும் சோமத்தைப் பருகு.

### இந்திரனும் வாயுவும்

2. நாங்கள் சோதியிலிருக்கும் தேவர்களான இந்திரனையும், வாயுவையும் இந்த சோமத்தைப் பருக அழைக்கிறோம்.

3. அறிஞர்கள் பாலனத்துக்காக, மனத்தைப் போல் துரிதர்களும், ஆயிரங்கண்களிருப்பவர்களும், செயல்களை ஏந்துபவர்களுமான இந்திரனையும், வாயுவையும் அழைக்கிறார்கள்.

### மித்திரா வருணர்கள்

4. நாங்கள், யக்ஞத்தில் தோன்றுபவர்களும், சுத்த வலியர்களுமான மித்திரனையும், வருணனையும் சோமத்தைப் பருக அழைக்கிறோம்.

5. நான் ருதத்தால், ருதத்தை வளர்ப்பவர்களும், ருதசோதியின் தலைவர்களுமான மித்திரா வருணர்களை அழைக்கிறேன். 284

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



6. வருணன் எங்களுடைய பெரிய பாலகனுக மித்திரன் எல்லாப் பாலனங்களோடும் எங்களைப் பாலிப் பானுக. அவர்கள் எங்களை மிக்கச் செல்வப்படுத்து வார்களாக.

### மருத்துக்களோடுள்ள இந்திரன்

7. நாங்கள் மருத்துக்களோடுள்ள இந்திரனை சோமபானத்துக்கு அழைக்கிறேம். அவன் தன் கணத் தோடு திருப்தியாவானுக.

8. இந்திரனைத் தலைவனுக அடைந்துள்ள தேவர் களான மருத்துக்களங்களும், செல்வமளிக்கும் பூஷா வும் என் அழைப்பைக் கேட்பார்களாக.

9. உத்தமதான மளிப்பவர்களான நீங்கள் வலி யனும், நண்பனுமான இந்திரனோடு சேர்ந்து விருந்திர னைக் கொல்லுங்கள் குரூரன் எங்களை அரசுபுரியாம லிருப்பானுக.

### விசுவேதேவர்கள்

10. நாங்கள், உக்கிரர்களும் விருசினியைத் தாயாக அடைந்தவர்களும், தேவர்களான மருத்துக் களை யெல்லாம் சோமரசத்தைப் பருக அழைக் கிறேம். 239

11. தீரர்களும் - மருத்துக்களுமான நீங்கள் சுபச் செயலை நடத்த செல்லும் பொழுதெல்லாம் உங்களு டைய மூழக்கம், மகிழ்ச்சியிலே ஜயிப்பவர்களின் கோஷம் போல் எழுகிறது.

12. பிரகாசமான மின்னலிலிருந்து தோன்றிய மருத் துக்கள் எங்களை எங்கும் பாலிப்பார்களாக. எங்களை சுகப்படுத்துவார்களாக.

### பூஷா

13. பிரகாசிப்பவனும், துரிதமாய்ச் செல்பவனு மான பூஷாவே! நீ விசித்திரத் தருப்பையோடு,



சோமத்தை, இழக்கப்பட்ட பசுவை மீட்பவன்போல் சோதியிலிருந்து எடுத்து வரவும்.

14. பிரகாசமுள்ள பூஷா, அரசனுன சோமனை அவன் மறைவான இடத்திலே மறைக்கப்பட்டு, விசித்திர தருப்பையில் மறைந்திருந்தாலும் கண்டு பிடித்தான்.

15. அவன் நன்கு இணைந்துள்ள ஆறு ருதுக்களை இந்த சோம பிந்துக்களால், காளைகளால் உழுது தானியத்தை ஏந்தி வரும் உழவன்போல் எனக்கு க் கிரமமாய் ஏந்தி வருவானுக. 244

### சலங்கள்

16. யக்ஞத்தை விரும்புபவர்களும், பத்துக்களும் எங்களுடைய தாய்மார்களுமான சலங்கள், பசுக்களின் பாலை இனிமை செய்து கொண்டு யக்ஞத்தின் வழிகளால் பாய்கின்றன.

17. சூரியனருகில் இருக்கும் சலங்களும், சூரியன் சேர்ந்துள்ள சலங்களும் எங்கள் யக்ஞத்துக்கு நல மாகுக.

18. நான் எங்கள் பசுக்கள் பானஞ் செய்யும் தெவிகளான சலங்களை அழைக்கிறேன்-போற்று கிறேன். பெருகும் சலங்களுக்கு அவி அளிக்கப்பட வேண்டும்.

19. சலங்களின் நடுவே அமிருத முண்டு. சலங் களிலே ஔடதமிருக்கிறது. ஆதலால் அவற்றைப் போற்ற ஊக்கமாயிருங்கள்.

20. சோமன் என்னிடம் சலங்களின் நடுவே எல்லா ஔடதங்களும் இருக்கின்றன எனக் கூறினுன். அவன் அங்கு விசுவத்தை சுகப்படுத்தும் அக்கினியும் உண்டு என சொன்னுன். சலனங்கள் எல்லா மருத்து களையும் ஏத்துகின்றன என அவன் பொழிந்தான். 249

Astrologer Hariram Thejus hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


21. சலங்களே! நான் நீண்டகாலம் சூரியனைக் காண என் தேகத்தில் எல்லா நோய் நீக்கும் ஔட தங்களை நிரப்புங்கள்.

22. சலங்களே! நீங்கள் என்னில் எக்குற்றமிருந்தாலும், நான் எத்துரோகம் செய்திருந்தாலும், நான் பழிச்சொல்லியோ, பொய்யையோ புகன்றிருந்தாலும், நீங்கள் அவற்றை என்னிடமிருந்து நீக்குங்கள்.

23. நான் இன்று சலங்களில் நுழைந்துள்ளேன். நாங்கள் அவற்றின் ரஸத்தோடு கலந்துள்ளோம்.

**அக்கினி**

நீர்களிலுள்ள அக்கினியே! நீ வா. நீ என்னைத் திடப்படுத்து.

24. அக்கினியே! என்னை தேஜஸோடும், பிரஜையோடும், ஆயுஸோடும் ஐக்கியப் படுத்து. தேவர்கள் என் கர்த்தாவின் இந்த யக்ஞத்தை அறிவார்களாக. இந்திரனும் ரிஷிகளோடு இந்த யக்ஞத்தை அறிவானாக. 258.

## 24. வருணனும் மற்றவர்களும்

### 24. அஜீகர்த்தனின் புதல்வனை சுனச்சேபன்

1. நாங்கள் அமுதர்களிலே எவனுடைய எந்த தேவனுடைய மங்களமான நாமத்தைப் போற்றுவோம்? நான் மீண்டும் என் தாயையும், தந்தையையுங் காண எவன் எங்களை மகத்தான அதிதிக்களிப்பான்?

2. நாங்கள், அமுதர்களின் தடுவே முதல் தேவனுயிருக்கும் அக்கினியின் மங்களமான நாமத்தை அவன் எங்களை மகத்தான அதிதிக்களிக்கவும். நான் மீண்டும் என் தாயையும், தந்தையையும் காணவும் கூறுவோமாக-போற்றுவோமாக.

3. எப்பொழுதும் பாலனமளிக்கும் ஸவிதாவே! நாங்கள் செல்வத் தலைவனை உன்னிடம் எங்களுக்குரிய பாகத்தை வேண்டுகிறோம்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com


4. நாங்கள் உன் கைகளில் வைக்கப்பட்டிருப்பதும், போற்றத் தகுந்ததும், வெறுப்பற்றதும், குற்றமில்லாததுமான செல்வத்தை விரும்புகிறோம்.

5. நாங்கள், செல்வம் ஏத்துபவனை உன் பாலனத்தால் செல்வத்தின் உச்சியிலேற ஊக்கமாகிறோம். 258

6. வருணனே! பறக்கும் இத்தப் பறவைகள் உன்னுடைய தேக பலத்தையும், திறத்தையுமடையவில்லை. உன் கோபத்தைத் தாங்கும் தன்மைகளுமில்லாதவை. ஓயாமல் பெருகும் இந்த சலங்களுக்கும், புயல் காற்றுக்கும் உன் வேகமில்லை.

7. மூலமில்லாத வானிலே வசிக்கும் சுத்த வலிமையுள்ள அரசனை வருணன், மேலே மூலமுள்ளவையும், கீழே நோக்குபவையுமான கதிர்களிலிருக்கும் ஒளித் தூணை உச்சத்திலே ஏத்துகிறான். சீவனுக்குக் காரணமான ரசிமிகள்--ராணங்களாக என்னில் ஸ்தாபனமாகுக.

8. அரசனை வருணன், சூரியன் தினந்தோறும் செல்ல, அவன் வழியற்ற வெளியிலே கடந்து போகும் வழியைப் பரத்தினான். இருதயத்தைத் துன்புறுத்தும் எவனையும் அவன் விலக்குவானாக.

9. அரசனே! உன்னுடைய சிகிச்சைகள் நூறும் ஆயிரமுமானவை. உன்னுடைய--சுமதி--ஆதரவு பரந்தும், ஆழ்ந்தும் தோன்றும்: நீ எங்களோடிருக்கவும்: நிர்ருதியைப் புறப்படுத்தி தூரத்திலே விலக்கு: நாங்கள் செய்த எந்த பாவத்திலிருந்தும் எங்களை விடுதலைப் படுத்தவும்.

10. உச்சத்திலே வைக்கப்பட்டுள்ள இந்த நட்சத்திரங்கள் இரவிலே புலனாகின்றன: தினத்திலே எங்கோ மறைந்துவிடுகின்றன; இவை வருணனின் தடைபடாத செயல்கள்; சந்திரன் அவனுடைய ஆக்ஞையால் இரவில் பிரகாசித்துக் கொண்டு செல்லுகிறான். 263

11. நான் உன்னைப் பணிவதோடு துதித்து, அவிகளோடு யக்ஞ கர்த்தா விரும்பும் ஆயுளை நாடுகிறேன்:

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



வருணனே! நீ அசட்டை செய்யாமல் எங்களை ரூபகஞ் செய்து கொள்ளவும். பலரால் போற்றப்படும் நீ, எங்கள் ஆயுளைப் பறிக்காதே.

12. அறிஞர்கள் என்னிடம் இரவிலும் பகலிலும்– இந்த உன் துதியைக் கூறுகிறார்கள். இவ்வறிவு என் இருதயத்தினிடம் பேசுகிறது. கட்டப்பட்டுள்ள சுனச்சேபனால் அழைக்கப்படும் அவன், அரசனை வருணன் எங்களை விடுவிப்பானாக.

13. பிடிக்கப்பட்டு, மூக்கால்களுள்ள மரத்திலே கட்டப்பட்டிருக்கும் சுனச்சேபன், அதிதியின் மகனை அழைத்துள்ளான். அறிஞனும் தடைபடாதவனும் அரசனுமான வருணன் அவனை விடுவிப்பானாக; அவன் சுனச்சேபனுடைய கட்டுகளை அவிழ்ப்பானாக.

14. வருணனே! நாங்கள் உன் கோபத்தை வணக்கங்களாலும், யக்ஞங்களாலும், அவிகளாலும் விலக்குகிறோம். அறிஞனும், சிறப்புள்ளவனும், துன்பத்தை நீக்குபவனுமான நீ, எங்களிடம் துலங்கி, நாங்கள் செய்த பாவங்களைத் துடைக்கவும்.

15. வருணனே! மேலிருக்கும், நடுவிலிருக்கும், கீழே இருக்கும் என் கட்டை அவிழ்க்கவும். அதிதியின் மகனே! நாங்கள் உன் விரதத்திலே மாசற்றவர்களாகி, பாவத்திலிருந்து விடுதலைப்படுவோமாக. 268

## 25. வருணன்

### 25. சுனச்சேபன்

1. தேவனை வருணனே! எல்லா சனங்களும் பிழைகளைச் செய்கிறார்கள். அப்படியே நாங்களும் உன் விரதத்தைத் தினந்தோறும் பங்கப்படுத்துகிறோம்.

2. உன்னுடைய அழிக்கும் கோபத்தாலும், அதிருப்தியால் தோன்றும் உன்னுடைய தாபத்தாலும் எங்களை நாசத்துக்குட்படுத்தாதே.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



3. வருணனே! நாங்கள் உன் மனத்தை எங்களுடைய நன்மைக்காக, கனைத்த குதிரையைத் தேர்ப் பாகன்போல் சாந்தப்படுத்துகிறோம்.

4 என் அமைதியான எண்ணங்கள் தங்கள் கூடுகளைச் சுற்றிப் பறக்கும் பறவைகள்போல் சீவனை விரும்பி நாடுகின்றன.

5. நாங்கள் எப்பொழுது எங்களுடைய இன்பத்துக்காக, க்ஷத்திரத்தைப் பற்றுபவனும், பலரைப் பார்ப்பவனும், தலைவனுமான வருணனை இங்கு வருவிப்போம்? 273.

6. மித்திரா வருணர்கள் அளிப்பவனுக்கும், யக்ஞத்தை நடத்துபவனுக்கும் நலமுடனிருப்பதால் ஸமமாயுள்ள அவியை அருந்துகிறார்கள்.

7. வானில் பறக்கும் பறவைகளின் வழியையறியும் அவன், கடலில் நிலைத்து கப்பல்களின் வழியையும் அறிகிறான்.

8. விரதங்களை அறியும் அவன், மக்களுள்ள பன்னிரண்டு மாதங்களையும் அங்கு தோன்றும் அதிக மாதத்தையுமறிகிறான்.

9. அவன், பரந்தவனும், பொலியுள்ளவனும், உத்தமனுமான காற்றின் வழியையறிகிறான். அவன் மேலே இருக்கும் தேவர்களையும் அறிகிறான்.

10. நல்ல செயல்களைச் செய்பவனும், விரதங்களை ஏந்துபவனுமான வருணன் பிரசைகளின் நடுவே மேலான ஆட்சியை நடத்த அமர்ந்திருக்கிறான். 278.

11. அறிஞன் அவனால் நடத்தப்பட்ட, நடத்தப்படும் அற்புதங்களை யெல்லாம் காண்கிறான்.

12. பேரறிஞனை வருணன் எங்களைத் தினந்தோறும் நன்னெறியில் செலுத்துவானாக. எங்கள் ஆயுளை நீடிப்பானாக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



18. வருணன் தங்கக் கவசத்தைத் தரித்து, தன் புட்டியான அங்கத்திலே, காந்தியை அணிந்து கொள் கிருன்; அவனைக் கதிர்கள் சூழ்கின்றன.

14. பகைவர்கள் தேவனைத் துன்புறுத்தத் துணி யார்கள். துட்டர்களும், மானிடர்களைக் கொடுமைப் படுத்துபவர்களும் அவனை அசட்டை செய்யத் துணி யார்கள்.

15. அவன் மானிடர்களுக்கு உணவை அளிக் கிருன். எங்களுக்கும் முதன்மையாக அளிக்கிருன். 288

16. என் நினைவுகள், பலரால் போற்றப்படும் அவ னுக்கு மேய் நிலங்கட்குப் பசுக்கள் போல் செல்லு கின்றன.

17. என் அவி சித்தமாயிற்று என நாம் இருவரும் கூறுவோமாக. நீயும் ஹோதாவைப் போல் பிரியமான அவியைப் பெற்றுக்கொள்கிருய்.

18. நான், அனைவருக்கும் இனிய தோற்றமுள்ள அவனைக் கண்டேன். நான் புவியிலே அவனுடையத் தேரைக் கண்டேன். அவன் என்னுடைய இத்துதிகளை ஏற்றுக்கொண்டான்.

19. வருணனே! என்னுடைய இந்த அழைப்பைக் கேட்கவும். எங்களை இன்று சுகப்படுத்தவும், பாலனத்தை விரும்பும் நான் உன்னைப் போற்றுகிறேன்.

20. மேதாவியான நீ, சோதியிலும், புவியிலும், எல்லா உலகத்திலும் பிரகாசிக்கிருய். நீ என்னுடைய மொழிகளைச் செவியுற்று செல்வத்தோடு பதிலளிக்கவும்.

21. நாங்கள் சீவிக்க எங்களை மேலுள்ள பாசங் களிலிருந்து விடுவிக்கவும். நடுவிலுள்ள, கீழேயுள்ள கட்டுக்களை அவிழ்க்கவும். 209

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 26. அக்கினி

### 26. சுனச்சேபன்

1. உணவின் தலைவனே! நீ ஒளியாடைகளை அணிந்துகொள்ளவும். யக்ஞத்தை யஜிக்கவும்.

2. எப்பொழுதும் இளைஞனாயுள்ள அக்கினியே! போற்றத் தகுந்தவனும், ஒளியணிந்தவனுமான நீ. எங்களுடைய ஹோதாவாகவும்.

3. அக்கினியே! போற்றத் தகுந்த நீ, மகன் போலுள்ள எனக்குத் தந்தையைப்போலும், பந்துவுக்குப் பந்துவைப் போலும், நண்பனுக்கு நண்பனைப் போலு மிருக்கிருய்.

4. பகைவரை யழிக்கும் மித்திரனும், வருணனும், அர்யமானும், மனுவின் யக்ஞத்தில் அமர்ந்ததுபோல் எங்கள் தருப்பையில் அமர்வார்களாக.

5. பழைய ஹோதாவான நீ, எங்களுடைய இந்த யக்ஞத்திலும், நட்பிலும் இன்பமாகவும். இந்தத் துதி களைக் கேட்கவும். 294

6. நாங்கள் மற்ற தேவனுக்கு நித்தியமாயும், தாராளமாயுமளிக்கும் அவியெல்லாம் உனக்கே அளிக் கப்படுகிறது.

7. ஹோதாவும், இனியனும், பிரஜாபாலகனும், போற்றத் தகுந்தவனுமான அவன் எங்களிடம் பிரியமா யிருப்பானாக. நல்ல அக்கினிகள் உள்ள நாங்கள் உன்னிடம் பிரியமுள்ளவர்களாவோமாக.

8. மங்கள அனல்களுள்ள தேவர்கள் எங்களு டைய போற்றத் தகுந்த அவியை ஏற்றுகிறார்கள். ஆத லால், மங்கள அனல்களுள்ள நாங்கள் உன்னைப் போற்றுகிறோம்.

9. அமிருதனே! மானிடர்களின் பனுவங்கள், இனி உனக்கும், எங்களுக்கும் பரஸ்பரம் இன்பந் தருபவை யாகுக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



10. அக்கினியே! ஆற்றல்மகனே! நீ இந்த யக்ஞத்தையும், எங்களுடைய இந்தத் துதியையும் எல்லா அனல்களோடும் ஏற்றுக்கொள்ளவும். எங்களுக்கு உணவை யளிக்கவும். 299

## 27. அக்கினி

### 27. சுனச்சேபன்

1. நான் யக்ஞச் சக்கரவர்த்தியான உன்னை துதிகளோடு வணங்க இயங்குகிறேன். ஏனெனில் நீ, தன் வாலால் சுக்கனை விலக்கும் குதிரையைப் போல் நீ எங்கள் பகைவர்களை விலக்குகிறாய்.

2. பலத்தின் மகனும், எங்கும் வேகமாய்ப் பரவுபவனுமான அவன், எங்களுக்கு மேலான சுகத்தையளிப்பானாக. எங்களுக்குச் செல்வங்களைப் பொழிவானாக.

3. அக்கினியே! எங்கும் செல்பவனான நீ, எங்களை எப்பொழுதும், அருகிலோ தூரத்திலோ துன்புறுத்த நினைக்கும் மனிதர்களிடமிருந்து பாலிக்கவும்.

4. அக்கினியே! நீ எங்களுடைய அவியையும்,புதிய தோத்திரத்தையும் தேவர்களிடம் தெரியப்படுத்தவும்.

5. நீ எங்களுக்கு சோதியிலும், புவியிலுமுள்ள உணவைச் செலுத்தவும். புவியிலுள்ள செல்வத்தை அளிக்கவும். 304

6. சித்திரபானுவே! நீ நதியின் அலைகள் போல் செல்வங்களைப் பகிர்ந்தளிக்கிறாய். அவியளிப்பவனுக்குப் பொழிகிறாய்.

7. அக்கினியே! போரில் உன்னால் பாலிக்கப்படுபவனும், உன்னால் போருக்கு எழுப்பப்படுபவனும் எப்பொழுதும் உணவைச் சுவாதீனப்படுத்துவான்.

8. பகைவர்களையழிப்பவனே! உன் பக்தனை எவனாலும் வெல்ல இயலாது ஏனெனில் அவனிடம் புகழுவதற்குரிய பலமுண்டு.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



9. எல்லா மனிதர்களாலும் போற்றப்படும் அவன் தன் குதிரைகளால் எங்களைப் போரில் கடத்திச் செல்வானாக. அறிஞர்களால் ஏத்தப்படும் அவன், எங்களுக்குச் செல்வங்களை அளிப்பானாக.

10. ஜராபோதனே! எல்லா மனிதர்களையும் நலப்படுத்தும் தேவ யக்ஞத்தில் நீ பிரவேசிப்பாயாக. வழிபடுபவன் இணக்கமான ஸ்தோமத்தை ருத்திரனான அக்கினிக்குக் கூறுகிறான். 309

11. மகானும், எல்லையற்றவனும், தூமகேதுவும், புருசந்திரனுமான அவன், எங்களைச் செயலுக்கும் சக்திக்கும் செலுத்துவானாக.

12. துவஜனும்,தேவத்வனும், பெருஞ் சோதிமானும், பிரஜாபாலகனுமான அக்கினி,ஸ்தோத்திரங்களோடுள்ள எங்களை, கவிகளைச் செவியுறும் செல்வன்போல் செவியுறுவானாக.

### தேவர்கள்

13. பெரிய தேவர்களுக்கு நமஸ்காரம்; சிறியவர்களுக்கு நமஸ்காரம்; இளைஞர்களுக்கு நமஸ்காரம்; விருத்தர்களுக்கு நமஸ்காரம்; ஆற்றலிருக்கும் நாங்கள் எல்லா தேவர்களையும் போற்றுகிறோம். தேவர்களே! நான் பெரிய தேவர்களுக்குத் துதியைக் கூறத் தவறாமலிருப்பேனாக. 312

## 28. இந்திரனும் மற்றவர்களும்

### 28. சுனச்சேபன்

1. இந்திரனே! சோமரசத்தை அழுத்த, பரந்த அடிப்பாகமுள்ள கல் உயர்த்தப்படுகிறது. மர உரலில் ரசத்தைப் பருகவும்.

2. இந்திரனே! சோமரசத்தை ஏந்த, இரு பரந்த தாங்கிகள், இரு சகனங்கள்போல பயன்படுத்தப்படுகின்றன. உரலில் ரசத்தை அறிந்து பருகவும்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



3. யக்ஞசாலையும், வருபவளும், செல்பவளுமான மனுவிபோல் நீ யக்ஞத்திலே உரலில் சோமரஸத்தை அறிந்து பருகவும்.

4. இந்திரனே! தொழுபவர்கள், மந்தை குதிரையைக் கடிவாளங்களால் பிணைப்பதுபோல், கயிற்றால் இணைக் குங்கால் நீ உரலில் சோமரஸத்தை அறிந்து பருகவும்.

### உரல்

5. உரலே! நீ இருக்கும் ஒவ்வொரு மனையிலும் வெற்றியுள்ள படையின் முரசுபோல் உரத்த நாதத்தை எழுப்பவும். 317

6. வனஸ்பதியே! உரலே! உன் முகப்பிலே காற்று வீசுங்கால் இந்திரனுடைய பானத்துக்காக சோமத்தை எித்தப்படுத்தவும்.

### உரலும் உலக்கையும்

7. யக்ஞத்தின் கருவிகளும் உணவைத் தருபவை யும் மிக்க சப்திப்பவையுமான - உரலும் உலக்கையும் - இந்திரனுடைய தானியத்தைப் புசிக்கும் குதிரைகள் போல விளையாடுகின்றன.

8. இனிய வடிவங்களுள்ள வனஸ்பதிகளான நீங்கள் இருவர்களும் இந்திரனுக்கு இனிய தாரைகளோடு இனிப்பான சோமரஸத்தைப் பொழியுங்கள்.

### ஹரிச்சந்திரன்

9. ஹரிச்சந்திரனே! மிகுதியாயிருக்கும் சோம ரஸத்தைத் தட்டுக்களில் ஏந்தவும்; பவித்திரத்தில் தெளிக்கவும். இன்னும் மீந்திருப்பதை கோ சுமுகத்தின் மீதுவைக்கவும். 321

## 29. இந்திரன்

### 29. சுனச்சேபன்

1. இந்திரனே! சோமரஸத்தைப் பருகுபவனே! சத்தியனே! செல்வப் பிரபுவே! நாங்கள் தருதியற்றவர்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



களாயிருந்தாலும் எங்களை ஆயிரக்கணக்கான உத்தமப் பசுக்களோடும் குதிரைகளோடும் செல்வப்படுத்தவும்.

2. சிப்ரியே! சக்தனே! செல்வபதியே! உன்னு டைய அநுகூலமான செயல் எப்பொழுதும் நிலைக்கிறது. ஆதலால் இந்திரனே! நீ எங்களை ஆயிரக்கணக்கான உத்தமப் பசுக்களோடும் குதிரைகளோடும் செல்வப் படுத்தவும்.

3. அவர்களை உறக்கப்படுத்து. பரஸ்பரம் பார்த் துக்கொண்டு அவர்கள் தூங்குவார்களாக. விழிக்காம லிருப்பார்களாக. இந்திரனே! செல்வபதியே! நீ எங்களை ஆயிரக்கணக்கான உத்தமப் பசுக்களோடும் குதிரை களோடும் செல்வப்படுத்தவும்.

4. எங்களுடைய பகைவர்கள் உறங்குவார்களாக. சூரனே! எங்களுடைய ஈகையர்களான நண்பர்கள் விழித்திருப்பார்களாக. இந்திரனே! செல்வபதியே! நீ எங்களை ஆயிரக்கணக்கான உத்தமப் பசுக்களோடு செல்வப்படுத்தவும்.

5. இந்திரனே! அந்தப் பாபமொழியோடு உன்னைப் போற்றும்-எங்கள் பகைவனுன - இந்த கர்தபத்தை அழிக்கவும். இந்திரனே! செல்வபதியே! நீ எங்களை ஆயிரக்கணக்கான உத்தமப் பசுக்களோடும் - குதிரை களோடும் செல்வப்படுத்தவும். 326

6. பிரதிகூலமான காற்று சுழல வழியோடு சென்று காட்டிலே விலகிச் செல்க. இந்திரனே! செல்வபதியே! நீ எங்களை ஆயிரக்கணக்கான பசுக்களோடும் குதிரை களோடும் செல்வப்படுத்தவும்.

7. எங்களை நிந்திக்கும் ஒவ்வொருவனையும் நீக்கவும். எங்களைத் துன்புறுத்தும் ஒவ்வொருவனையும் விலக்கவும். இந்திரனே! செல்வபதியே! நீ எங்களை ஆயிரக்கணக் கான உத்தமப் பசுக்களோடும் குதிரைகளோடும் செல் வப்படுத்தவும். 328

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



# 30. இந்திரன்

## 30. கனச்சேபன்

1. ஆற்றலே விரும்பும் நாங்கள் இந்த-உங்களுடைய சதக்கிரதுவும், சக்தியுள்ளவனுமான இந்திரனே சோமரஸ பிந்துக்களால், சலத்தால் நிரப்பப்படும் கிணற்றைப் போல் திருப்தி செய்வோமாக.

2. நூறு சுத்த சோமங்களைப் பெறுபவனும், ஆயிரம் மிசிரத ரஸங்களை அடைபவனுமான இந்திரன் பள்ளங்களுக்குப் பாயும் சலங்கள் போல் யக்ஞத்துக்கு வருவானுக.

3. வலியனான இந்திரனுக்காகச் சேரும் சோமரஸம் அவனுடைய உதரத்தினுள் பாவி, அவனுல் ஏந்தப்படுகிறது. கடலில் சலம்போல் அவனில்-அது பரவுகிறது.

4. இந்த சோமம் உனக்காகச் சித்தமாகிறது. நீ கருத் தரித்தப் பெட்டையினிடம் வரும் புருவைப்போல் வருகிருய். அப்பொழுது எங்கள் துதியையும் பெற்றுக் கொள்ளவும்.

5. சூரனே! இந்திரனே! செல்வபதியே! துதியைப் பற்றுபவனே! உன்னைச் சாற்றுபவனுக்குச் சத்தியமான செல்வம் தோன்றுக. 838

6. சதக்கிரதுவே! நீ எங்களை இந்தப் போரிலே பாலிக்க எழுந்து நிற்கவும். நாம் பரஸ்பரம் கலந்து வேறு விஷயங்களையும் சிந்திப்போம்.

7. நாம் நம்முடைய பாலனத்துக்காக மிக்க வலிமையுள்ள இந்திரனே நண்பர்களைப் போல் ஒவ்வொரு யோகத்திலும்-தேவையிலும்-ஒவ்வொரு போரிலும் அழைக்கிறேம்.

8. எங்களுடைய அழைப்பை அவன் செவியுற்ருல் ஆயிரம் பாலனங்களோடும் ஆயிரம் செல்வங்களோடும் எங்களிடம் வருவானுக.

9. நான், தன்னுடைய, வசிக்கும் பழைய இடத்திலிருந்து வழிபடும் பலர்களிடம் செல்பவனை



மனிதனே-இந்திரனே-பூர்வத்திலே என் தந்தையால் அழைக்கப்பட்ட இந்திரனும் உன்னை அழைக்கிறேன்.

10. நாங்கள் விசுவத்தால் வலிக்கப்படுபவனும், வழிபடுபவர்களுக்குப் பலரால் போற்றப்படுபவனும், மனிதனைப் பாலிப்பவனுமான உன்னை நண்பனைப் போல் வேண்டுகிறேம். 837

11. சோம பானஞ் செய்பவனே! நண்பனே! வச்சிராயுதம் ஏந்துபவனே! நண்பர்களும் சோமத்தைப் பருகுபவர்களுமான எங்களுக்கு நீண்ட முகங்களுள்ள பசுக்களையளிக்கவும்.

12. சோம பானஞ்செய்பவனே! வச்சிராயுதமேந்துபவனே! நண்பனே! இங்ஙனம் எங்கள் விருப்பம் நிறைவேறுக. நாங்கள் விரும்புவதையெல்லாம் நீ செய்யவும்.

13. உணவுள்ள நாங்கள் பசுக்களோடு இன்புறுவோமாக. இந்திரனே! நீ எங்களோடு மகிழ்ந்து எங்களுடைய பசுக்கள், பால் செல்வத்தோடும், மிக்கப் பலத்தோடுமாகுக.

14. திருஷ்ணுவே! உனக்கு ஒப்பாகவுள்ள ஒரு தேவனுனை நீ, நீயே தோன்றி விரும்பப்படுங்கால் உன்னைத் தொழுபவர்களுக்குச் செல்வங்களை தேரின் சக்கரங்களின் அச்சை செலுத்துபவைபோல் அளிக்கவும்.

15. சதக்கிரதுவே! உன்னைத் தொழுபவர்கள் விரும்பும் செல்வத்தை சகடத்தின் சலனங்களோடு சுழலும் அச்சுப்போல் அளிக்கிறுய். 842

16. இந்திரன் தன் பகைவர்களிடமிருந்து செல்வங்களை தன்னுடைய கடிப்பவையும், களைப்பவையும், சிறுபவையுமான குதிரைகளால் சதா ஜயிக்கிறுன். தான சீலனும் செயல்கள் மிகுந்தவனுமான அவன் எங்களுக்குப் பொன் தேரைத் தானமாக அளித்தான்.

### அசுவினிகள்

17. அசுவினிகளே! பல குதிரைகள் ஏந்திவரும் உணவுகளோடு இங்கு வாருங்கள். நஸ்ரர்களே!



Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



எங்கள் மணைப் பசுக்களோடும், பொன்னோடும் நிரப்பப் படுக.

18. நஸ்ரர்களே! உங்கள் இருவருக்கும் சமமாக இணைக்கப்பட்ட தேர் அழியாதது. அசுவினிகளே! அது சமுத்திரத்திலே செல்லுகிறது.

19. உங்களுடைய தேரின் ஒரு சக்கரம் திடமான மலையின் உச்சியிலே இருக்கிறது. மற்றொன்று சோதியிலே சுற்றுகிறது.

### உஷை

20. உஷையே! அமிருதமே! துதியால் இன்பமாகும். உன்னை எந்த மனிதன் அனுபவிக்கிறான்? மிக்க ஒளி வீசுபவளே! நீ எவனிடஞ் செல்லுகிறாய்? 847

21. நாங்கள் வியாபகரும், பலதிறமுள்ளவரும், பிரகாசிப்பவருமான உன்னுடைய எல்லைகள், அருகிலோ தூரத்திலோ அறியோம்!

22. சோதியின் மகளே! இந்த உணவுகளோடு வா. எங்கள் செல்வத்தை நிலைப்படுத்தவும் 850

## 31. அக்கினி

**31 அங்கிரஸனின் புதல்வனை ஹிரண்யஸ்தூபன்**

1. அக்கினியே! நீ முதல் அங்கிரஸன். நீ ரிஷி. நீ தேவன். நீ தேவர்களின் மங்கள நண்பனாயிருந்தாய். உன்னுடைய விரதத்திலே கவிகளும், பேரறிஞர்களும், ஒளிப்படை ஏந்துபவர்களுமான மருத்துக்கள் தோன்றினார்கள்.

2. அக்கினியே! நீ முதல்வன். அங்கிரஸர்களின் தலைவன். எல்லா உலகத்தின் நன்மைக்காகப் பலவிதமாய் இருப்பவனும், மேதாவியும், இரு தாய்கள் உள்ளவனும், மனிதர்களுக்காக எங்கும் பலவிதமாய்ச் சயனித்திருப்பவனும், கவியுமான நீ, தேவர்களின் விரதத்தை அலங்கரிக்கிறாய்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



3. நீ மாதரிசுவனுக்கு முதல்வன். வழிபடுபவனுடைய வணக்கத்தை விரும்பி அவனுக்குப் புலப்படவும். உன் ஆற்றலைக் கண்டு சோதியும், புவியும் நடுங்குகின்றன. ஹோதா நியமிக்கப்பட்ட யக்ஞத்திலே நீ சுமையைத் தாங்குகிறாய். பசுவே! நீ மகத்தான தேவர்களை யழைக்கிறாய்.

4. அக்கினியே! நீ மனுவுக்குச் சோதியைப் புலப்படுத்துகிறாய். உத்தமச் செயல் புரிந்த புரூரவசனுக்கு உத்தமப் பயனைத் தருகிறாய். உன்னுடைய பெற்றோர்களால் கடையப்பட்டு நீ விடுவிக்கப்பட்டவுடன், அறிஞர்கள் உன்னைக் கிழக்கிலும், பிறகு மேற்கிலும் எடுத்துச் செல்லுகிறார்கள்.

5. அக்கினியே! நீ விருஷபன். வழிபடுபவனின் செல்வத்தைச் செழிப்பிப்பவன். சட்டுவம் உயர்த்தப்பட்டவுடன் நீ அழைப்பதர்க்கருகன். உணவைத் தருபவனை நீ, அழைப்பை நன்கறிந்து அவியை யளிப்பவனுக்கு முதன்மையாக ஒளியைத் தருகிறாய். பிறகு எல்லா சனங்களையும் ஒளிப்படுத்துகிறாய். 855

6. அக்கினியே! பேரறிஞனை நீ தீமையான வழிகளில் செல்பவனை நன்னெறிப்படுத்தும் செயல்களுக்குச் செலுத்துகிறாய். வீரர்களின் போரிலே எங்கும் பரந்த செல்வமாயிருக்கிறாய். நீ போரிலே வலியர்களை மெலிந்தவர்களால் கொல்லுகிறாய்.

7. அக்கினியே! நீ நித்திய உணவால் மானிடனை உத்தம அமுதத்திலே ஏந்துகிறாய். நீ பிராணிகளையும் பிரசைகளையும் விரும்பும் அறிஞனுக்கு உணவையும் சுகத்தையும் தருகிறாய்.

8. அக்கினியே! செல்வத்துக்காக எங்களால் சாதிக்கப்படும் நீ, யக்ஞஞ் செய்பவனைச் சிறப்பிக்கவும். உன்னால் அளிக்கப்பட்ட புதிய புதல்வனால் நாங்கள் யாகத்தை மேம்படுத்துவோமாக. சோதிபுஞ்சிகளே! எங்களைத் தேவர்களோடு பாலியுங்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



9. மாசற்ற அக்கினியே! தேவர்களின் நடுவே விழித்திருக்கும் தேவனான நீ, பெற்றோர்களின் அருகிலிருப்பவனுமான நீ, எங்களுக்கு நேசமுள்ள மக்களை அளித்து எங்களை எழுப்பவும். கர்த்தாவுக்கு அநுகூலமாகவும். மங்களமான அக்கினியே! நீ எங்களுக்கு எல்லா செல்வங்களையுந் தருகிறாய்.

10. அக்கினியே! நீ பேரறிஞன். நீ எங்களுடைய தந்தை. நீ எங்களுக்கு சீவனை யளிப்பவன். நாங்கள் உன்னுடைய பந்துக்கள். தடைபடாத அக்கினியே! உத்தமப் புருஷர்களோடிருப்பவனும், விரதபாலகனுமான உன்னிடம் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான செல்வங்கள் சேர்கின்றன. 360

11. அக்கினியே! தேவர்கள் உன்னைப் பூர்வத்திலே மானிட நஹூஷனின் மானிடப்படைத் தலைவனாக நியமித்தார்கள். என் தந்தையின் புதல்வன் பிறந்தபோது, அவர்கள் இளையை, மனுவுக்கு ஆசிரியையாகக் கற்பித்தார்கள்.

12 அக்கினியே! போற்றத் தகுந்த நீ, செல்வர்களான எங்களை உன் செல்வங்களால் பாலிக்கவும். நீ எங்கள் புதல்வர்களின் தேகங்களையும் பாலிக்கவும். என் மகனின் மகனுக்கு நீ பசுக்களைப் பாலிக்கிறாய். அவன் எப்பொழுதும் உன்னை ஆக்கமாய்த் துதிக்கிறான்.

13. நான்கு கண்களுள்ள அக்கினியே! தடைபடாமல் யக்ஞத்தை நடத்த, அருகிலிருக்கும் வழிபடுபவனின் பாலகனாக, நீ சுவாலைகளோடு எழுகிறாய். இன்னலற்றவனும் போஷகனுமான உனக்கு அவியை யளித்துத் தொழுபவனுடைய மந்திரத்தை நீ உன் மனத்திலே போற்றுகிறாய்.

14. அக்கினியே! நீ, பலரால் போற்றப்படும் வித்விஜனுக்கு அவசியமான உத்தம செல்வத்தை வழிபடுபவனிக்க அவனுக்கு சம்பாதிக்கும் திறத்தை



விரும்புகிறாய். நீ நல்லெண்ணமுள்ள பாலகன் என அழைக்கப்படுகிறாய். பேரறிஞனை நீ பாலனைக் கற்பிக்கிறாய். திசைகளை நிலைப்படுத்துகிறாய்.

15. அக்கினியே! நீ, தட்சிணையளிக்கும் மனிதனை நன்கு தைக்கப்பட்ட கவசம்போல் எங்கும் பாலிக்கிறாய். மனையிலே வைத்திருக்கும் உத்தம உணவுகளால் அதிதிகளை இன்புறுத்தும் மனிதன் சீவனின் யக்ஞத்தைச் செய்கிறான். சுவர்க்கத்துக்குச் சமமாகிறான். 365

16. அக்கினியே! நீ, எங்களுடைய அசட்டையை மன்னிக்கவும். நாங்கள் இத்தீய வழியில் சென்றுவிட்டோம். நீ உரிய யக்ஞங்கள் செய்பவர்களை ஊக்கப்படுத்துபவனுகவும், பாலகனுகவும் நாடப்பட வேண்டும். நீ பேரறிஞன்: நீ செயல்களை நடத்துபவன். நீ மானிடர்களுக்கு உன்னை நீயாகவே புலன் செய்து கொள்கிறாய்.

17. அவிகளைப் பெறச் செல்லும் சுத்தமான அக்கினியே! நீ யக்ஞ சதனத்துக்கு மநுபோலும், அங்கிரஸன்போலும், யயாதிபோலும், பூர்வத்திலிருந்த மற்றவர்கள் போலும் வரவும். தேவசனங்களை இங்கு அழைத்து வா. அவர்களைத் தருப்பையிலே அமர்த்தவும். அவர்களுக்குப் பிரியமான அவியை அளிக்கவும்.

18. அக்கினியே! எங்களுடைய ஆற்றலோடும், அறிவோடும் இசைந்த தோத்திரத்தால் நீ செழிப்பாயாக. ஆதலால் நீ எங்களை செல்வத்துக்குச் செலுத்தவும். எங்களுக்கு உணவைத் தந்து, எங்களை நல்லறிவிலே ஸ்தாபிக்கவும். 368

## 32. இந்திரன்

### 32. அங்கிரஸனின் மகனை ஹரண்யஸ்தூபன்

1. நான் வச்சிராயுதனான இந்திரன் இயற்றிய முதன்மையான வீரச் செயல்களைக் கூறுகிறேன். அவன் மேகத்தைப் பிளந்தான். அவன் – புவிக்கு – சலங்களை

Astrologer Hariram Thejus hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



கீழே செலுத்தினன். அவன் மலையின் தாரைகளுக்கு வழியைக் கீறினன்.

2. அவன் மலையின்மீது சரணமடைந்திருந்த அஹியைக் கொன்றான். துவஷ்டா தன்னுடைய தூரத்தில் செல்லும் படையைக் கூர்மைப் படுத்தினன். பெரும் சலங்கள் கடலுக்குக் கன்றுகளினிடம் விரையும் பசுக்கள்போல் பாய்ந்தன.

3. காளைபோல் வேகமாயுள்ள அவன் ஸோமத்தைக் குடித்தான் அவன் திரிகத்துர்க்கங்களிலே பொழிந்திருந்த ஸோமத்தைப் பருகினன். மகவான் தன் ஆயுதமான வச்சிராயுதத்தை எடுத்தான். அதனால், அவன் மேகங்களின் நடுவில் தோன்றிய அஹியைக் கொன்றான்.

4. இந்திரனே! நீ அஹிகளின் நடுவே முதற் தோன்றிய மேகத்தைப் பிளந்த பிறகு, நீ மாயாவிகளின் மாயைகளை மாய்த்தாய்; அப்பால் நீ சூரியனையும், உஷையையும், வானையையும், தோற்றுவித்தாய். பிறகு உன்னை எதிர்க்க எந்தப் பகைவனும் இல்லை.

5. இந்திரன் தன்னுடைய மகத்தாயதமிக்கும் வச்சிராயுதத்தால் கருத்த விருத்திரனைத் துண்டம் துண்டமாய்த் துணித்தான். கோடரியால் தாழ்த்தப்பட்ட மரங்களின் தண்டுகள் போல் அஹி புவியின்மீது சாய்த்திருக்கிறான். 378

6. தனக்குச் சமன் எவனும் இல்லையென இறுமாப்படைந்திருந்த விருத்திரன் மகத்தான வீரனும், பலரை யழிப்பவனும், பகைவர்களை விலக்குபவனுமான இந்திரனை எதிர்த்தான். அவன் இந்திரனுடைய பகைவர்கள் அடையும் நாசத்திலிருந்து பிழைக்கவில்லை. இந்திரனுடைய பகைவன் நதிகளின் கரைகளை உடைத்தான்.

7. இந்திரன் தன் வச்சிராயுதத்தால் விருத்திரனின் மலைபோலுள்ள தோளை யடித்தான். கைகளையும், கால்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



களையும் இழந்த அவன் இந்திரனை எதிர்த்தான். ஆண்மையற்ற அவன் வீரியமுள்ளவனைப் போல் பாசாங்கு செய்தான். பிறகு பல அங்கங்களில் பின்னமடைந்த விருத்திரன் உறங்கினன்.

8. மனிதர்களின் மனங்களை இன்புறுத்தும் சலங்கள், இந்தப் புவியிலே சாய்ந்திருக்கும் விருத்திரன் மீது உடைந்த கரைகளின் வழியாய் வெடித்துச் செல்லும் நதி போல் பெருகுகின்றன. விருத்திரன் தன் திறத்தால் தடை செய்த சலனங்களின் பாதங்களின் கீழே அஹி சாய்க்கப் படுகிறான்.

9. இந்திரன் தன் ஆயுதத்தால் விருத்திரனின் அதோபாகத்தைத் தாக்குங்கால், விருத்திரனுடைய தாய் தன் புதல்வன் மீது குனிந்திருந்தாள். தானும் தன் புதல்வனோடு கன்றோடு பசுவைப்போல் தூங்கினள்.

10. சலங்கள், எப்பொழுதும் ஓடுபவையும், எப்பொழுதும் நிற்காதவையுமான தாரைகளால் உந்தப்பட்ட விருத்திரனின் பெயரற்ற தேகத்தை எடுத்துச் செல்லுகின்றன. இந்திரனுடைய பகைவன் நீண்ட தமத்திலே தூங்குகிறான். 378

11 தாஸபத்தினிகளான சலங்கள் அஹியால் பாலிக்கப்பட்டு, பணியால் பசுக்களைப்போல் தடைபட்டிருந்தன. இந்திரன் விருத்திரனைக் கொன்று, தடை செய்த குகையைத் திறந்தான்.

12. இந்திரனே! தேவனும், ஏமனுமான விருத்திரன் உன்னுயுதத்தால் தாக்கப்பட்ட அடிக்கு எதிரடி செய்யுங்கால், நீ குதிரையின் வால்போல் உக்கிரமானாய். நீ பசுக்களை மீட்டினாய். சூரனே! நீ ஸோமரஸத்தை ஜயித்தாய். நீ ஏழு நதிகளைப் பாய விடுவித்தாய்.

13. இந்திரனும் விருத்திரனும் போர் செய்யுங்கால், விருத்திரனால் ஏவப்பட்ட மின்னலும், முழக்கமும்,

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


சொரியப்பட்ட மழையும், இடியேறும் அவனை-இந்திரனைத் துன்புறுத்தவில்லை. மகவான், பகைவனின் மற்ற எல்லாப் படைகளையும் ஜயித்தான்.

14. இந்திரனே! நீ, அஹியைக் கொல்லும் சமயத்தில், பயம் உன் இருதயத்தினுள் நுழைந்தபோது உன்னைத் தவிர வேறு எவரை நீ அளிப்பவனாக நோக்கினாய்? கலங்கிய நீயே தொண்ணூற்றொன்பது நதிகளை துரித பருந்துபோல் கடந்தாய்.

15. வச்சிராயுதம் ஏந்தும் இந்திரன், தாவர ஜங்கமங்களுக்கும், கொம்புகளும் கொம்புகளுமற்ற பிராணிகளுமான அனைத்துக்கும் அரசனானவன். அவன் மானிடர்களுக்கும் அரசனாகி நிலைக்கிறான். அவன் சக்கரத்தின் பற்களைப் பற்றும் பரிதிபோல் தன்னில் அனைத்தையும் அறிகிறான். 888

## 33. இந்திரன்

### 33. அங்கிரஸனின் புதல்வனான ஹிரண்யஸ்தூபன்

1. வாருங்கள்! நாம் திருடப்பட்ட பசுக்களை மீட்க இந்திரனிடஞ் செல்வோம். பகைமையற்ற அவன் நம் முடைய பேரறிவை ஊக்கப்படுத்துகிறான். பிறகு அவன் நமக்கு பசுக்களின் இச் செல்வத்தைக் காணும் உத்தம ஞானத்தை அறிவிப்பான்.

2. நான், தான் போற்றப்பட்ட உறையிடத்துக்குப் பாயும் பருந்துபோல், எதிர்ப்பற்றவனும், செல்வந்தருபவனும், போரிலே வழிபடுபவர்களால் அழைக்கத்தகுந்தவனுமான அந்த இந்திரனை, உத்தய பனுவல்களோடு புகழ்ந்து கொண்டு அவனிடம் பாய்கிறேன்.

3. எல்லாப் படையின் தலைவன் தன் முதுகிலே அம்பருத் தூணியைப் பிணித்திருக்கிறான். தலைவன் பசுக்களை விரும்புபவனுடைய மனைக்குச் செலுத்துகிறான். பேரறிஞனான இந்திரனே! எங்களுக்கு மிக்கச் செல்வத்தை

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com


யளிக்கவும். ஆனால், எங்களிடம் வணிகன் போல் இயங்காதே.

4. இந்திரனே! நீ, செல்வனான தஸ்யுவை கனத்த வச்சிரத்தால் கொன்றாய். துணைவர்களான மருத்துக்கள் உன்னோடு இருந்தாலும், நீ, தனியனாகவே அவனை எதிர்த்தாய். யக்ஞங்களைச் செய்யாமலிருக்கும் ஸனகர்கள் உன் வில்லின் விவித நாசத்தன்மையை அறிந்து, அழிந்தார்கள்.

5. இந்திரனே! யஜிக்காதவர்கள், யஜிப்பவர்களோடு போர்புரிந்து, திரும்பிய முகங்களோடு ஓடினார்கள். உக்கிரனும், குதிரைத் தலைவனும், நிலைத்து நிற்பவனுமான நீ, விரதமற்றவர்களை சோதியிலிருந்தும், புவியிலிருந்தும், வானிலிருந்தும், ஜயித்தபோது அவர்கள் மறைந்தார்கள். 888

6 விருத்திரனின் ஆட்கள், குற்றமற்ற இந்திரனின் படையை எதிர்த்தார்கள். போற்றத்தகுந்த செயல்களுள்ள மனிதர்கள் அவனை ஊக்கப்படுத்தினார்கள். அவர்கள் வீரர்களோடு போர் செய்யும் பேடர்கள்போல் தங்கள் தாழ்மையை அறிந்து, இந்திரனிடமிருந்து உச்சி வழிகளால் ஓட்டமெடுத்தார்கள்.

7. இந்திரனே! நீ, அவர்கள் அழுதாலும், சிரித்தாலும் அவர்களை வானின் கடையெல்லையிலே வீழ்த்திச் செலுத்தினாய். நீ சோதியிலிருந்து தஸ்யுவைத் தள்ளி, தகர்த்தாய். நீ பொழிந்து போற்றுபவனுடைய துதியைப் பாலித்தாய்.

8. அவர்கள் பொன்னாலும், நகைகளாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு புவியிலே எங்கும் பரவியிருந்தார்கள். மிக்க வஞ்சியர்களான அவர்கள் இந்திரனை ஜயிக்க இயலவில்லை. அவன் அவர்களை சூரியோதயத்தோடு கலைத்தான்.

9. இந்திரனே! நீ, உன் மகிமையால் பிரபஞ்சத்தைப் பெருமைப் படுத்தி, சோதியையும், புவியையும் அனு

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



பவிக்குங்கால் மந்திரங்களே அறியாமல் உரைப்பவர் களேயும், அவர்களுக்காகக் கூறுபவர்களின் மந்திரங் களோடு தஸ்யுவையும் ஊதினுய்.

10. தான்யங்களோடு திரவிய த்தை யளிக்கும் தரணியின் மீது சோதியிலிருந்து மழை பெய்யாமலிருந்த போது, பொழிபவனுன இந்திரன் வச்சிராயுதத்தை ஏந்தினுன்; பிறகு அதன் ஒளியால் சலங்களேத் தமத்திலி ருந்து கறந்தான். 398

11. சலங்கள், இந்திரனுக்கு உணவையளிக்கப் பெருகின. ஆனுல் செல்வதற்குரிய நதிகளின் நடுவே இந்திரன் செழித்தான். பிறகு இந்திரன் தன் வலிய வச்சிராயுதத்தால் இந்திரனே எண்ணியிருந்த விருத் திரனேக் கொன்ருன்.

12. இந்திரன், இல்பிசனுடைய திடமான கோட் டைகளே இடித்தான். கொம்புகளுள்ள சுஷ்ணனேக் கொன்ருன். மகவானே! நீ உன்னுடைய முதுத்திறத் தோடும், துரிதத்தோடும் போரை விரும்பும் பகைவனே உன் வச்சிரத்தால் தாழ்த்தினுய்.

13. இந்திரனுடைய ஆயுதம் பகைவர்கள் மீது பாய்ந்தது; அவன் தன் வலிய, கூரிய படையால் அவர்களின் புரங்களே உடைத்தான். பிறகு தன் வச்சி ராயுதத்தோடு விருத்திரனிடஞ் சென்ருன்; அவனேக் கொன்று தன் மனத்தை இன்பப்படுத்தினுன்.

14. இந்திரனே! நீ, உன்னுல் விரும்பப்படும் ருத்ஸனேப் பாலித்தாய். நீ போர் புரியும் விருப்பனுன தசத்யுவைத் தாங்கினுய். உன்னுடைய குதிரைக் குளம்பு களின் புழுதி சோதிக்கு எழுந்தது. சுவித்திரையின் மகன் ஜயத்துக்காக மீண்டும் எழுந்தான்.

15. மகவானே! நிலத்துக்காகப் போர்புரிந்து சலத்தில் அமிழ்த்தப்பட்டு, உன்னுல் சாந்தமடைந்த வனுமான சுவித்திரையின் உத்தம மகனே நீ பாலித்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



தாய், எங்களே வெகு காலமாய்ப் பகைத்து, எதிர்க்கும் வெறுப்பெண்ணவர்களே மிக்கத் துன்பப்படுத்தவும். 398

## 34. அசுவினிகள்

### 34. அங்கிரஸனின் மகன் ஹிரண்யஸ்தூபன்

1. நீங்கள் இன்று எங்களிடம் மும்முறை வாருங்கள் உங்களுடைய தேர் பரந்தது. தானமும் பரந்தது. உங்களுடைய ஐக்கியம் பிரகாசிக்கும் பகலும், பனிமய இரவும் போலாகிறது. அறிஞர்களின் அதீனத்துக்குட் படுங்கள்.

2. உங்களுடைய அனுவரால் அறியப்பட்டதும், ஸோமனுடைய மகளவியை நோக்கிச் சென்றதும், தேன் ஏந்துவதுமான தேருக்கு மூன்று சக்கரங்களுண்டு. ஆதரவுக்காக அதன் மீது மூன்று தூண்கள் நிறுத்தப் பட்டிருக்கின்றன. அசுவினிகளே! நீங்கள் அத்தேரில் பகலில் மூன்று தடவையும், இரவில் மூன்று தடவையும் வருகிறீர்கள்.

3. அசுவினிகளே! ஒரு தினத்தில் மும்முறைவந்து சேர்ந்தங்களே நீங்கும் நீங்கள் இன்று எங்கள் யக்ஞத்தை தேனுல் மும்முறை தெளித்து, இனிமைப்படுத்துங்கள். காலையிலும், மாலையிலும் எங்களுக்கு வலிமை தரும் உணவை யளியுங்கள்.

4. அசுவினிகளே! எங்கள் மனேக்கு மும்முறை வாருங்கள். நீதியுள்ள மனிதனிடமும் மும்முறை செல் லுங்கள். உங்கள் பாலனத்துக்குரியவர்களிடமும் மும் முறை தோன்றுங்கள். எங்களுக்கு மும்மடங்கான அறிவைக் கற்பியுங்கள். எங்களுக்குத் திருப்தியை யளிக்கும் பொருள்களேயும் மும்முறையளியுங்கள். மழையைப் பெய்யும் இந்திரன்போல் எங்களுக்கு மும் முறை உணவைப் பொழியுங்கள்.

5. அசுவினிகளே! எங்களுக்கு மும்முறைச் செல் வங்களே அளியுங்கள். தேவ யக்ஞத்துக்கு மும்முறை

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



வாருங்கள். எங்கள் அறிவை மும்முறைப் பாலியுங்கள்; எங்களுக்கு மும்முறை சௌபாக்கியத்தையும், மும்முறை உணவையும் அளியுங்கள். சூரியனுடைய புதல்வி உங்களுடைய முச்சக்கரத் தேரிலே ஏறினாள். 408

6. அசுவினிகளே! நீங்கள் சோதியில் தோன்றும் ஔடதங்களையும், புனியில், வானில் தோன்றும் ஔடதங்களையும் எங்களுக்கு மும்முறையளியுங்கள். சம்யுவின் செழிப்பை என் புதல்வனுக்கு அளியுங்கள். சுபபதிகளே! தேகத்தின் - முத்தாதுக்களின் சுகத்தையளியுங்கள்.

7. அசுவினிகளே! தினந்தோறும் மும்முறைப் போற்றுவதர்க்குரிய நீங்கள் புவியிலே, முத்தாதுக்களுள்ள தருப்பையின் மீது சயனியுங்கள். பொய்யற்றவர்களே! தேர்த் தலைவர்களே! நீங்கள் தூரத்திலிருந்து முவ்வனகையான யக்ஞத்தின் இடத்துக்கு மும்முறை தேகங்களுக்குச் செல்லும் பிராணன்போல் வாருங்கள்.

8. அசுவினிகளே! நீங்கள் ஏழு தாய்மார்களான ஸித்துக்களோடு வாருங்கள். மூன்று நதிகளான கலசங்கள் இருக்கின்றன. முவ்வித அவிகளும் சித்தமாகின்றன. நீங்கள் முவ்வுலகங்களுக்கு மேலே எழுந்து, இரவாலும், பகலாலும் ஸ்தாபிக்கப்பட்ட சூரியனை வானிலே பாலிக்கிறீர்கள்.

9. பொய்யற்றவர்களே! உங்களுடைய முக்கோணத் தேரின் முச்சக்கரங்கள் எங்கே? அதற்குக் கெட்டியாய் இணைக்கப்பட்ட மூன்று பீடங்கள் எங்கே? உங்களை இந்த யக்ஞத்துக்கு ஏந்திவர அத் தேரை இணைக்கும் வலிய குதிரையை எப்பொழுது பூட்டுவீர்கள்?

10. பொய்யற்றவர்களே! யக்ஞத்துக்கு வாருங்கள். அவி அளிக்கப்படுகிறது. இனிய பானத்தை சுவைக்கும்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



வாய்களோடு ரஸத்தைப் பருகுங்கள். உஷைக்கும் முன்னே ஸவிதா, யக்ஞத்துக்கு உங்களுடைய அற்புதமாயும், நெய்யால் துலக்கமாயுமுள்ள தேரைச் செலுத்துகிறான். 408

11. பொய்யற்றவர்களே! அசுவினிகளே! நீங்கள் மூவித பதினொன்று தேவர்களோடு வாருங்கள். மது பானத்தைப் பருக வாருங்கள். எங்கள் ஆயுளை நீடியுங்கள். குற்றங்களை நீக்குங்கள். எங்கள் பகைவர்களை விலக்குங்கள். எங்களிடம் எப்பொழுதும் இருங்கள்.

12. அசுவினிகளே! உங்களுடைய முவ்வுலகங்களில் செல்லும் தேரிலே எங்களுக்கு வீரப்புதல்வர்களோடு செல்வத்தை ஏந்தி வாருங்கள். நான் என்னைச் செலியும் உங்கள் இருவர்களையும் பாலனத்துக்காக அழைக்கிறேன். போரிலே நாங்கள் ஜயமாக எங்களோடிருங்கள். 410

## 35. ஸவிதா

### 35. அங்கிரஸனின் மகனான ஹிரண்யஸ்தூபன்

1. நான் முதலில் அக்கினியைப் பாலனத்துக்காக அழைக்கிறேன். நான் பாலனத்துக்காக மித்திரனையும், வருணனையும் அழைக்கிறேன். நான் உலகத்துக்குச் சாந்தத்தையளிக்கும் இரவை அழைக்கிறேன். நான் என்னுடைய பாலனத்துக்காக தேவ ஸவிதாவை அழைக்கிறேன்.

2. ஸவிதா, தேவன் கறுத்த வான வழியால் அடிக்கடி வந்து மனிதனையும், அமுதனையும் அவரவர் இடத்தில் ஸ்தாபித்து, எல்லா உலகங்களையும் ஒளிப்படுத்தி, பொன் தேரிலே எங்களிடம் வருகிறான்.

3. தேவ ஸவிதா மேலான வழியால் வருகிறான். கீழான வழியால் போகிறான். போற்றத் தகுந்த அவன்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



இரு. வெண்ணிறக் குதிரைகளோடு தோன்றுகிறான். அவன் தூரத்திலிருந்து இங்கே எல்லா பாவங்களையும் விலக்கி வருகிறான்.

4. போற்றத் தகுந்தவனும், பலவித கதிர்களிலிருப்பவனுமான ஸவிதா, உலகத்திலிருந்து தமத்தை நீக்குமாற்றலுள்ளவன். அவன் பலவிதப் பொன் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும், பொன் நுகங்களிருப்பதும், அருகில் நிற்பதுமான தன் தேரிலே ஏறினான்.

5. அவனுடைய தேரின் பொன் நுகத்திலே இணைக்கப்பட்ட வெண்மையான கால்களுள்ள குதிரைகள் மானிடர்களுக்கு ஒளியைத் தோற்றுவித்தன. மனிதர்களும், எல்லா புவனங்களும், ஸவிதா தேவனுடைய சந்நிதானத்தில் இருக்கிறார்கள்–இருக்கின்றன. 415

6. ஒளியுள்ள உலகங்கள் மூன்று உண்டு. ஸவிதாவினருகில் இரண்டு இருக்கின்றன. ஒன்று மானிடர்களை யமபவனத்துக்குச் செலுத்துகிறது. ஸவிதாவிலே அமிருதர்கள் அச்சானியின் மீது தேர்போல் நிலைக்கிறார்கள். ஸவிதாவின் சிறப்பை அறிபவன், அதைக் கூறுவானாக.

7. கம்பீர சனமுள்ளதும், உயிரையளிப்பதும், தன்னு செலுத்துவதுமான ஸுபர்ணம் – சூரியனுடைய ரசிமி—மூவ்வுலகங்களையும் ஒளிசெய்தது. இப்பொழுது சூரியன் எங்கே? எந்த உலகத்துக்கு அவனுடைய கதிர்கள் சென்றன என்பதை எவன் அறிகிறான்?

8. அவன் புவியின் எட்டுத் திசைகளையும், சிவப்பொருள்களின் மூன்று உலகங்களையும், ஏழு நதிகளையும் ஒளிப்படுத்தினான். பொன் கண்ணுள்ள ஸவிதாதேவன், அளிப்பவனுக்கு விரும்பத் தகுந்த செல்வத்தைத் தருபவனாய் இங்கு வருவானாக.

9. பொன் கையுள்ளவனும், அனைத்தையும் காண்பவனுமான ஸவிதா, சோதிபுஞ்சைகளான இருவர்களின்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



நடுவே செல்லுகிறான். அவன் நோய்களை நீக்குகிறான். சூரியனை அணுகுகிறான். கருப்பை நீக்கும் காந்தியோடு வானிலே பரவுகிறான்.

10. பொன் கையுள்ளவனும், உயிரையளிப்பவனும், ரக்ஷப்படுத்துபவனும், நல்ல நாயகனுமான ஸவிதா, எங்களிடம் வருவானாக. தேவன் மகிமையிலே போற்றப்பட்டு, அரக்கர்களையும், யாதுதானர்களையும் விலக்கி நிற்கிறான்.

11. ஸவிதாவே! உன் வழிகள் பூர்வத்தில் தோன்றியவை. புழுதியற்றவை. வானிலே நன்கு நிலைக்கப்பட்டவை. நீ சுகமாய்க் கடப்பதர்க்கான அவ்வழிகளால் வந்து எங்களை இன்று பாலிக்கவும். தேவனே! எங்களிடம் பேசவும். 421

## 36. அக்கினி

### 36. கோரனின் புதல்வனை கண்வன்

1. நாங்கள், தேவர்களைப் போற்றும் பல சனங்களான உங்களின் நன்மைக்காக மகானும், வேறு ரிஷிகளால் துதிக்கப்படுபவனுமான அக்கினியை சூக்தங்களாலும், சொற்களாலும் வேண்டுகிறோம்.

2. சனங்கள், சக்தியைச் செழிப்பிக்கும் அக்கினியை நாடுகிறார்கள். நாங்கள் அவிகளை அளித்து உன்னைப் போற்றுகிறோம். தாராளமாய் உணவையளிக்கும் நீ, இன்று இங்கே எங்களிடம் நல்ல மனமுடனிருக்கவும்; எங்கள் பாலகனுகவும்.

3. அக்கினியே! நாங்கள் அனைத்தையும் அறிபவனை உன்னை, ஹோதாவாகவும், தூதனுகவும் ஆய்ந்தெடுக்கிறோம். மகத்தாயும், நித்தியமாயுமுள்ள உன்னுடைய சுடர்கள் விதவிதமாய்ப் பரவுகின்றன. உன்னுடைய கதிர்கள் வானைப் பற்றுகின்றன.

4. தேவர்களான மித்திரனும், வருணனும், அர்யமானும், பழைய தூதனை உன்னை எழுப்புகிறார்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



அக்கினியே! உனக்கு அவிகளை அளிப்பவன், உன்னால் செல்வத்தையெல்லாம் பெறுகிறான்.

5. அக்கினியே! நீ இன்புறுத்துபவன். நீ ஹோதா. நீ பிரஜைகளின் மனையைப் பாலிப்பவன். நீ தூதன். உன்னில் எல்லா விரதங்களுமிருக்கின்றன. தேவர்களின் தீரச் செயல்கள் எல்லாம் உன்னில் சுவிகின்றன. 426

6. இளைஞனே! மங்கலமான அக்கினியே! எங்களிடம் நல்ல மனமுள்ளவனான நீ, உன்னிடம் அளிக்கப்படும் அவியையெல்லாம் இப்பொழுதோ, எப்பொழுதோ மிக்க வலியச்களான தேவர்களிடம் செலுத்தவும்.

7. அக்கினியே! தொண்டன் நீயாகவே துலங்கும் உன்னை, துதியோடு இங்ஙனம் வணங்குகிறான், பகைவர்களை ஜயிப்பவர்களான மனிதர்கள், ஹோதாக்களோடு அக்கினியை எழுப்புகிறார்கள்.

8. அழிக்கும் தேவர்கள் உன்னோடு விருத்திரனைக் கொன்றார்கள். அவர்கள் சோதியையும், புவியையும், வானையும் சிவர்கள் வசிக்கப் பரந்த இடமாகச் செய்தார்கள். புகழுள்ள காணை அழைக்கப்பட்டு, கண்வனின் அருகே நின்றான். பசுக்களுக்காகப் போர்களிலே புரவிகர்ச்சித்து, கனைத்தான்.

9. அக்கினியே! நீ மகான். நீ தருப்பையில் அமரவும். தேவர்களை விரும்பும் நீ பிரகாசிக்கவும். உத்தமனும் துதியாருகனுமான அக்கினியே! அழகாயும், அசைவ தாயுமுள்ள புகையை வெளிப்படுத்தவும்.

10. அவிகளை ஏந்துபவனே! மனுவுக்காகத் தேவர்களால் தாங்கப்பட்டவனும், கண்வனாலும், மேத்யாதியாலும், விருஷனாலும், உபஸ்துதனாலும் செல்வமளிக்கத் தாங்கப்பட்டவனும் நீயே. 481

11. நாங்கள் யக்ஞத்துக்காகக் கண்வனால் எழுப்பப்பட்டவனும், மேத்யாதிதியால் மூட்டப்பட்டவனும், இத்தத் துதிகளால் ஏந்தப்படுபவனுமான அக்கினியைப்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



போற்றுகிறோம். அவனுடைய ரசிமிகள் மிக்க மேன்மையாகப் பிரகாசிக்கின்றன.

12. அக்கினியே! நீ உணவைத் தருபவன். நீ செல்வங்களை அளிக்கவும். உன்னால் தேவர்களுடைய நட்புத் தோன்றுகிறது. நீ புகழுள்ள உணவுத் தலைவன். நீ மகான். நீ எங்களை சுகப்படுத்தவும்.

**யூபம்**

13. நீ, தேவனான ஸவிதாவைப் போல் எங்களுடைய பாலனத்துக்காக நேராக நிற்கவும். நாங்கள் உணவளிக்கும் உன்னை, உயர்ந்திருக்கும் உன்னை, உணவுக்காக, நெய்யோடும் யக்ஞஞ் செய்பவர்களோடும் போற்றுகிறோம்.

14. நீ நிமிர்ந்து நிற்கவும். நீ உயர்ந்து, எங்களைப் பாவத்திலிருந்து அறிவால் பாலிக்கவும். அனைத்தையும் புசிக்கும் அரக்கனைப் பற்பப்படுத்தவும். நாங்கள் உலகத்திலே சஞ்சரிப்பதற்கும், சீவனுடனிருக்கவும், எங்களை மேலே உயர்த்தவும். தேவர்களிடம் எங்களுடைய செல்வத்தைச் செலுத்தவும்.

**அக்கினி**

15. அக்கினியே! மிக்கப் பிரகாசிப்பவனே! அரக்கர்களிடமிருந்து எங்களைப் பாலிக்கவும். தானமளிக்கத் துட்டனிடமிருந்தும் எங்களைப் பாலிக்கவும் நீ எங்களைக் கொடும் பிராணிகளிடமிருந்தும், கொல்ல விரும்புவர்களிடமிருந்தும் பாலிக்கவும். 486

16. அக்கினியே! உன்னுடைய எரிக்கும் சுவாலைகளால் தானமளிக்காத எல்லாப் பகைவர்களையும் மண்பாண்டங்களைத் தடியால் அடிப்பதுபோல் நாசப்படுத்தவும்.

17. அக்கினி, ஆண்மையளிக்கும் செல்வத்துக்காகப் போற்றப்படுகிறான். அவன் கண்வனுக்கு சௌபாக்கியத்தைத் தந்தான். அக்கினி! நண்பர்களையும், மெத்யா

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



திதியையும், உபஸ்துதனீயும் செல்வத்துக்காகப் பாலித்தான்.

18. நாங்கள் தூரத்திலிருந்து, உக்கிர தேவனீயும், யதுவையும், துர்வசனீயும், அக்கினியால் அழைக்கிறோம். அக்கினி, நவவாஸ்தவனீயும், பிரஹத்ரதனீயும், துர்வீதியையும், தஸ்யுவைத் தாழ்த்த அழைத்து வருவானாக.

19. அக்கினியே! மநு எல்லா சனங்களுக்காக சோதியான உன்னை ஸ்தாபித்தான். மனிதர்களால் போற்றப்படுபவனும், ருதத்தில் தோன்றி நெய்யால் நிரம்புபவனுமான நீ, கண்வனுக்காகப் பிரகாசிக்கிறாய்.

20. அக்கினியின் சுவாலைகள் மிக்கப் பிரகாசிப்பவை, பலமுள்ளவை. பயங்கரமானவை. அணுகத் தகாதவை. அக்கினியே! நீ எல்லா யாது தானர்களையும், அரக்கர்களையும் எப்பொழுதும் பற்றப்படுத்தவும். எல்லாப் பகைவர்களையும் பற்றப்படுத்தவும். 441

## 37. மருத்துக்கள்

### 37. கோரனின் மகனை கண்வன்

1. கண்வர்களே! மாருதர்களின், எதிர்ப்பற்றதும், கீரிடிப்பதும், நேரிலே துலங்குவதுமான பலத்தைப் போற்றுங்கள்.

2. மருத்துக்கள் புள்ளிமான்களோடும், ஈட்டிகளோடும், கத்திகளோடும், மின்னும் நகைகளோடும், தாமே துலங்கும் ஒளியோடும் ஒருமித்துப் பிறந்தார்கள்.

3. நான், அவர்களின் கைகளிலிருக்கும் கசைகளின் சத்தத்தைச் செவியுறுகிறேன். அது போரிலே வீரத்தை அற்புதமாய் ஊக்கப்படுத்துகிறது.

4. அறிஞர்களே! பகைவர்களை யழிப்பவர்களும், வலியர்களும், மிக்கப் பிரகாசிக்கும் புகழுள்ளவர்களும், உங்களுடைய பலமாயிருப்பவர்களுமான மருத்துக்களுக்கு தேவர்களால் அளிக்கப்பட்ட தோத்திரத்தைக் கூறுங்கள்.

vedicfastro.blogspot.com



5. பசுக்களின் நடுவில் பிறந்தவர்களும், ரஸத்தைப் பருகி வளர்ந்தவர்களுமான மருத்துக்களின் கீரிடிப்பதும், தடைபடாததுமான மாருத பலத்தைப் போற்றுங்கள். 446

6. வீரர்களே! சோதியையும், புவியையும் குலுக்குபவர்களே! மரத்தின் உச்சியைப் போல் சுற்றுப்புரம் அனைத்தையும் ஆட்டும் உங்களின் நடுவில் பெரியவன் எவன்?

7. மனையின் தலைவன் உங்களுடைய உக்கிரமான, கொடுமையான வருகைக்குப் பயந்து, மனையிலே திடமான தூணை நிறுத்தினான். பல பர்வங்களுள்ள மலையும் ஆடுகிறது.

8. உங்களுடைய மிக்க உக்கிர வரவிலே புவியானது, பகைவர்களைக் கண்டு பயப்படும் வலிமையற்ற அரசன்போல் நடுங்குகிறது.

9. மருத்துக்களின் ஜன்மஸ்தானம் திரமாயிருக்கிறது. ஆனால் அவர்களின் தாயான வானிலிருந்து பறவைகள் வர இயலுகின்றன. உங்களுடைய பலம் சோதி, புவிகளின் நடுவே பகிரப்பட்டிருக்கிறது.

10. மருத்துக்கள் மொழியைப் பிறப்பிக்கிறார்கள் அவர்கள் சலங்களை அவற்றின் வழிகளிலே பரத்துகிறார்கள். அவர்கள் கதறும் பசுக்களைத் தங்கள் முழங்கால் வரை சலத்தில் நின்று பருக நீருக்குச் செலுத்துகிறார்கள். 451

11. மருத்துக்கள், தங்கள் முன்னே நீண்டும், பரந்தும், துன்பப்படாததுமான மழை ஏந்தும் மேகத்தைச் செலுத்துகிறார்கள்.

12. மருத்துக்களே! உங்களிடம் பலமுண்டு. நீங்கள் மானிடர்களை அவரவர் செயல்களில் நிலைப்படுத்துங்கள். மேகங்களை ஊக்கப்படுத்துங்கள்.

13. மருத்துக்கள் செல்லும் இடங்களில் எல்லாம் ஆரவாரத்தால் வழியை நிரப்புகிறார்கள். ஒவ்வொருவரும் அவர்களுடைய சத்தத்தைக் கேட்கிறான்.

Astrologer Hariram Thejus hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



14. உங்களுடைய வேகமாயுள்ள தேர்களில் துரிதமாய் வாருங்கள். கண்வர்களின் நடுவே வழிபடுபவர்கள் உண்டு. அவர்களால் இன்புறுங்கள்.

15. உங்களுடைய மதத்துக்காக அவி சித்தமாகிறது. நாங்கள் நீண்ட காலம் வாழ உங்களை வழிபடுபவர்களாயிருக்கிறோம். 456

## 38. மருத்துக்கள்

### 38. கோரனின் மகன் கண்வன்

1. துதிப் பிரியர்களும், நறுக்கப்பட்ட தருப்பையுள்ளவர்களுமான மருத்துக்களே! நீங்கள் இரு கைகளால் எங்களை, மகனைத் தந்தைபோல் எப்பொழுது பற்றுவீர்கள்?

2. இப்பொழுது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? எப்பொழுது நீங்கள் வருவீர்கள்? சோதியிலிருந்து வாருங்கள்; புவியிலிருந்து செல்லாதீர்கள்; உங்களுக்குப் பசுக்களைப் போல் கதறும் வழிபடுபவர்கள் எங்கே?

3. மருத்துக்களே! உங்களுடைய புதிய செல்வங்கள் எங்கே? அருமையான நிதிகள் எங்கே? உங்களுடைய எல்லா சௌபாக்கிய தானங்கள் எங்கே?

4. பிருசினி மக்களான நீங்கள், மனிதர்களாகலாம். ஆனால், உங்களைப் போற்றுபவன் அமிருதனாகிறான்

5. உங்களைப் போற்றுபவன் யமனுக்குச் செல்லும் வழியை மதிக்காமலிருக்க, புற்றரையை அசட்டை செய்யாமலிருக்கும் மான்போல் உங்களைப் போற்ற அசட்டையில்லாமலிருப்பானாக. 461

6. மிக்க ஆற்றலுள்ளவனும், அழிக்கப்படாதவனுமான நிர்ருதி எங்களை அழிக்காமலிருப்பானாக. அவன் எங்கள் தீயவிருப்பங்களோடு ஒழிக.

7. ருத்திரனால் பாலிக்கப்படுபவர்களும், பிரகாசிப்பவர்களும், வலியர்களுமான மருத்துக்கள், பாலிவானத்திலே காற்றில்லாமல் மழையைப் பொழிகிறார்கள். இது உண்மை.



8. கன்றுக்குக் கதறும் பசுவைப்போல், இடி கர்ச்சிக்கிறது. அங்கிருந்து மழை மருத்துக்களால் விடுவிக்கப்படுகிறது.

9. அவர்கள் சலம் ஏந்தும் மேகத்தால் பகலின் மீது தமத்தைப் பரத்துகிறார்கள். பிறகு புவியை வெள்ளத்தால் நிரப்புகிறார்கள்.

10. மருத்துக்களின் கர்ச்சனையிலே புவியின் ஒவ்வொரு மணையும் ஆடுகிறது. மானிடர்களும் நடுங்குகிறார்கள். 466

11. மருத்துக்களே! திறக்கைகளோடும், தடைபடாத ஓலனங்களோடும், அழகான கரைகளுள்ள நதிகளை அனுசரித்து வாருங்கள்.

12. உங்கள் சக்கரங்களின் நேமிகள் திறமாயிருக்க, உங்கள் தேர்களும், குதிரைகளும் நிலையாகுக. உங்களுடைய விரல்களும், கடிவாளங்களைப் பற்றத் திறமுள்ளவையாகுக.

13. அறிஞர்களே! நீங்கள் பிரம்மணஸ்பதியையும், அக்கினியையும், அழகான மித்திரனையும் போற்றப் பொருத்தும் குரலோடு - துதிகளை – எங்கள் முகப்பிலே கூறுங்கள்.

14. உங்கள் வாயால் சுலோகத்தைச் சொல்லுங்கள். மழையைப் பரத்தும் மேகம் போல் அதைப் பரத்துங்கள். யுக்தமான காயத்திரி சூக்தத்தைப் பாடுங்கள்.

15. பிரகாசிப்பவர்களும், போற்றத் தகுந்தவர்களும், போற்றுவதற்குரியவர்களுமான, மருத்துக்களின் படையைப் போற்றுங்கள். அவர்கள், எங்களுடைய இந்த வணக்கத்திலே செழிப்பார்களாக. 471

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 39. மருத்துக்கள்

### 39. கோரனின் மகனுன கண்வன்

1. அனைத்தையும் நடுங்கப்படுத்தும் மருத்துக்களான நீங்கள், தூரத்திலிருந்தே உங்களுடைய உச்சிரபலத்தை சோதியிலிருந்து இறங்கும் ஒளிபோல் கீழாகச் செலுத்துங்கால், எவனுடைய துதியால் கவரப்படுகிறீர்கள்? எந்த இடத்துக்கு எவனிடம் நீங்கள் செல்லுகிறீர்கள்?

2. உங்களுடைய ஆயுதங்கள் பகைவர்களை விலக்க வலியவையாகுக. அவை பகைவர்களைத் தடுக்கத் திறமுள்ளவையாகுக. துதியாருகமான திறமை உங்களுக்குத் தோன்றுக. வஞ்சக மனிதர்களின் வலிமை எங்களை எதிர்க்காமலிருக்க.

3. வீரர்களான மருத்துக்களே! நீங்கள் நிலத்ததைக் குலுத்து. கனத்ததைக் கலுக்குங்கால், உங்களுக்குப் புவியின் வனமரங்களின் இடைகளிலும், மலைகளின் விடர்களிலும் வழியைச் செய்து கொள்கிறீர்கள்.

4. பகையழிப்பவர்களே! உங்களுக்கு எப்பகைவனும், சோதியில் தோன்றவில்லை. புவியிலும் புலனுகவில்லை. ருத்திரமக்களான உங்களுடைய படைபலம் பகைவர்களைப் புடைக்கத் துரிதமாய்ப் பரவுக.

5. அவர்கள் மலைகளை ஆட்டுகிறார்கள்; காட்டுமரங்களைத் தனிப்படுத்துகிறார்கள். தேவர்களான மருத்துக்களே! நீங்கள் உங்களுடைய படையோடு விரும்பும் இடத்துக்குப் போதமடைந்தவர்கள் போல் செல்லுங்கள். 476

6. நீங்கள் உங்கள் தேரிலே புள்ளிமானைப் பூட்டினீர்கள். நடுவில் இணைக்கப்பட்ட சிகப்புமான் தேரை இழுக்கிறது. உங்கள் வருகையை வானஞ்செவியுறுகிறது. மனிதர்கள் கலங்குகிறார்கள்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



7. ருத்திரர்களே! நாங்கள் எங்களுடைய மக்களுக்காக உங்கள் பாலனத்தை நாடுகிறோம். எங்கள் பாலனத்துக்காக நீங்கள் பூர்வத்தில் வந்ததுபோல் கலங்குங்கண்வனிடம் துரிதமாய் வாருங்கள்.

8. மருத்துக்களே! உங்களாலோ, அல்லது வேறு மனிதர்களாலோ செலுத்தப்பட்டு எங்களைத் தாக்கும் சத்துருவை உங்களுடைய பலத்தாலும், திறத்தாலும், பாலனங்களாலும் எங்களிடமிருந்து தனிப்படுத்துங்கள்.

9. பூரணமாய்ப் போற்றத்தருந்த பேரறிஞர்களான மருத்துக்களே! சுண்வனை ஏந்துங்கள். நீங்கள் பூரண பாலனங்களோடு, மழையைத்தரும் மின்னல் போல் எங்களிடம் வாருங்கள்.

10. கொடைவள்ளல்களே! நீங்கள் சம்பூரண பலத்தை ஏந்துகிறீர்கள். புவியை ஆட்டுபவர்களே! சம்பூரண சக்தியைத் தாங்குகிறீர்கள். மருத்துக்களே! நீங்கள் உங்கள் கோபத்தை, ரிஷிகளின் கோபம் போல் பகைவன் மீது சரத்தைச் செலுத்துங்கள். 481

## 40. பிரம்மணஸ்பதி

### 40. கோரனின் மகனுன கண்வன்

1. பிரம்மணஸ்பதியே! எழுந்திருக்கவும். தேவர்களை விரும்பும் நாங்கள் உன்னை வணங்குகிறோம். நல்ல தானங்களையளிக்கும் மருத்துக்கள் எங்களிடம் வருவார்களாக. இந்திரனே! நீ, பிரம்மணஸ்பதியோடு சேர்ந்து விருத்திரனைக் கொல்லவும்.

2. பலத்தின் மகனே! மானிடன், பகைவனுல் கைவிடப்பட்ட செல்வத்துக்காக உன்னையே போற்றுகிறன். மருத்துக்களே! உங்களைப் போற்றுபவன், உத்தம ருதிரைகளையும், உயர்ந்த ஆற்றலையும் தரும் செல்வத்தை அடைவானுக.

3. பிரம்மணஸ்பதி எங்களிடம் வருவானுக. சத்தியத்தைப் பேசும் தேவி எங்களிடம் தோன்றுவாளாக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



தேவர்கள் சத்துருவைத் துடைப்பார்களாக. அவர்கள் மானிடனுக்கு நலத்தைச் செய்வதும், ஐவகைச் செல்வங் களையளிப்பதுமான யக்ஞத்துக்கு எங்களைச் செலுத்து வார்களாக.

4. பெறுவதற்குரிய செல்வத்தை வித்விஜனுக்குத் தருபவன், அழியாத உணவை ஏந்துகிறான். நாங்கள் வழிபடுபவனுக்காக, உத்தம வீரர்களோடிருப்பவளும், மிக்கத்துன்புறுத்துபவளும், துன்பப்படாதவளுமான இவையைப் போற்றுகிறோம்.

5. பிரம்மணஸ்பதி, தேவர்களும், இந்திரனும், வருணனும், மித்திரனும், அர்யமானும் தங்கள் இடமாகச் செய்து கொண்ட மந்திரத்தைக் கூறுகிறான். 486

6. தேவர்களே! நாங்கள் யக்ஞங்களிலே, சுகப் படுத்துவதும் மாசற்றதுமான அந்த மந்திரத்தைச் சொல்வோமாக. நரர்களே! நீங்கள் இந்த மந்திரத்தைச் செவியுற விரும்பினால் உரைப்பதற்குரிய அனைத்தும் உங்களிடம் சேரும்.

7. தேவர்களை விரும்பும் மனிதனிடம் எவன் அணுக லாம்? நறுக்கிய தருப்பையிருப்பவனிடம் எவன் அணுக லாம்? அளிப்பவன் தன் சனங்களோடு-யக்ஞசதனத் துக்குச் செல்லுகிறான். அவன் தன் மனையை, அரிய பொருள்களால் நிரப்புகிறான்

8. பிரம்மணஸ்பதி, பலத்தைத் தன்னில் ஐக்கியப் படுத்தி, பெருக்கிக்கொள்வானாக. அவன் அரசர் களோடு அழிக்கிறான். போர்களிலே அவன் பத்திரமாய் வசிக்கிறான். பெரிய போரிலும், அற்பப்போரிலும் வச்சி ராயுதம் ஏந்தும் அவனை தடுப்பவனும், தண்டுபவனு மில்லை. 489

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



# 41. வருணனும் மற்றவர்களும்

## 41. கோரனின் மகனை கண்டான்

### வருணனும் மித்திரனும் அரியமானும்

1. பேரறிஞர்களான வருணனாலும், மித்திரனாலும் அரியமானாலும் பாலிக்கப்படும் மனிதன், பகைவர்களைத் துரிதமாய்ப் புடைக்கிறான்.

2. தன் கைகளால் போர் போல் செல்வங்கள் குவிக்கப்படுபவனும், பகைவரிடமிருந்து பாலிக்கப் படுவனுமான ஒவ்வொரு மனிதனும் துன்பத்திலிருந்து விலகி செழிக்கிறான்.

3. அரசர்கள் முதலில் வழிபடுபவனின் பகைவர் களின் கோட்டைகளை இடிக்கிறார்கள். பிறகு பகைவர்களை முடித்து, தீச்செயல்களைத் துடைக்கிறார்கள்.

### ஆதித்தியர்கள்

4. ஆதித்தியர்களே! யக்ஞத்துக்குச் செல்லும் உங் களுக்கு வழிசுகமாயிருக்கிறது; முட்களில்லை; துதியாருக மற்ற அவியும் இங்கு செய்யப்படவில்லை.

5. ஆதித்தியர்களே! தலைவர்களே! நேரான வழி யில் உங்களால் அணுகப்படும் யக்ஞம், உங்களைத் திருப்தி செய்வதாகுக. 494

6. உங்களால் ஆதரிக்கப்படும் மானிடன் துன்பத் திலிருந்து நீங்கி, எல்லா அரிய செல்வத்தையும், தன்னைப் போல் சந்தானத்தையும் பெறுகிறான்.

### மித்திரனும் வருணனும் அரியமானும்

7. நண்பர்களே! நாங்கள் மித்திரனுடைய, வருண னுடைய, அரியமானுடைய மகத்தான சிறப்புக்கேற்ற ஸ்தோமத்தை எங்ஙனம் கூறுவோம்?

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



8. நான், தேவர்களிடம் பக்தியோடிருப்பவனே எதிர்ப்பவனும் அல்லது நிந்திப்பவனுமான மனிதனே உங்களிடம் குறை கூறேரும்; ஆனால் நான் துதிகளோடு உன்னை அருகில் அழைக்கிறேன்.

9. தீயச் சொற்களைக் கூற அவன் விரும்பாமலிருப்பானாக; ஆனால் அவன் தன் கையினுள் ஆடும்வரை நான்கு கழங்குகளை ஏந்தும் பூதனை அஞ்சுவானாக. 498

## 42. பூஷணன்

### கோரனின் மகனை கண்வன்

1. பூஷாவே! எங்களைத் துன்ப வழியிலிருந்து கடத்திச் செலுத்தவும். தடுக்கும் துட்டனை விலக்கவும். தேவனே! மேகத்தின் மகனே! எங்கள் முன்னே நடக்கவும்.

2. திருடனும், தீமையிலே இன்புறுபவனுமான துட்டன் தகாத வழியைப் புலப்படுத்தினால் அவனை நீ வழியிலிருந்து விலக்குவாயாக.

3. கபடனும், கள்வனும், தடைப்படுத்துபவனுமான துட்டனை வழியிலிருந்து தளிப்படுத்தி தூரத்திலே செலுத்தவும்.

4. கள்வனும், கபடனுமான துட்டன், எவனையிருந்தாலும் அவனுடைய தேகத்தை உன் கால்களால் மிதிக்கவும்.

5. அறிஞனும், அழகனுமான பூஷணனே! நாங்கள் உன்னிடம் உங்களால் பிதாக்களுக்கு அளிக்கப்பட்ட பாலனத்தை நாடுகிறோம். 503.

6. எல்லாச் செல்வங்களிருப்பவனும், பொன்னாயுதங்கள் அடைந்தவனுமான நீ, தானமளிப்பதற்குரிய செல்வங்களை அளிக்கவும்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



7. எதிர்ப்பவர்களிடமிருந்து எங்களைக் கடத்தவும். சுகவழியால் எங்களைச் செலுத்தவும். பூஷணனே! இந்தப் பயணத்திலே எங்களைப் பாலிக்க அறியவும்.

8. மிகுந்த புற்களுள்ள நிலத்துக்கு எங்களைச் செலுத்தவும்; வழியிலே மிக்கத் தாபம் தோன்றுமலிருக்க, பூஷணனே! இப்பயணத்திலே எங்களைப் பாலிக்க அறியவும்.

9. பூஷணனே! எங்களிடம் அனுகூலமாகவும், எங்களைக் கூர்மைப் படுத்தவும், எங்கள் உதரங்களை நிரப்பவும். பூஷணனே! இப்பயணத்திலே எங்களைப் பாலிக்க அறியவும்.

10. நாங்கள் பூஷணனை நிந்திக்காமலிருக்கிறோம். நாங்கள் அவனைச் சுக்தங்களால் போற்றுகிறோம். நாங்கள் அழகான பூஷணனிடம் செல்வங்களை விரும்புகிறோம். 508

## 43. ருத்திரன்

### 43. கண்வ கௌரன்

1. நாங்கள் எப்பொழுது மிக்க சுகத்தைத் தரும் ஸ்தோத்திரத்தை பேரறிஞனும், மிக்கப் பொழிபவனும், மிருந்த பலமுள்ளவனும், எங்கள் இருதயங்களில் பாலிக்கப்படுபவனுமான ருத்திரனுக்குக் கூறுவோம்?

2. எதனால் அதிதி, ருத்திரத் தன்மையுள்ள ஔடதத்தை எங்களுடைய சனங்களுக்கும், பசுக்களுக்கும், மக்களுக்கும் அளிக்க இசைக்கப்படவேண்டும்?

### ருத்திரனும் மித்திராவருணர்களும்

3. எதனால் மித்திரனும், வருணனும், ருத்திரனும் எல்லாத் தேவர்களும், பரஸ்பரம் அன்புள்ள எங்களுக்கு அனுகூலத்தைச் செய்ய இசைக்கப்படவேண்டும்.

### ருத்திரன்

4. நாங்கள், துதிபாலகனும், யக்ஞபாலகனும், சுகப்படுத்தும் ஔடதங்களுள்ளவனுமான ருத்திரனிடம்,

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



பிரகஸ்பதியின் புதல்வனுன சம்யுவைப்போல் சுகத்தை விரும்புகிறேம்.

5. குத்திரன், சூரியன்போல் சோதியுள்ளவன். பொன்போல் பிரகாசிப்பவன். தேவர்களின் நடுவே உத்தமன். மனிதகளுக்குத் தருபவன். 518

6. அவன் எங்களுடைய குதிரைகளுக்கும், செம்மறி களுக்கும், செம்மறிக் கடாக்களுக்கும், மனிதர்களுக்கும், ஸ்திரிகளுக்கும், பசுக்களுக்கும் இனிமையாய்த் தோன்றும் சுகத்தைத் தருவானுக.

**ஸோமன்**

7. ஸோமனே! நூறு மனிதர்களுக்குப் போதுமான செல்வத்துக்கதிகமான செழிப்பையும், மிக்க பலத்தைப் புலப்படுத்தும் உணவையும் எங்களுக்களிக்கவும்.

8. ஸோமனுக்குத் துன்பத்தையளிப்பவர்களும், எங்களுடைய பகைவர்களும், எங்களைத் துக்கப்படுத்தாம விருப்பார்களாக. இந்துவே! எங்களை உணவோடு பாலிக்கவும்.

9. ஸோமனே! அமுதமான உத்தம ஸ்தானத்தி லுள்ள நீ, யக்ஞசதனத்தில் பிரசைகளின் தலைவனு யிருந்து அவர்கள் உன்னை அலங்காரஞ் செய்யுங்கால் நீ அவர்களை விரும்பவும். 517

## 44. அக்கினி

**44. பிரஸ்கண்வ காண்வன்**
**அக்கினி அசுவினிகள் உஷை**

1. அக்கினியே! சாவற்றவனும், ஜாதவேதஸனு மான நீ, அவியளிப்பவனுக்கு உத்தமவசதியோடு பலவித செல்வத்தை உஷையிலிருந்து ஏந்தி வா. இன்று காலை யோடு எழும் தேவர்களை இங்கு அழைத்து வா.

2. அக்கினியே! நீ விரும்பப்படும் தூதன் அவிகளை ஏற்றுபவன். நீ யக்ஞங்களின் வாகனம். நீ அசுவினி



களோடும் உஷையோடும் சேர்ந்து மிகுத்ததும் பலப் படுத்துவதுமான உணவை எங்களுக்களிக்கவும்.

**அக்கினி**

3. நாங்கள் இன்று தூதனும், வசுவும், பலரால் விரும்பப்படுபவனும், புகைக்கொடி ஏற்றுபவனும், ஒளி பரத்துபவனும், வழிபடுபவனின் யக்ஞத்தைப் பாலிப் பவனுமான அக்கினியை தினத்தின் உதயத்திலே போற்றுகிறேம்.

4. நான் வைகறையிலே உத்தமனும், மிக்க இளை ஞனும், அதிதியும், நன்கழைக்கப்படுபவனும், அவியளிப் பவனிடம் பிரியமாயிருப்பவனும், ஜாதவேதஸனுமான அக்கினியை அவன் எல்லாத் தேவர்களையும் இங்கு அழைத்து வர ஏத்துகிறேன்.

5. அமிருதனே! விசுவபாலகனும், அவி ஏந்துப வனும், யக்ஞாருகனுமான அக்கினியே! நான் அமிருதனும், பாலிப்பவனும், யஜிப்பவனுமான உன்னைப் போற்று வேன். 522

6. மிக்க இளைஞனை அக்கினியே! இன்புறுத்தும் சுவாலைகளிருப்பவனும், எங்கும் அழைக்கப்படுபவனும், எங்களால் வழிபடுபவனுக்காகப் போற்றப்படுபவனு மான நீ, எங்களுடைய விருப்பங்களைத் தெரிந்துகொள்ள வும். பிரஸ்கண்வன் சீவித்திருக்க நீண்ட ஆயுளை யளித்து, தெய்வத்தன்மையுள்ள சனத்தை மேம்படுத் தவும்.

7. சனங்கள், ஹோதாவும் சர்வம்ஞனுமான உன்னை மூட்டுகிறார்கள். அக்கினியே! பலரால் அழைக்கப்படும் நீ, அறிஞர்களான தேவர்களை, இங்கு துரிதமாயழைத்து வரவும்.

8. நல்ல யக்ஞங்களுள்ள அக்கினியே! இரவைத் தொடரும் வைகறையிலே ஸவிதாவையும், உஷையை

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



யும், அசுவினிகளையும், பகனையும், அக்கினியையும் இங்கு அழைத்து வா. கண்வர்கள் அவி செலுத்தும் உன்னை ஒளிப்படுத்துகிறார்கள்.

9. அக்கினியே! நீ யக்ஞங்களையும் சனங்களையும் பாலிப்பவன்; நீ தேவர்களின் தூதன்; நீ இன்று இங்கே உஷையோடு எழுந்து சூரியனைத் தரிசிப்பவர்களான தேவர்களைச் செலுத்தவும்.

10. விபாவசுவான அக்கினியே! நீ அனைவருக்கும் விளங்குகிறாய். நீ பல பழைய உஷைகளைத் தொடர்ந்து பிரகாசித்தாய். நீ கிராமங்களிலிருக்கும் சனங்களைப் பாலிப்பவனாகிறாய் நீ யக்ஞங்களில் பூர்வத்தில் அமர்ந்திருக்கும் மனிதனாகிறாய். 527

11. நாங்கள் யக்ஞ சாதனமும், ஹோதாவும், ரித்விஜனும், பேரறிஞனும், பகைவர்களை அழிப்பவனும், அமுதனும், தூதனுமான உன்னை மநுவைப் போல் ஸ்தாபிக்கிறோம்.

12. நண்பர்களைப் போற்றும் நீ, யக்ஞத்திலே புரோகிதனாய் அமர்ந்து, தேவர்களுக்குத் தூதக்கடனைச் செலுத்துங்கால், உன்னுடைய சுவாலைகள் கடலின் கர்ச்சிக்கும் தரங்கள் போல் கர்ச்சிக்கின்றன, துலங்குகின்றன.

13. அக்கினியே! கூரிய செவிகளோடு என்னைச் செவியுறவும். மித்திரனும், அரியமானும், காலையில் எழும் தேவர்களும், அவி ஏந்தும் தேவர்களைத் தொடர்ந்து செல்லும் அனைவர்களோடு யக்ஞத்திலே தருப்பையின் மீது அமர்வார்களாக.

14. உத்தம தானமளிப்பவர்களும், அக்கினி நாவுள்ளவர்களும், குதத்தை வளர்ப்பவர்களுமான மருத்துக்கள் எங்கள் ஸ்தோமத்தைக் கேட்பார்களாக. அசுவினிகளோடும், உஷையோடும் செயலை நிறைவேற்றும் வருணன் சோமத்தைப் பருகுவானாக. 581

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 45. அக்கினி

### 45. பிரஸ்கண்வ காண்வன்

1. அக்கினியே! நீ எங்களுடைய இந்த யக்ஞத்திலே அசுக்களையும், ருத்திரனையும், ஆதித்தியர்களையும், யக்ஞத்தை நன்கு செய்பவனும், மநுவிலிருந்து, தோன்றுபவனும், நெய் தெளிப்பவனுமான சனத்தையும் போற்றவும்.

2. பேரறிஞர்களான தேவர்கள் அவி அளிப்பவனுக்குப் பயன்களையளிப்பவர்கள். சிவப்பு குதிரைகளுள்ள நீ, எங்கள் துதிகளால் போற்றப்பட்டு மூப்பத்து மூன்று தேவர்களை இங்கு அழைத்துவா.

3. அக்கினியே! மகத்தான விரதமுள்ளவனும் ஜாதவேதஸுனமான நீ, பிரஸ்கண்வனுடைய அழைப்பை-பிரியமேதனையும், அத்திரியையும், விரூபனையும், அங்கிரஸனையும் செவியுறுவதுபோல் செவியுறவும்.

4. மகத்தான செயல்கள் உள்ள பிரியமேதர்கள் யக்ஞங்களின் நடுவே சுத்த சோதியோடு பிரகாசிக்கும் அக்கினியைப் பாலனத்துக்காக அழைக்கிறார்கள்.

5. அவிகளால் அழைக்கப்படுபவனும், பயன்களைத் தருபவனுமான நீ, கண்வ மக்களால் பாலனத்துக்குக் கூறப்படும் இத்தத் தோத்திரங்களைச் செவியுறவும். 586

6. மிகுந்த உணவையளிப்பவனும், பலரால் பிரியப்படுபவனுமான அக்கினியே! மானிடர்களின் புதல்வர்கள் கடற்கேசங்களுள்ள உன்னை, தேவர்களிடம் அவியைச் செலுத்த அழைக்கிறார்கள்.

7. அக்கினியே! அறிஞர்கள், யக்ஞங்களிலே, ஹோதாவும், ரித்விஜனும், மிக்கச் செல்வத்தைத் தருபவனும், செவிச் செல்வனும், மிக்கப் புகழுள்ளவனுமான உன்னை ஸ்தாபிக்கிறார்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



8. அக்கினியே! பொழிந்த ஸோமமுள்ளவர்களும், வழிபடும் மனிதனுடைய அவியை ஏந்துபவர்களுமான அறிஞர்கள் மகத்தாய்ப் பிரகாசிக்கும் உன்னை அவியை அருந்த அழைக்கிறார்கள்.

9. பலத்தால் தோன்றுபவனும், பயனைத்தருபவனும், மனைகளை அளிப்பவனுமான நீ, இன்று இங்கே தருப்பையின் மீது காலையில்வரும் தேவர்களையும், தேவத் தன்மையுள்ள ஜனத்தையும் ஸோமபானத்துக்காக ஸ்தாபிக்கவும்.

10. அக்கினியே! நீ இசைந்த பாக்களோடு முகப்பிலிருக்கும் தேவத் தன்மையுள்ள ஜனத்தை யஜிக்கவும். உத்தம தானங்களையளிக்கும் தேவர்களே! உங்களுக்கு இந்த ஸோமரஸமிருக்கிறது. இதைப் பருகவும். இது நேற்று பொழியப்பட்டது. 541

## 46. அசுவினிகள்

### 46. பிரஸ்கண்வ காண்வன்

1. இதுவரை தென்படாமலிருந்த இந்தப் பிரியமான உஷை வானிலிருந்து இருளை நீக்குகிறாள். அசுவினிகளே! நான் உங்களை மகத்தாய்ப் போற்றுகிறேன்.

2. நான், அழகுள்ளவர்களும், கடலின் மக்களும், செல்வத்தை விருப்பத்தோடு தருபவர்களும், செயலால் மனைகளைத் தருபவர்களுமான தேவர்களைப் பாற்றுகிறேன்.

3. குதிரைகளால் இழுக்கப்படும் உங்களுடைய தேர் போற்றத் தகுந்த சோதிகளுக்கு மேலே செல்லுகிறது. உங்களுக்குத் துதிகள் எங்களால் கூறப்படுகின்றன.

4. பூரணமாயிருப்பவனும், பாலகனும், செயலைக் காண்பவனும், சலங்களை ஆவியாய் எழுப்புபவனுமான சூரியன், எங்களால் அளிக்கப்படும் அவியால் தேவர்களைப் பூர்த்தி செய்கிறான்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



5. பொய்யற்றவர்களே! எங்கள் துதிகளை ஏற்று உங்கள் மனங்களை ஊக்கப்படுத்தும் மதமளிக்கும் ஸோமத்தைப் பருகுங்கள். 546

6. அசுவினிகளே! எங்கள் வறுமையின் தமத்தை விலக்கி, எங்களைத் திருப்தி செய்யப் பலப்படுத்தும் உணவை எங்களுக்குயளியுங்கள்.

7. துதிகளான கடலின் மீது எங்களைக் கடத்திச் செல்ல, கப்பலைப்போல் எங்களிடம் வாருங்கள். அசுவினிகளே! உங்கள் தேரைப் பூட்டுங்கள்.

8. உங்கள் கப்பல் வானுக் கதிகமாய்ப் பரந்திருக்கிறது. அது கடற்கரையிலே நின்றுவிடுகிறது. உங்கள் தேர் நிலத்திலே காத்திருக்கிறது. உங்களைப் போற்ற ஸோமரசங்கள் பொழியப்பட்டிருக்கின்றன.

9. கண்வப்புதல்வர்கள் வினவுகிறார். ஒளி உலகிலிருந்து சூரியனுடைய கதிர்கள் எங்ஙனம் வருகின்றன? சலங்களின் மண்டலத்திலே உஷை எங்ஙனம் தோன்றுகிறாள்? உங்களுடைய வடிவங்களை எங்கு ஸ்தாபிக்க விரும்புகிறீர்கள்?

10. உஷையை ஒளிப்படுத்த சோதியிருந்து பொன் போல் சூரியன் எழுத்தான். அக்கினி இருண்ட சுவாலைகளோடு பிரகாசித்தது. 551

11. சூரியன் இரவின் வரம்புக்கப்பால் செல்ல அவனுக்குத் தக்க வசதி செய்யப்பட்டது. சூரியனுடைய காந்தி தென்பட்டது.

12. தொழுபவன், ஸோமரஸபானத்தால் இன்பமாகும் அசுவினிகளிடமிருந்து தோன்றும் பாலனத்தையெல்லாம் போற்றுகிறான்.

13. சுகத்தைத் தருபவர்களும், உங்களைத் தொழுபவனோடு மனுவோடு சேர்ந்து வசிப்பவர்களுமான நீங்கள் இங்கு ஸோமத்தைப் பருக வாருங்கள். எங்கள் துதியைப் பற்றுங்கள்.



hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



14. உஷை எங்கும் பரவும் அசுவினிகளான உங்கள் வருகையின் சிறப்பை அனுசரிப்பாளாக. இரவிலே அளிக்கப்பட்ட அவிகளால் இன்புறுவீர்களாக.

15. அசுவினிகளே! நீங்கள் இருவர்களும் சோமத்தைப் பருகி உங்களுடைய மாசற்றப் பாலனங்களால் எங்களைச் சுகப்படுத்துவீர்களாக. 558.

## 47. அசுவினிகள்

### 47. பிரஸ் கண்வ காண்வன்

1. அசுவினிகளே! ருதத்தை வளர்ப்பவர்களே! இந்த மிக்க இனியசோமம் உங்களுக்காகப் பொழியப் பட்டது. நேற்றுப் பிழியப்பட்ட இதைப் பருகுங்கள். அவியளிப்பவனுக்குச் செல்வங்களை யளியுங்கள்.

2. அசுவினிகளே! மூன்று பீடங்களுள்ளதும், முவ்வுலகங்களில் செல்வதும், மிக்க அழகுள்ளதுமான தேரிலே வாருங்கள். கண்வர்கள் யக்ஞத்திலே உங்களுக்கு மந்திரத்தைக் கூறுகிறார்கள். இந்த அழைப்பைச் செவியுறுங்கள்.

3. அசுவினிகளே! ருதத்தை வளர்ப்பவர்களே! இந்த மிக்க இனிய சோமரஸத்தைப் பருகுங்கள். அழகுள்ளவர்களும், செல்வம் ஏந்துபவர்களுமான நீங்கள் இன்று அவியளிப்பவனிடம் வாருங்கள்.

4. ஸர்வக்ஞர்களான அசுவினிகளே! நீங்கள் மூன்று இடங்களில் பரத்திய தருப்பையில் அமர்ந்து யக்ஞத்தை சோமரஸத்தால் தெளியுங்கள். புகழ்பெற்ற கண்வப் புதல்வர்கள் பொழிந்துள்ள சோம ரஸங்களோடு உங்களை அழைக்கிறார்கள்.

5. அசுவினிகளே! தூயச் செல்களைப் பாலிப்பவர்களே! நீங்கள் எந்த விரும்பத் தருந்த பாலனங்களால் கண்வனைப் பாலித்தீர்களோ, அவற்றால் எங்களைப் பாலியுங்கள். ருதத்தை வளர்ப்பவர்களே! சோமரஸத்தைப் பருகுங்கள். 561

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



6. சுந்தரத் தோற்றமுள்ளவர்களே! அசுவினிகளே! உங்களுடைய செல்வம், தாங்கும் தேரிலே சுதாஸனுக்கு உணவை ஏந்தி வந்தீர்கள். அங்ஙனம் எங்களுக்குப் பலரால் விரும்பப்படும் செல்வங்களை வானிலிருந்தோ அல்லது சோதிக்கப்பாலிருந்தோ ஏந்தி வாருங்கள்.

7. பொய்யற்றவர்களே! நீங்கள் அருகிலிருந்தாலும் அல்லது தூரத்திலிருந்தாலும் உங்களுடைய தன்கு கற்பிக்கப்பட்ட தேரிலே சூரியனுடைய ரசிமிகளோடு எங்களிடம் வாருங்கள்.

8 உங்களுடைய யக்ஞத்துக்குச் சேவை செய்யும் குதிரைகள் உங்களை எங்களுடைய யக்ஞத்துக்கு ஏந்தி வருக. தல்ல செயலுள்ள ஈகையனுக்கு உணவை யளித்து, தர்ப்பையின் மீது அமருங்கள்.

9. பொய்யற்றவர்களே! அவியளிப்பவனுக்கு நீங்கள் சதா ஏந்திவருவதான சூரிய கவசமுள்ள தேரிலே சோமத்தைப் பருக வாருங்கள்.

10. நாங்கள் எங்களுடைய பாலனத்துக்காகப் புருவகுக்கான அசுவினிகளை சூக்தங்களோடும், தோத்திரங்களோடும் எங்கள் முன்னே அழைக்கிறோம். நீங்கள் கண்வப் புதல்வர்களின் பிரியமான இடத்திலே ஸதா சோமத்தைப் பருகவில்லையோ? 566

## 48. உஷை

### 48. பிரஸ் கண்வ காண்வன்

1. உஷையே! சோதியின் மகளே! எங்கள் மீது செல்வத்தோடு உதயமாகவும். ஒளிச் செல்வியே! தேவியே! மிக்கச் சிறப்போடு உதயமாகவும். தானமுள்ளவளே! பசுச் செல்வத்தோடு உதயமாகவும்.

2. குதிரைகளும், பசுக்களுமிருப்பவர்களும், எல்லாவித செல்வத்தையுமளிப்பவர்களுமான தேவர்களிடம் மானிடர்களின் வசதிகளுக் கவசியமான எல்லாப் பொருள்களுமிருக்கின்றன. உஷையே! பிரியமான மொழிகளை என்னிடம் பேசவும்; செல்வர்களின் செல்வத்தை எங்களிடம் செலுத்தவும்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



3. தேவியான உஷை, பூர்வத்தில் உதயமானுள்: கடலில்-கப்பல்களைச் செலுத்தும் செல்வத்தை விரும்புவர்கள் போல் அவள் தோன்றுங்கால் தேர்களைப் பிரேரிக்கும் உஷை இன்று உதயமாவாளாக.

4. உஷையே! நீ வருங்கால் அறிஞர்கள் தங்கள் மனங்களைத் தானங்களிலே செலுத்துகிறார்கள். இந்த மனிதர்களிலே மிக்க அறிஞனை கண்வன் உன்னுடைய புகழைப் போற்றுகிறான்.

5. உஷை, அனைவரையும் பாலனஞ் செய்பவளாய்த் தினந்தோறும் மனைத் தலைவியைப் போல் எழுகிறாள். இல்லத்துக்குரிய கடமைகளை நடத்துபவள் போலுள்ள அவள் அழிப்பதற்குரிய பிராணிகளை அழிவுக்குச் செலுத்துகிறாள். அவள் வருங்கால் காலுள்ள ஒவ்வொரு பிராணியும் எழுகிறது. அவள் பறவைகளை எழுப்புகிறாள். 571

6. அவள் உழைப்பவனை ஊக்கப்படுத்துகிறாள். ஒவ்வொருவனையும் அவனுடைய நோக்கத்துக்குச் செலுத்துகிறாள். பனியைத் தெளிக்கும் அவள் அசைவின்மையை அறியாள். உணவையளிப்பவளே! நீ உதயமானவுடன் பறக்கும் பறவைகள் பறப்பதை நிறுத்தாமலிருக்கின்றன.

7. இந்தச் செல்வியான உஷை-தன்னுடைய தேர்களை, சூரியன் உதயமாகும் இடத்துக்கு மேலே வெகு தூரமாயிருக்கும் ஸ்தானத்திலே பூட்டினாள். அவள் நூறு தேர்களோடு மானிடர்களிடம் மேன்மையாய் வருகிறாள்.

8. எல்லாப் பிராணிகளும் அவளுடைய பிரகாசத்தைக் காண அவளைப் போற்றுகின்றன. உத்தமத் தலைவியான அவள் உலகத்தை ஒளிப்படுத்துகிறாள். சோதியின் மகள் கைப்பவர்களையும், காய்ப்பவர்களையும் நீக்குகிறாள்.

9. சோதியின் மகளான உஷையே! நீ எங்களுக்குத் தினந்தோறும் உன்னுடைய இன்புறுத்தும் நகையால்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



இருளை விலக்கி, எங்களுக்கு சௌபாக்கியத்தை யளிப்பவளாய்ப் பிரகாசிக்கவும்.

10. உத்தமத் தலைவியான உஷையே! நீ உதயமாகுங்கால் எல்லாப் பிராணிகளின் சுவாசமும், உயிரும் உன்னில் இருக்கின்றன. ஒளிச் செல்வியே! உன்னுடைய உயர்ந்த தேரிலே எங்களிடம் வா. விசித்திரச் செல்வமுள்ள நீ, எங்களுடைய அழைப்பைக் கேட்கவும். 576

11. உஷையே! மானிடர்களின் நடுவிலிருக்கும் பலவித செல்வத்தை நீ ஏற்றுக்கொள்ளவும். உனக்கு அவியை யளித்து, உன்னைப் போற்றும் நல்ல செயலாளனை யக்ஞத்துக்குச் செலுத்தவும்.

12. உஷையே! எல்லாத் தேவர்களையும் வானிலிருந்து சோமத்தைப் பருக அழைத்து வரவும். எங்களுக்கு மேன்மையையும் வலிமையளிப்பதாயுமுள்ள உணவை, பசுக்களோடும் குதிரைகளோடும் அளிக்கவும்.

13. எங்கும் புலப்படுவையும், பிரகாசிப்பவையும், மங்களமயமிருக்கும் ரசிமிகளுள்ள உஷை, விரும்பத் தகுந்தவையும், வண்ணமுள்ளவையும், சுலபமாய்ப் பெறுவதற்குரியவையுமான செல்வங்களை எங்களுக்களிப்பாளாக.

14. பலனத்துக்கும், உணவுக்கும், பழைய ரிஷிகளால் அழைக்கப்பட்டவனும், துதிக்கத் தகுந்தவனுமான உஷையே! நீ உன் சுத்த சோதியோடு எங்கள் அவிகளால் திருப்தியாகி எங்களுடைய ஸ்தோமத்தைப் பற்றவும்.

15. உஷையே! நீ உன் ஒளியால் சோதியின் இரு கதவுகளைத் திறந்தாய். எங்களுக்குப் பரந்த பத்திரமான வாச ஸ்தானத்தை யளிக்கவும். தேவியே! பசுவையும், உணவையும் எங்களுக்களிக்கவும். 581

16. மேன்மையான உஷையே! உணவுத் தருபவளே! நீ எங்களை, மிகுந்துள்ள பலவித செல்வத்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



தோடு, மிகுந்த பசுக்களோடு, பகைவர்களைக் கொல்லும் புகழோடு, உணவோடு சேர்க்கவும். 562

## 49. உஷை

### 49. பிரஸ்கண்வ காண்வன்

1. உஷையே! வானின் ஒளிமய மண்டலத்துக்கு மேலே இருக்கும் இடத்திலிருந்து உன்னுடைய மங்கள வழிகளால் வா. சிகப்பான பசுக்கள் உன்னை சோம ரசமளிப்பவனுடைய மனைக்கு ஏந்தி வருக.

2. உஷையே! சோதி மகளே! நீ ஏறிவருவதும், அழகுள்ளதும், சுகத்தைத் தருவதுமான தேரிலே இன்று நல்ல அவியுள்ள சனத்தினிடம் வா.

3. வெண்ணிற உஷையே! உன் வருகையிலே பிராணிகளும் மனிதர்களும் சலனமாகிறார்கள். சிறகுள்ள பறவைகள் வானப்பிரதேசங்களிலிருந்து எங்கும் பறந்து செல்லுகின்றன.

4. உஷையே! ஒளிக்கதிர்களோடு உதயமாகும் நீ பிரகாசமான பிரபஞ்சத்தை ஒளிப்படுத்துகிறாய். செல்வத்தை விரும்பும் கண்வர்கள் பாக்களோடு உன்னைப் போற்றுகிறார்கள். 586

## 50. சூரியன்

### 50. பிரஸ்கண்வ காண்வன்

சூரியனுடைய குதிரைகள் புகழுள்ளவனும், ஜாத வேதஸனும், தேவனுமான சூரியனை அனைவருங்காண உயரத்திலே ஏந்துகின்றன.

2. விசுவத்தை ஒளிப்படுத்தும் சூரியன் தோன்றுங்கால், நட்சத்திரங்கள் இரவோடு திருடர்கள் போல் நீங்குகின்றன.

3. அவனுடைய ஒளிப்படுத்தும் கிரணங்கள், மனிதர்களை அனுசரித்து சொலிக்கும் அனல்கள் போல் அவர்களைப் பிரகாசப் படுத்துகின்றன.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



4. சூரியனே! நீ வேகத்திலே அனைவரையும் முந்துகிறாய். வழிபடுபவர்களை நோயிலிருந்து நீக்குகிறாய்; சோதியைச் செய்கிறாய்; நீ அனைவருக்கும் புலனுகிறாய்; பிரகாசிக்கும் மண்டலத்தையெல்லாம் ஒளிப்படுத்துகிறாய்

5. நீ தேவர்களுடைய படைகளினிடஞ் செல்லுகிறாய். இங்கு மானிடர்களிடம் வருகிறாய். வியாபகமான சுவர்க்கமும் உன்னைக் காண, நீ எழுகிறாய். 591

6. எந்த சோதியால் சுத்தப்படுத்துபவனும், தீமையிலிருந்து பாலிப்பவனுமான நீ, இந்தப் பிராணிகளை ஏந்தும் உலகத்தை ஒளிப்படுத்துகிறாயோ அச்சோதியை நாங்கள் போற்றுகிறோம்.

7. சூரியனே! நீ இரவுகளையும், பகல்களையும் தோற்றுவித்து, பரந்த வான்வெளியிலே சுற்றுகிறாய். பிறப்புள்ள அனைத்தையும் பார்த்து ஒளிப்படுத்துகிறாய்.

8. தேவனே! சூரியனே! அனைத்தையுங்காண்பவனே! உன் தேரிலே இணைக்கப்பட்ட சுடர்கேசங்களுள்ள ஏழு குதிரைகள் உன்னை ஏந்துகின்றன.

9. சூரியன் தன் தேரைப் பத்திரமாயிழுக்கும் ஏழு பெட்டைக் குதிரைகளை நுகத்திலே இணைத்தான். தாமாகவே சேரும் அவற்றோடு அவன் வருகிறான்.

10. நாங்கள் தமத்தின் மேலே ஏறும் சோதியைப் பார்த்துக் கொண்டு தேவர்களின் நடுவே தேவனும் உத்தமச் சோதியுமான சூரியனை அணுகுகிறோம். 596

11. நட்புக்கதிர்களுள்ள சூரியனே! இன்று உதயமாகி, உயர்ந்த வானிலே எழுந்து, என் இருதயத்தின் நோயையும், என் தேகத்தின் மஞ்சட் காமாலையையும் நீக்குவாயாக.

12. நாங்கள் எங்கள் தேசத்தின் மஞ்சட்காமாலையைக் கிளிகளிடமும், ரோபணைப் பறவைகளிலும் ஹரிதாவ மரங்களிலும் செலுத்துவோமாக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



18. என்னுடைய பகைவனே எதிர்க்கும் சக்தி என்னிடம் இல்லை. என் பகைவனே அழிப்பவனுய் இந்தச் சூரியன் தன் எல்லா ஆற்றலோடும் உதயமானுன். 599

## 51. இந்திரன்

### 51. ஸவ்ய ஆங்கிரஸன்

1. பலரால் போற்றப்படுபவனும், பாவால் இன்புறுபவனும், செல்வக் கடலும், மானிடர்களின் நலத்துக்காகச் சூரியனின் கதிர்கள் போல் செயல்களிருப்பவனுமான அந்தப் புகழ் பெற்ற ஆடாம், இந்திரனைப் பாக்களால் ஊக்கப்படுத்துங்கள். வலியனும், விப்பிரனுமான இந்திரனைப் போகத்துக்காகப் போற்றுங்கள்.

2. பாலிப்பவர்களும், பலப்படுபவர்களுமான ரிபுக்கள், மங்கல சலனமுள்ளவனும், வானத்தை நிரப்புபவனும், மிக்க வலியனும், பகைவர்களைத் தாழ்த்துபவனும், அவர்களால் ஊக்கப்படுத்தும் மொழிகள் கூறப்படுபவனும், சதக்கிரதுவுமான இந்திரனின் முன்னிலையில் சென்றார்கள்.

3. நீ அங்கிரஸர்களுக்காக மேகத்தைத் திறந்தாய். நாறு கபாடங்களால், இயந்திரங்களால் பீடிக்கப்பட்ட அத்திரிக்கு வழியைச் செய்தாய். விமதனுக்கு உணவோடு செல்வத்தையுந் தந்தாய். போர் புரியும் ஸ்தோதாவைப் பாலிக்க நீ உன் வச்சிராயுதத்தைச் செலுத்துகிறுய்.

4. நீ சலங்களின் சிறைத் தடைகளை விலக்கினுய். மலையிலே தூர்த்தன் மறைத்து வைத்திருந்த செல்வத்தைக் கைப்பற்றினுய். அழிக்கும் விருத்திரனே உன் பலத்தால் கொன்றபோது நீ வானிலே அனைவருங்காண சூரியனைப் புலப்படுத்தினுய்.

5. நீ, தங்கள் வாயினுள் அவிகளைத் தமக்கே அளித்துக்கொள்ளும் வஞ்சகர்களை உன்தந்திரங்களால் தாழ்த்தி

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



ஞுய். நீ மானிடர்களுக்கு அனுகூலமாகி பிப்ருவின் புரங்களைப் புடைத்தாய். திருடர்களை யொழிக்கும் சமர்களிலே நீ ரிஜிஸ்வினைப் பாலித்தாய். 604

6. சுஷ்ணன் வீழ்த்தப்படுங்கால் நீ ருத்ஸனைப் பாலித்தாய். நீ அதிதிக்வனைப் பாலிக்க சம்பரனைக் கொன்றுய். நீ உன்னுடைய கால்களால் மகத்தான அற்புதனை மிதித்தாய். பூர்வகாலத்திலிருந்தே நீ தஸ்யுவைக் கொல்லப் பிறந்தாய்.

7. உன்னிலே எல்லா வலிமைகளும் சேர்ந்து இணங்குகின்றன. உன் மனம், சோமரஸத்தைப் பருக விரும்புகிறது. நாங்கள் உன் கைகளில் வச்சிராயுதம் ஏந்தப்பட்டிருக்கிறது என்பதை அறிகிறோம். நீ பகைவனிடமிருந்து எல்லா ஆண்மைகளையும் விலக்கவும்.

8. நீ ஆரியர்களையும், தஸ்யுக்களையும் தெரிந்து கொள்ளவும், விரதமற்றவர்களை யக்ஞகருத்தாவுக்கு வசப்படுத்தவும். ஆற்றலுள்ள நீ யக்ஞம் நடத்துபவனை ஊக்கப்படுத்தவும். நான் உனக்குத் திருப்தியையளிக்கும் யக்ஞங்களிலே உன்னுடைய எல்லா வீரச் செயல்களையும் போற்ற விரும்புகிறேன்.

9. இந்திரன் விரதமனுசரிக்கும் வழிபடுபவனுக்கு விரதமற்றவர்களை வசப்படுத்துகிறுன். போற்றுதவர்களைத் தண்டித்து, போற்றுபவர்களைத் தாங்குகிறுன். வம்சன், வளர்ந்தவனும், வளர்ப்பவனும், சோதியில் பரவுபவனுமான இந்திரனைப் போற்றும் போது யக்ஞத்திலே சேர்க்கப்பட்டிருந்த பொருள்களையெல்லாம் அழித்தான் - எடுத்துச் சென்றுன்.

10 உசனன், தன் திறத்தால் உன்னுடைய தூய்மைப்படுத்தும் திண்மையையும், சோதியையும், புவியையும் அச்சப் படுத்துகிறுன். விருப்பம் போல் இணையும் குதிரைகள்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



காற்றின் வேகத்தோடு வலிமை நிறைந்தவனும், மானிடனின் நண்பனுமான உன்னை, நீ அவியை அருந்த வகித்து வருக. 609

11. இந்திரன் விரும்பத் தகுந்த துதிகளால் இன்பமாகுங்கால் வக்கிரமாய்ச் செல்லும் குதிரைகள் இணைக்கப்பட்டுள்ள வக்கிரத் தேரிலே ஏறுகிறான். உக்கிரனான அவன், மேகத்திலிருந்து சலப்பிரவாகங்களை வெளிப்படுத்துகிறான். அவன் சுஷ்ணனின் பரந்த நகரங்களை வசப்படுத்தினான்.

12. சோமத்தைப் பருக நீயாகவே தேரிலேறுகிறாய். சார்யாதனின் யக்ஞத்தில் நீ விரும்புவது விளங்குகிறது. மற்றவர்களின் யக்ஞங்களிலே நீ பருகி, திருப்தியாவது போல் அவனுடைய சோமங்களிலும் திருப்தியாகவும். இங்ஙனம் நீ சோதியிலே அழியாப் புகழைப் பெறுகிறாய்.

13. இந்திரனே! உன்னைத் துதித்து, உனக்கு சோமரஸத்தையளிப்பவனும், வயது சென்றவனுமான கட்சிவானுக்கு யுவதியான விருசயையளித்தாய். மங்கலச் செயலுள்ள நீ, மேனை என்னும் பெயரோடு விருஷ்ணஸ்வனுடைய புதல்வியாயிருந்தாய். உன்னுடைய இச் செயல்கள் எல்லாம் யக்ஞங்களிலே போற்றத்தகுந்தவை.

14. நற்செயலுள்ளவன் துன்பமாகுங்கால் இந்திரனைத் தஞ்சமடைகிறான். பஜ்ரர்களின் ஸ்தோமம் கதவின் தாண்போல் திரமாயிருக்கிறது. இந்திரன் செல்வங்களைத் தருபவன். அவன் அளிப்பதற்காகக் குதிரைகளையும், பசுக்களையும், தேர்களையும், நிதிகளையும் விரும்புகிறான். அவன் பிரசன்னமாயிருக்கிறான்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



15. இந்த தோத்திரம் விருஷபனும், தானே துலங்குபவனும், சத்தியமான பலத்தையடைந்திருப்பவனும், வலியனுமான இந்திரனுக்குக் கூறப்படுகிறது. இந்திரனே! இந்தப் போரிலே நாங்கள் பல வீரர்களோடு பாலிக்கப்படுவோமாக. உன்னால் அளிக்கப்பட்ட மங்கலமனையிலே நாங்கள் அறிஞர்களோடிருப்போமாக. 614

## 52. இந்திரன்

### 52. ஸவ்ய ஆங்கிரஸன்

1. நான், சோதியைப் புலப்படுத்துபவனும், நூறு தொழுபவர்களால் துரிதமாய்த் துதிக்கப்படுபவனுமான மேஷனை மேம்படுத்துகிறேன். நான் பல துதிகளோடு இந்திரனை என்னுடைய பாலனத்துக்காக யக்ஞத்துக்கு குதிரை போல் துரிதமாகும் தேரிலே ஏற வேண்டுகிறேன்.

2. யக்ஞ உணவில் இன்பமாகும் இந்திரன், நதியைத் தடுத்த விருத்திரனைக் கொன்று, சலங்களைப் பொழிந்த போது அவன பிரவாகங்களின் நடுவே மலையைப் போல் திரமாய் நின்றான். பாலிக்க ஆயிரம் வழிகளுள்ள அவன் பலத்திலே பெருகினான்.

3. நான், பகைவர்களை ஜயிப்பவனும், பனிமயவானில் பரவியிருப்பவனும், மகிழ்ச்சியின் மூலனும், சோமரஸத்தால் மதப்படுபவனும், மகத்தான தானமளிப்பவனுமான இந்திரனை, அறிஞர்களான ரித்விஜர்களோடு சுபச் செயலுள்ள மனத்தோடு அழைக்கிறேன். ஏனெனில் அவனே மிகுந்த உணவை அளிக்கிறான்.

4. அந்த இந்திரனை யக்ஞத்தில் தோன்றும் சோமங்கள் கடலை நிரப்பும் ஆழிக்குரிய நதிகள் போல் நிரப்புகின்றன. இந்திரன், விருத்திரனைக் கொன்றபோது அவனருகிலே குடில வடிவமற்றவர்களும், வலியர்களும், எதிர்ப்பற்றவர்களுமான பாலகர்களாம் - மருத்துக்கள் நின்றார்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5. அவனுடைய நண்பர்கள் ஸோமரஸத்தால் மதப்பட்டு மழை தடுப்பவனே எதிர்த்துக் கொண்டு இந்திரனிடம் இறக்கங்களில் பாயும் நதிகள் போல் முந்தினர்கள். இந்திரன், யக்ஞ உணவால் ஊக்கமடைந்து வலனின் கரப்புக்களை, கிணற்றின் தடைகளைத் திரிதன் போல் நீக்கினன். 619

6. இந்திரனே! சலங்களைத் தடை செய்து, வானின் மேல் மண்டலத்திலே சயனித்திருந்த பரந்துவிரிந்தவனை விருத்திரனுடைய தாடையை, நீ உன் வச்சிரத்தால் அடித்தாய். உன் புகழ் பரந்தது. உன் பலம் சிறந்தது.

7. இந்திரனே! உன்னைப் போற்றும் பாக்கள், ஏரிக்குப் பாயும் சிற்றருவிகள் போல் உன்னிடம் சேர்கின்றன. துவஷ்டா, உனக்குத் தக்க பலத்தைப் பலப்படுத்தினான். உன்னுடைய பகையழிக்கும் வச்சிரத்தைக் கூர் செய்தான்.

8. இந்திரனே! செயல்களை நடத்தும் நீ, மனிதர்களிடம் செல்ல விரும்பி உன் குதிரைகளோடு விருத்திரனைக் கொன்றாய். சலங்களை விடுவித்தாய். கையிலே அயமய வச்சிரத்தை ஏந்தி, வானிலே சூரியனை அனைவருங்காணஸ்தாபித்தாய்.

9. வழிபடுபவர்கள் அச்சமாகி, நானே துலங்குவதும், திறமளிப்பதும், சோதிக்கு எழுவதும், துதியாருகனான பிரஹதஸாமனைப் பாடினர்கள். அப்போது மானிடர்களுக்கு சேவை செய்பவர்களும், சோதியின் பாலகர்களும், சனங்களுக்குப் போராடுபவர்களும், நண்பர்களுமான மருத்துக்கள், இந்திரனே, விருத்திரனைக் கொல்ல ஊக்கப்படுத்தினர்கள்.

10. இந்திரனே! ஸோமரச பானத்தால் நீ மதமடைந்து, உன்னுடைய வச்சிராயுதம், சோதியையும் புவியையும் தடை செய்த விருத்திரனின் தலையை வேகத்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



தோடு துணித்த போது தோன்றிய அஹியின் ஆரவாரத்தால் வந்த பயத்தால் வலிய சோதியும் கிழிந்தது. 624

11. இந்திரனே! இப்புவி பத்து மடங்காய்ப் பரந்தாலும், மனிதர்கள் தினந்தோறும் மிக்கப் பெருகினாலும், மகவானே! உன் வலிமை ஒப்பான புகழைப் பெறுகிறது. உன் பலத்தால் தோன்றிய செயல் வானைப் போல் பரவுகிறது.

12. தீரமனமுள்ள இந்திரனே! பரந்த வானின் மேலிருக்கும் நீ, உன்னுடைய சொந்த பலத்தால் எங்களைப் பாலிக்கப் புவியைப் படைத்தாய். நீ பலத்தின் பிரதிநிதியாகிறாய். நீ ஒளியையும் சலத்தையுங்கடந்து சோதிக்குச் செல்லுகிறாய்.

13. நீ பரந்த புவியின் பிரதிநிதி. நீ அழகிய வீரர்கள் இருக்கும் சுவர்க்கத்தின் தலைவன். நீ உன் மகிமையால் வானையெல்லாம் நிரப்புபவன். இது சத்தியம். மெய்யாகவே உனக்கு ஒப்பு வேறு எவனுமில்லை.

14. இந்திரனே! சோதியும் புவியும் உன் பரப்பை எட்டவில்லை. சோதியின் சலங்களும் உன் வரம்புக்குச் செல்லவில்லை. நீ ஊக்கத்தோடு மழை தடுப்பவனிடம் சண்டை செய்யுங்கால் உனக்கொப்பான பலம் வேறு எவனிடமும் இல்லை. நீ ஒருவனே உலகத்திலுள்ள அனைத்தையும் வசப்படுத்தினாய்.

15. மருத்துக்கள், உன்னை இத்தப் போரிலே போற்றினர்கள். நீ உன்னுடைய கூரிய வலிந்த வச்சிரத்தால் விருத்திரனுடைய முகத்தையடித்த போது, இத்தப் போரிலே எல்லாத் தேவர்களும் உன்னைப் போல் மகிழ்ந்தார்கள். 629

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



# 53. இந்திரன்

## 53. ஸவ்ய ஆங்கிரஸன்

1. நாங்கள் மகத்தான இந்திரனுக்கு மங்களமான தோத்திரத்தைக் கூறுகிறோம். தொழுபவனுடைய மனையிலே இந்திரனுக்குத் துதிகள் தோன்றுகின்றன. அதனால் அவன் செல்வங்களை உறங்குபவர்களின் செல்வத்தைத் துரிதமாய் எடுத்துச் செல்லும் திருடனைப் போல் பற்றுகிறான். கொடுப்பவர்களின் நடுவே துந்துதிக்கு மதிப்பில்லை.

2. இந்திரனே! நீ குதிரைகளை, பசுக்களை, யவத்தையளிப்பவன். நீ செல்வபதி. நீ செல்வ பாலகன். நீ தானத் தலைவன். பழையவன். விருப்பங்களைப் பூர்த்திசெய்து அவற்றை நீக்குபவன். நீ எங்களுடைய நண்பர்களின் நண்பன். நாங்கள் இத்தகைய இந்திரனைப் போற்றுகிறோம்.

3. இந்திரனே! நீ அறிஞன். நீ காந்தன். வீரச் செயல்களை நடத்துபவன். பரவியுள்ள செல்வங்கள் எல்லாம் உன்னுடையவை எனப் பிரசித்தம். ஜயமுள்ள நீ அவற்றைச் சேர்த்து எங்களுக்களிக்கவும். உன்னை விரும்பும் ஸ்தோதாவின் விருப்பத்தைப் பங்கப்படுத்தாதே.

4. நீ இந்த அவிகளாலும், சோமங்களாலும் திருப்தியாகி, வறுமையை – பசுக்களாலும் குதிரைகளாலும் விலக்கவும். நல்ல மனமுள்ளவனாகவும். நாங்கள் எங்கள் தன்யுவைத் தாழ்த்தி எங்களால் அளிக்கப்பட்ட சோமங்களால் திருப்தியான இந்திரனுல் பகைவர்களிடமிருந்து விலக்கப்பட்டு உணவோடு இன்புறுவோமாக.

5. இந்திரனே! நாங்கள் செல்வங்களையும் உணவையும் அடைவோமாக. பலரை இன்புறுத்துபவையும் எங்கும் பிரகாசிப்பவையுமான ஆற்றல்களோடு நாங்கள் உன்னுடைய பலத்தை, பசுக்களை, குதிரைகளையளிக்கும் ஸுமதியால் செழிப்போமாக. 634

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



6. உனக்கு நண்பனாயிருந்த மருத்துக்கள் உனக்கு இன்பத்தைத் தந்தார்கள். தலைவர்களின் தலைவனே! உன்னைத் துதித்து உனக்கு அவிகளையளித்த ஸ்தோதாவை எதிர்த்தப் பதினாயிரந் தடைகளை, பகைவர்களால் எதிர்ப்பற்றிருந்தநீ, நீக்குங்கால், உனக்களிக்கப்பட்டஅவிகளும், சோமங்களும் உனக்கு இன்பத்தையளித்தன.

7. பகைவர்களைப் புடைக்கும் நீ, சண்டையிலிருந்து சண்டைக்குச் செல்லுகிறாய். உன் பலத்தால் கோட்டைக்குப் பின் கோட்டையை இடிக்கிறாய். இந்திரனே! உன்னுடைய எதிரியைத் தாழ்த்தும் துணையான வச்சிராயுதத்தாலே நமுசி என்னும் பெயருள்ள வஞ்சகனைத் தூரத்திலேயே கொன்றாய்.

8. நீ அதிதிக்வனுக்காகக் காஞ்சனையும், பர்ணயனையும் உன் தேஜோமயத் திறமையால் தாழ்த்தினாய். ரிஜிசுவனனுல் முற்றுகையிடப்பட்டிருந்த வங்கிருதனின் நூறு கோட்டைகளை நீ துணையின்றி இடித்தாய்

9. புகழ்பெற்ற இந்திரனை நீ, நண்பனற்ற ஸுசிரவஸனை எதிர்த்த இருபது சனபதிகளையும், அவர்களுடைய 60099 ஆட்களையும், உன்னுடைய முந்தப் படாத-தடைபடாத தேர்ச் சக்கரத்தால் ஜயித்தாய்.

10. இந்திரனே! நீ உன்னுடைய பாலனங்களால் ஸுசிரவஸனைப் பாலித்தாய். தூர்வயாணனையும் உன்னுடைய பாலனங்களால் பாலித்தாய். நீ ருத்ஸனையும், அதிதிக்வனையும், ஆயுவையும் மகத்தாயிருந்த இளைஞனை ஸுசிரவஸனுக்கு அடிமைப் படுத்தினாய். 639

11. நாங்கள் தேவர்களால் பாலனமாகி, இந்திரனே! யக்ஞப் பூர்த்தியிலே உன்னுடைய செல்வ நண்பர்களாயிருப்போமாக. உன்னுல் செழிப்புள்ள, நீடித்துள்ள ஆயுளையும், வீரப்புதல்வர்களையும் அனுபவித்துவரும் நாங்கள் உன்னைப் போற்றுகிறோம். 640

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



# 54. இந்திரன்

## 54. ஸவ்ய ஆங்கிரஸன்

1. மகவானே! நீ எங்களை இந்தப் பரபமான போருக்குச் செலுத்தாதே. உன்னுடைய பலத்தை எவனும் கடக்க இயலாது. நீ கர்ச்சித்தாய். நீ நதிகளின் சலங்களையும் கர்ச்சிக்கச் செய்தாய். புவி எங்ஙனம் உன் பயத்தால் பிடிக்காமலிருக்கும்?

2. அறிஞனும், ஆற்றலுள்ளவனுமான சக்கரனைப் போற்றவும். சோதியையும், புவியையும் தீரத்திறத்தால் துலக்குபவனும், ஈகையால் நமது விருப்பங்களைப் பூர்த்தி செய்பவனும், செவியுறுபவனுமான இந்திரனைப் புகழ்ந்து போற்றவும்.

3. தன்னரசு புரியும் திரமனமுள்ளவனும், தீரனும், காந்தனும், மகானுமான இந்திரனுக்கு ஸ்தோமத்தைக் கூறவும். மிக்கப் புகழுள்ள அவன் ஆற்றலுள்ளவன். பகைவர்களை விலக்குபவன். இரு குதிரைகளால் இழுக்கப்படுபவன். அவன் தேரும் காணியுமாகிறன்.

4. நீ, மகத்தான சோதியின் சிகரத்தை ஆட்டினாய். தீரனான நீ, நீயாகவே சம்பரனைக் கொன்றாய். நீ மதத்தோடும், தீர மனத்தோடும் உன்னுடைய கூரிய ஒளிக்கதிருள்ள வச்சிராயுதத்தை மாயாவிகளான அசுரர்களின் கூட்டத்தின் மீது செலுத்தினாய்.

5. நீ, காடுகளை நிரப்பும் கோஷத்தோடு, சுஷ்ணனால் சேர்க்கப்பட்ட செல்வங்களுள்ள காற்றின் தலையிலே நீ மழையைப் பூர்வத்தில் வீழ்த்தினாய். திறமையும், தீரமாயுமுள்ள மனமிருக்கும் நீ, இன்று அத்தகைய செயல் செய்வதை எவன் தடுப்பான்? 645

6. நீ, நர்யனையும், துர்வசனையும், வய்ய வமிசத்தில் வந்த துர்வீதியையும் பாலித்தாய். சதக்கிரதுவே!

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



நீ ஈருன போரிலே குதிரைகளையும், தேர்களையும் பாலித்தாய். நீ சம்பரனின் தொண்ணூற்றொன்பது கோட்டைகளை இடித்தாய்.

7. இந்திரனுக்கு அவியை யளித்துத் துதியைக் கூறுபவன் இராஜன் ஸத்பதி. தனக்குச் செழிப்பைச் செய்துகொள்கிறன். அவிகளை யளித்து, துதிகளைக் கூறும் அவனுக்கு இந்திரன், தான சீலனுக்கி, சோதியிலிருந்து மேகங்களை மழை பெய்யச் செய்கிறன்.

8. இந்திரனுடைய ஷத்திரம் ஒப்பற்றது. அவனுடைய அறிவும் ஒப்பற்றது. இந்திரனே! உனக்கு அவிகளையளித்து, உன் பலத்தையும் ஆண்மையையும் உறுதிப்படுத்தும் இவர்கள் உனக்கு ஒப்பாகுக.

9. கற்களால் பொழியப்பட்டவையும், சட்டுவங்களில் நிறைந்திருப்பவையுமான இந்த ஸோமரஸங்கள் உனக்குச் சித்தமாயிருக்கின்றன. இவை இந்திரனுக்குரிய பானம். இவற்றைப் பருகவும். இவற்றால் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளவும். பிறருக்கு எங்களுக்கு அளிப்பதற்குரிய செல்வத்திலே உன் மனத்தைச் செலுத்தவும்.

10. இருள், சலதாரையைத் தடுத்தது. மேகம் இந்திரனுடைய வயிற்றினுள் இருந்தது. தடுத்தவன் மறைத்திருந்த சலங்களை யெல்லாம் இந்திரன் கீழே விழச் செய்தான். வெள்ளத்தை வெள்ளம் தொடர்ந்து புவியின் பள்ளங்களிலே பாய்ந்தன. 650

11. இந்திரனே! எங்களுக்கு இன்பமளிக்கும் புகழையளிக்கவும். எங்களுக்குப் பகைவர்களை ஜயிக்கும் மகத்தான பலத்தையும், ஷத்திரத்தையுமளிக்கவும்; எங்களைச் செல்வத்திலே பாலிக்கவும்; அறிஞர்களைப் பாலிக்கவும்; உத்தம சந்தானத்தையும் உணவையுந் தரும் செல்வத்தையளிக்கவும். 651

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 55. இந்திரன்

### 55. ஸவ்ய ஆங்கிரஸன்

1. இந்திரனுடைய பெருமை சோதியின் வெளிக் கதிகமாய்ப் பரந்திருக்கிறது. மாநிலம் மகிமையிலே இந் திரனுக்குச் சமமாகாது. பயங்கரனும், மிக்கப் பலிட்டனு மான அவன், போற்றுபவர்களின் பகைவர்களை எப்பொ முதும் துன்புறுத்துகிறன். அவன் தன் வச்சிராயுதத்தை, தன் கொம்புகளைக் கூர் செய்யும் காளைபோல் கூர் செய்து கொள்ளுகிறன்.

2. அவன் சலமயக் கடல் போல் எங்கும் மிக்கப் பரந்து பெருகும் நதிகளைப் பற்றுகிறன். அவன் சோமத் தைப் பருக காளை போல் பாய்கிறன். போர் வீரனை அவன் நீரத்தால் புகழை விரும்புகிறன்.

3. இந்திரனே! நீ உன்னுடைய சுகத்துக்காக மேகத்தையடிக்களில்லை. நீ மிகுந்த செல்வமுள்ளவர்களை நடத்துகிறய். நாங்கள் உனது அனைவரது முற்றும் தேவத்தன்மையை அறிகிறோம். உக்கிரன் தன் வீரச் செயல்களால் எல்லாத் தேவர்களையும் மூந்துகிறன்.

4. அவன், போற்றும் ரிஷிகளால் வனத்திலே புகழப்படுகிறன். அவன் தன் அழகான ஆற்றல் சனங் களின் நடுவே புலப்படுத்துகிறன். அவன் நாடுபவர் களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறன். அவனுடைய பாலனத்திலிருக்கும் அவிச் செல்வன் அவனுக்குத் துதி யைக் கூறுங்கால், இந்திரன் தன்னைப் போற்ற விரும்பும் மற்றவர்களையும் ஊக்கப்படுத்துகிறன்.

5. போர் வீரனை இந்திரன் தூய்மையான திறமை யோடு பெரிய போர்களிலே சனங்களின் நன்மைக்காகப் போராடுகிறன். அவன் நன்கு அழிக்கும் ஆயுதத்தைச் செலுத்தியவுடன் பிரகாசிப்பவனை இந்திரனில் அனை வர்க்கும் சிரத்தை தோன்றுகின்றது. 656

6. புகழை விரும்புபவனும், அசுரர்களின் நன்றுய்க் கட்டப்பட்ட கோட்டைகளை இடிப்பவனும், புவியைப்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



போல் பரவுபவனும், மறைவிலிருந்து சோதி மண்டலங் களைப் புலப்படுத்துபவனும், நல்ல செயல்களை நடத்து பவனுமான இந்திரன் யஜிப்பவனுக்குப் பொழிய மழை யைப் பெய்தான்.

7. சோமம் பருகுபவனே! உன் மனம் தானத் துக்குத் தோன்றுக. துதிகளைச் செவியுறுபவனே! எங்கள் யக்ஞத்திலே உன் குதிரைகள் வருக. உன் பரகர்கள், குதிரைகளை வசப்படுத்தும் ஆற்றலுள்ளவர்கள். இந்தி ரனே! ஆயுதமேந்திய தந்திரப் பகைவர்கள் உன்னை எதிர்த்து விளங்கார்கள்.

8. நீ உன்னுடைய கைகளிலே தேயாத செல்வத்தை ஏந்துகிறய். புகழுள்ள இந்திரனுடைய தேகத்திலே தடைபடாத பலமிருக்கிறது. உன் அங்கங்கள், சலங்கள் சேர்ந்துள்ள கிணறுகள்போல் பல வீரச் செயல்களோடு சேர்ந்திருக்கின்றன. இந்திரனே! உன் தேகத்திலே பல வீரச்செயல்கள் இருக்கின்றன. 659

## 56. இந்திரன்

### 56. ஸவ்ய ஆங்கிரஸன்

1. அவாவுடன் புசிக்கிற இந்திரன் யக்ஞச் சட்டு வங்களில் நிறைந்துள்ள சோம அவிகளை அருந்த பெட் டைக் குதிரையினிடஞ்செல்லும் அசுவத்தைப் போல் எழுந்தான். அவன் பொன்மயமாயிருப்பதும், இணைக்கப் பட்ட குதிரைகளிருப்பதும், பிரகாசிப்பதுமான தன் தேரை நிறுத்தி, மகத்தான வீரச்செயல்களுக்கு ஊக்கப் படுத்தும் சோமத்தைப் பருகுகிறன்.

2. அவிகளை ஏந்தும் ஸ்தோதாக்கள் இந்திரனிடம் கடலில் பயணமாகும் கப்பல்களில் லாபத்தை விரும்பி நெருங்கும் வணிகர்கள்போல் கூடுகிறர்கள். மேன்மை யான யக்ஞத்தின் பாலகனும், பலிஷ்டனுமான இந்தி ரனுக்குத் தோத்திரத்தோடு, மலையில் மலரைப் பறிக்க ஏறும் பெண்கள்போல் ஏறவும்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



8. அவன் ஜயமுள்ளவன். அவன் மகான். அவன் வீரப்போரிலே அவனுடைய குற்றமற்ற அளிக்கும் ஆற்றல் மலையின் சிகரம்போல் பிரகாசிக்கிறது. அவ்வாற்றலால், இரும்புக்கவசமணிந்தவனும், பகைவனைத் தாழ்த்துபவனுமான அவன், மதப்படுங்கால் மாயாவியான சுஷ்ணனைப் பந்தப்படுத்தி, சிறையில் செலுத்துகிறான்.

4. தேவியான திண்மை, பாலனத்துக்காக மிக்க ஊக்கமளிக்கப்படுபவனும், தீரத் திறமையோடு தமத்தை நீக்குபவனும், பகைவர்களைக் கொடுமைப்படுத்திக் கதறச்செய்பவனுமான இந்திரனுக்கு உஷைக்குச் சூரியனைப் போல் சேவை செய்கிறது.

5. அழிக்கும் இந்திரனே! விருத்திரனுல் மறைத்து வைக்கப்பட்டிருந்தவையும், உயிரைத் தாங்குபவையும், தேயாதவையுமான சலங்களை நீ சோதியின் எல்லாத் திசைகளிலும் பரத்தியபோது நீ ஸோமரஸத்தால் ஊக்க மடைந்து போரிலிருந்தாய். மதத்தால் விருத்திரனைக் கொன்றாய். சலக்கடலைக் கீழே செலுத்தினாய். 664

6. இந்திரனே! மிக்க வலியனான நீ, உன்னுடைய பலத்தால் உலகத்தைத் தாங்கும் மழையை, சோதியிலிருந்து புவியின் பிரதேசங்களின்மீது செலுத்துகிறாய். நீ ஸோமத்தால் மதமாகி மேகங்களிலிருந்து சலங்களை விலக்கினாய். நீ கனத்த பாறையால் விருத்திரனைக் கொன்றாய். 665

## 57. இந்திரன்

### 57. ஸப்ய ஆங்கிரஸன்

1. நான், மிக்கத்தானசீலனும், உத்தமனும், பெருஞ் செல்வனும், மெய்யான வலியனும், செங்குத்திலிருந்து கீழே பாயும் சலங்கள்போல் தடைபடாத வேகமிருப்பவனும், பலத்தைத் தாங்க எங்கும் பரவும் செல்வத்தைப்



பரத்தியவனுமான இந்திரனுக்கு மனத்தை–துதியை யளிக்கிறேன்.

2. இந்திரனே! உலகமெல்லாம் உன்னைப் புகழ்ந்தது. வழிபடுபவனின் அவிகள் பள்ளத்துக்குப் பாயும் சலங்கள்போல் உனக்குப் பெருகின. இந்திரனுடைய அதப்படுத்தும் பொன்னுயுதம் பகைவன் மீது எறியப்படுங்கால் அது மலைமீது சயனிக்கவில்லை.

3. அழகான உஷையே! பயங்கரனும், போற்றத் தகுந்தவனுமான இந்திரனுக்கு நன்றாய் அவியைச் சேர்ப்பிக்கவும். இந்திரனுடைய அனைத்தையும் தாங்குவதும், புகழப்படுவதும், இந்திரத் தன்மையுமுள்ள சோதி இங்குமங்கும் யக்ஞ அவிக்குப் பாகனுல் செலுத்தப்படும் குதிரைகள் போல் இந்திரனுல் செலுத்தப்படுகிறது.

4. இந்திரனே! நீ பலரால் போற்றப்படுபவன். உன்னிடம் மிகுந்த செல்வமுண்டு. நாங்கள் உன் ஆதரவை விரும்பி உன்னிடம் வருகிறோம். துதியை விரும்புபவனே! எங்களுடைய பாக்கள் உன்னையன்றி வேறு எவனுக்குமில்லை. பிராணிகளை விரும்பும் புலிபோல் எங்களுடைய மொழியை விரும்புவாய்.

5. இந்திரனே! உன் சாமர்த்தியம் சிறந்தது. நாங்கள் உன்னுடையவர்கள். மகவானே! இந்தத் தொழுபவனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும். மகனான சோதி உன் பலத்தை அளந்தான்—அறிந்தான். இப்புலியும் உன் பலத்துக்கு வணக்கமளித்தது. 670

6. வச்சிராயுதனான இந்திரனே! நீ உன்னுடைய வச்சிராயுதத்தால் பரந்த மகத்தான மேகத்தைத் துணித்துத் துண்டப்படுத்தினாய். தடைபட்டிருந்த சலங்களைத் தாராளமாய்ப் பெருக கீழே செலுத்தினாய். மெய்யாக நீ ஒருவனுகவே எல்லா பலத்தையும் தாங்குகிறாய். 671

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



## 58. அக்கினி

### 58. நோதா கௌதமன்

1. அக்கினி தேவர்களின் நடுவே ஹோதாவாகவும். வழிபடுவனின் தூதனுகவும் தோன்றுங்கால், பலத்தால் பிறந்தவனும். அமுதனுமான அவன் துரிதமாய்ப் புறப் படுகிறுன். அவன் மிக்க மேன்மையான வழிகளில் சென்று வானை அளந்தான்-செய்தான். அவன் யக்ஞத் திலே அவிகளோடு தேவர்களைப் போற்றுகிறுன்.

2. தேயாத அக்கினிச் சுடரோடு உணவைச் சேர்த்து, அதைப் புசிப்பவனுய்க் காய்ந்த கட்டைகளின் மீது ஏறுகிறுன். தகிக்கும் சுவாலை குதிரையைப் போல் பரவி, பிரகாசிக்கிறது. அவன் சோதியின் உச்சியிலே கர்ச்சிக்கும் மேகத்தைப் போல் கர்ச்சிக்கிறுன்.

3. அவிகளை வகிப்பவனும், ருத்திரர்களாலும், வசுக்களாலும் மதிக்கப்படுபவனும், யக்ஞத்தில் உட்கார் பவனும், செல்வங்களை ஜயிப்பவனும், அமிருதனும், சனங்களால் போற்றப்படுபவனும், மானிடர்களின் நடுவே தேர்போல் கருதப் படுபவனும், பிரகாசிப்பவனு மான அக்கினி தொடர்ந்தளிக்கப்படும் அவிகளை ஏற் கிறுன்.

4. அக்கினி காற்றுல் பிரேரிதமாகி, கர்ச்சித்து, மரங்களின் நடுவே தனது வேகமாய்ப் பரவும் சுவாலை களோடு சுலபமாய் நுழைகிறுன். தேயாதவனும் பிர காசிக்கும் சுவாலையுள்ளவனுமான அக்கினியே! நீ காட்டு மரங்களின் நடுவே காளைபோல் வேகமாய்ப் பாய்ங்கால் உன்னுடைய வழி கருப்பாகிறது.

5. சுவாலைப் படை ஏந்தியவனும், வாயுவால் பிரேரிதமானவனுமான அக்கினி மரங்களின் காயாத ஈரத்தை எதிர்த்து, தன் எல்லாத் திறத்தோடும், திரண்ட சுவாலையோடும், வனத்தில் எல்லாப் பொருள் களையும் வெற்றியுடன் தாக்கி, காளைபோல் பாய்கிறுன். அவன் பறக்குங்கால் அசைபவையும் அசையாதவையு மான அனைத்தும் அலறுகின்றன. 676

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



6. அக்கினியே! மனிதர்களின் நடுவே பிருகுக்கள், தேவத் தன்மையை யடைய, மானிடர்களுக்காக யஜிப்பவனும், தேவர்களை அழைப்பவனும், யக்ஞங்களில் அதிதியும், அன்பு மிகுந்த நண்பனைப் போல் மதிப் பதர்க்குரியவனுமான உன்னை அருமையான செல்வத் தைப் போல் பாலித்தார்கள்.

7. நான் அவிகளோடு ஏழு ஹோதாக்களான அறிஞர்களால், தேவர்களின் ஹோதாவாக அழைக்கப் படும் அந்த அக்கினியைப் போற்றுகிறேன். நான், யக்ஞங்களில் மிக்க யஜிக்கத் தகுந்தவனும் எல்லாச் செல்வங்களை அளிப்பவனுமான அக்கினியிடம் இரத்தினத்தை விரும்புகிறேன்.

8. பலத்தின் மகனே! அனுகூலமாய்ப் பிரகாசிக் கும் அக்கினியே! நீ உன்னைத் துதிப்பவர்களுக்கு இந்த யக்ஞத்திலே இடையருத சுகத்தை யளிக்கவும். உணவின் மகனே! நீ, உன்னைப் போற்றுபவனைப் பாவத்திலிருந்து மீட்டு, இரும்புப் பாலனங்களால் பாலிக் கவும்.

9. விவிதமாய்ப் பிரகாசிக்கும் அக்கினியே! நீ, உன்னைப் போற்றுபவனுக்குப் பாலிக்கும் மனையாகவும். மகவானே! நீ, அவிகளை அளிக்கும் செல்வர்களுக்குச் செல்வமாயிருக்கவும். அக்கினியே! உன்னைப் போற்று பவனைப் பாவத்திலிருந்து பாலிக்கவும். ஞானச் செயல் களின் செல்வனை அக்கினி, காலையிலே எங்களிடம் துரிதமாய் வருவானுக. 680

## 59. அக்கினி

### 59. நோதா கௌதமன்

1. அக்கினியே! இருக்கும் வேறு அனல்கள் எல்லாம் உன்னுடைய கிளைகளாயிருக்கின்றன. அமுதங் களான அவை அனைத்தும் உன்னில் இன்புறுகின்றன. வைசுவாநரனே! நீ மனிதர்களின் நாபி. நீ அவற்றை ஆழமாய் நிறுத்தப்பட்ட தூண்போல் தாங்குகிறுய்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



2. சோதிக்குத் தலையும், புவிக்கு நாபியுமான அக்கினி, சோதிக்கும் புவிக்கும் அரசனுனன். வைசுவாநரனே! எல்லாத் தேவர்களும் உன்னைச் சோதியின் வடிவிலே ஆரியனுக்காகப் பிறப்பித்தார்கள்.

3. செல்வங்கள், அக்கினி வைசுவாநரனிலே, சூரியனிலே, ஒளியின் நித்திய ரசிமிகள் போல் ஸ்தாபிக்கப்பட்டன. மலைகளிலும், ஓஷதிகளிலும், சலங்களிலும், மனிதர்களிலும் இருக்கும் எல்லாச் செல்வங்களுக்கும் நீ அரசனுகிருய்.

4. சோதியும், புவியும் தங்கள் புதல்வனுக்காகப் பரந்தன. ஆற்றலுள்ள ஹோதா, போற்றும் கவிஞன் போல் பழைய, பலவித நிறைந்த பாக்களை, அழகாய்ச் சொல்பவனும், சத்திய பலமுள்ளவனும், அனைத்தையும் காட்டுபவனுமான வைசுவாநரனுக்குக் கூறுகிறன்.

5. வைசுவாநரனே! ஜாத வேதஸனே! உன்னுடைய மகிமை பரந்த சோதியையுங் கடந்தது. நீ, மனுவமிசத்தில் வந்த மனிதர்களுக்கு அரசனுகிருய். நீ, அசுரர்களால் எடுத்துச் செல்லப்பட்ட செல்வத்தைப் போரிலே தேவர்களுக்காக மீண்டும் ஜயித்தாய். 685

6. நான், மழையைப் பொழிபவனும், விருத்திரனைக் கொல்பவன் என மனிதர்களால் புகழப்படுபவனுமான அவனுடைய மகிமையைக் கூறுகிறேன். அக்கினி, வைசுவாநரன், தஸ்யுவை-சலத்திருடுபவனைக் கொன்றன். சலங்களைக் கீழே புவியின் மீது செலுத்தினுன். தடை செய்த சம்பரனை மேகத்தைப் பிளந்தான்.

7. வைசுவாநரன் தன் மகிமையால் எல்லா மனிதர்களிலுமிருக்கிறன். பலவித ஒளிபரப்பும் அவன், போற்றத் தகுந்தவன். மிக்கப் பிரகாசிப்பவன். சத்தியத்தைப் பேசுபவன். சதவனியின் புதல்வனுன புருந்தனுல் பல பாக்களோடு போற்றப்படுகிறன். 687.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 60. அக்கினி

### 60. கோதா கௌதமன்

1. மாதரிசுவன் பிருகுவனிடம் அவியை ஏந்துபவனும், புகழுள்ளவனும், யக்ஞங்களை ஒளிப்படுத்துபவனும், கவனமாய்ப் பாவிப்பவனும், துரிதமாய்ச் செல்லும் தூதனும், சேதி புவிகளின் புதல்வனும், செல்வம் போல் சிறப்புள்ளவனுமான அக்கினியை நண்பனுக வகித்து வந்தான்.

2. தேவர்களும், மனிதர்களும் இந்த அரசனைப் போற்றுகிறர்கள். விரும்பப்படும் தேவர்களும், மானிடர்களும் அவனுக்கு அவிகளை ஏந்துகிறர்கள். போற்றத் தகுந்தவனும், சனங்களின் தலைவனும், விதிப்பவனுமான ஹோதா, வானிலே சூரியோதயத்துக்கு முன்னே சனங்களிலே அறிஞனுல் ஸ்தாபிக்கப்பட்டான்.

3. எங்களுடைய மிக்கப் புதிய¦ புகழுரை - இனிய நாவுள்ளவனும், இருதயத்திலே பிறப்பிக்கத் தகுந்தவனும், மனுவின் சந்தானங்களான மானிடர்களால் யஜிக்கப்பட்டு, அவிகள் அளிக்கப்பட்டு, போர்க்களத்தில் தோன்றுவிக்கப்பட்டவனுமான அக்கினியிடம் செல்க.

4. விரும்பத் தகுந்தவனும், சுத்தப்படுத்துபவனும், மனைகளையளிப்பவனும், உத்தமனும், ஹோதாவுமான அக்கினி, மனிதர்களின் நடுவே-வேதியின் மீது ஸ்தாபிக்கப்பட்டான். அவன் எங்கள் பகைவர்களைத் துன்புறுத்துபவனுகவும், மனைகளைப் பாவிப்பவனுகவும், இம்மாளிகையின் செல்வங்களைப் பாவிப்பவனுகவும் தோன்றுக.

5. தோதம வமிசத்தில் பிறந்த நாங்கள் விரும்பத் தகுந்த துதிகளோடு உன்னைச் செல்வபதியாகப் போற்றுகிறேம். நாங்கள், அவிகள் ஏந்தும் உன்னை, குதிரை சவாரி செய்பவன் போல் தேய்த்து-துடைத்து ஏந்துகிறேம். ஞானச்செயல்களால் செல்வனுன அக்கினி காலையிலே எங்களிடம் துரிதமாய் வருவானுக. 692.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com


# 61. இந்திரன்

## 61. நோதா கௌதமன்

1. நான், வலியனும், வேகனும், மேலானவனும், துதியாருகனும், தடைபடாதவனுமான இந்திரனுக்கு விரும்பத் தகுந்ததுமான ஸ்தோத்தையும், பசித்தவனுக்கு உணவைப் போல் இதமான அவிகளையும் அளிக்கிறேன்.

2. நான் இந்திரனுக்கு அவிகளை, பசித்தவனுக்கு உணவைப்போல் அளிக்கிறேன். என் பகைவர்களைத் துன்புறுத்தப் பயன்படும் பாக்கோஷங்களை நான் எழுப்புகிறேன். மற்றவர்களும், பழைய தலைவனை இந்திரனை இருதயத்தாலும், மனத்தாலும், அறிவாலும் போற்றுகிறார்கள்.

3. நான், என்னுடைய வாயால், அனைவர்க்கும் ஆதரிசமாயிருப்பவனும், நல்ல பொருட்களைத் தருபவனும், பெரியவனும், அறிஞனுமான இந்திரனை மேம்படுத்த துதியின் சக்தியுள்ள சுத்தமான சொற்களோடு அவனுக்குத் துதி முழக்கத்தை எழுப்புகிறேன்.

4. நான், அவனுக்கு ஸ்தோமத்தை, பாகன் உணவைப்பெற தேரைக் கற்பிக்கும் தச்சன் போல் கற்பிக்கிறேன்—கூறுகிறேன். நான், போற்றத் தகுந்த அவனுக்குப் பெறத்தகுந்த துதிகளையும், அறிஞனை இந்திரனுக்கு உத்தம அவிகளையும் அளிக்கிறேன்.

5. நான், அசுரர்களின் புரங்களை இடிப்பவனும், வீரனும், தான நிதியுமான இந்திரனைப்போற்ற, உணவைப் பெற தேரோடு குதிரையை இணைக்கும் மனிதன் போல் நாக்கோடு துதியைச் சேர்க்கிறேன். 697

6. துவஷ்டா, இந்திரனுடைய நல்ல செயலுள்ளதும், குறி தவறுதலுமான வச்சிராயுதத்தைப் போருக்காகக் கூர்ப்பித்தான். அந்தக் கொடும் படையால் பகைதாழ்த்தும் வலியனை தலைவன், விருத்திரனின் அங்கங்களைத் துணித்தான்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com


7. உலகத்தைத் தோற்றுவித்தவனுக்குத் தினம் மும்முறை யக்ஞங்கள் செய்யப்பட்டன. அங்கு அவன் அளிக்கப்பட்ட ஸோமங்களைப் பருகினான். அவிகளைப் புசித்தான். விஷ்ணு—இந்திரன்—அசுரர்களின் பக்குவமான செல்வங்களைத் திருடினான். பகையழிப்பவனும், படை செலுத்துபவனுமான அவன், போராடி மேகத்தைத் துளைத்தான்.

8. தேவபத்தினிகளான ஸ்திரீகள் அஹி அழிக்கப்பட்டவுடன் இந்திரனுக்குத் தோத்திரத்தைக் கூறினார்கள். அவன் பிறந்த புவியையும் சோதியையும் சூழ்ந்தான். உன் மகிமை சோதியையும் புவியையுங் கடந்து பரவுகிறது.

9. அவனுடைய மகிமை சோதியையும் புவியையும் கடந்து செல்லுகிறது. தன் மனையிலே தானே துலங்குபவனும், ஒவ்வொரு வீரச்செயலுக்கும் தகுந்தவனுயிருப்பவனும், தகுதியற்ற பகைவனிடம் போராடாமலிருப்பவனும், போரிலே நிபுணனுமான இந்திரன் போருக்கு அழைக்கிறான்.

10. இந்திரன் தன் திறத்தால், தன் வச்சிரத்தால் ஈரத்தை உறிஞ்சும் விருத்திரனைத் துண்டம் துண்டமாய்த் துளைத்தான். திருடர்களிடமிருந்து மீட்கப்படும் பசுக்களைப் போல் பாலனமளிக்கும் சலங்களை விடுவித்தான் அவியளிப்பவனின் விருப்பங்களுக்கு இணங்கி அவனுக்கு உணவைத் தருகிறான். 702

11. அவனுடைய பலத்தால் நதிகள் விளையாடுகின்றன. ஏனெனில் அவன் தன் வச்சிராயுதத்தால் அவற்றுக்கு வழியைச் செய்தான். அவன், தன் தலைமைத் தன்மையை ஸ்தாபித்து, அளிப்பவனுக்குச் செல்வத்தைப் பொழிந்து, துர்வீதிக்கு நிலையான ஸ்தானத்தை ஸ்தாபித்தான்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



12. இந்திரனே! துரிதமாய்ச் செல்பவனும் திறமையுள்ள தலைவனுமான நீ, விருத்திரனிடமிருந்து மழை தோன்றி, புவியின் மீது சலங்கள் பாய, உன்னுடைய வச்சிராயுதத்தை விருத்திரனின் மீது செலுத்தவும். அவனுடைய கணுக்களை கால்தடைகளை வதைப்பவன் போல் துண்டம் துண்டமாக்கவும்.

13. களத்திலே தன் படைகளைச் செலுத்தி பகைவர்களிடம் போராடி அவர்களை ஜயிக்கும் போது, துரிதமான அந்த இந்திரனுடைய பழைய வீரச் செயல்களைப் புதிய பாக்களோடு போற்றவும்.

14. அவனுடைய பயத்தினால் நிலையான மலைகள் அசையாமலிருக்கின்றன. அவனுடைய தோற்றத்திற்குப் பயந்து சோதியும் புவியும் நடுங்குகின்றன. நோதஸன் அந்த அன்பு மிகுந்த நண்பனின் பாலனத்தைச் சதா போற்றுகிறான். அவன் துரிதமாய் வீரமுள்ள வானுகை.

15. தொழுபவர்களின் துதிகளைப்பெற விரும்புபவனும், பலவித செல்வத்தின் தலைவனும், பகைவர்களைத் தனியனாகவே ஜயிப்பவனுமான இந்திரனுக்குத் துதியளிக்கப்படுகிறது. சுவஸ்வனுடைய புதல்வனை சூரியனைப் பொழிபவனை ஏதசன் போராடுங்கால் அவனை இந்திரன் பாலித்தான். 707

16. இந்திரனே! குதிரைகளை இணைப்பவனே! கோதமப் புதல்வர்கள் உன்னை இன்புறுத்த இந்தத் துதிகளைக் கூறினர்கள். அவர்களுக்குப் பலவித வடிவமுள்ள புத்தியை யளிக்கவும். ஞானச் செயல்களால் செல்வனை அக்கினி காலையிலே எங்களிடம் துரிதமாய் வருவானுக. 708

## 62 இந்திரன்

### 62. கோதா கௌதமன்

1. நாங்கள் அங்கிரஸனைப் போல் சுகப்படுத்தும் ஸ்தோமத்தை மிக்க வலியனும், துதியை விரும்புவனுமான இந்திரனுக்குச் சிந்திக்கிறேம். நாங்கள், போற்றுபவனுல் நல்ல பாக்களோடு போற்றத் தகுந்தவனும், மிக்கப் புகழுள்ளவனுமான தலைவனுக்குத் தோத்திரத்தைக் கூறுவோமாக.

2. அறிஞர்களே! நீங்கள் மகத்தான வலிமையுள்ள இந்திரனுக்கு மகத்தான ஸ்தோத்திரத்தை, முழுங்கத் தக்க ஸாம கானத்தைப் பாடுங்கள். ஏனெனில், அவனுல் நம்முடைய பூர்வ பிதாக்கள் அவனைத் துதித்து, காலடிச் சுவடுகளை அறிந்து, திருடப்பட்ட பசுக்களை மீட்டனர்கள்.

3. இந்திரனும் அங்கிரஸர்களும் தேடுங்கால் ஸரமை தன் குட்டிக்கு உணவைப் பத்திரம் செய்து கொண்டாள். பிறகு பிரகஸ்பதி மலையைப் பிளந்தான். பசுக்களைக் கண்டான். மனிதர்கள் கோக்களோடு கோஷித்தார்கள்.

4. சர்வ சக்தியுள்ள இந்திரனே! நவக்வர்களும், தசக்வர்களுமான ஏழுவிப்பிரர்களால் சுகப்படுத்துவதும், சுவரத்தோடுமுள்ளதுமான ஸ்தோமத்தைப் பெற்ற நீ, உன்னுடைய முழக்கத்தால் மலையும், தானியத்தைத் தரும் மேகமும் கலக்க மடைந்தன.

5. பகையழிப்பவனே! நீ அங்கிரஸர்களால் போற்றப்பட்டு, உஷையோடும், சூரியனோடும் கிரணங்களோடும் இருட்டை விலக்கினாய். இந்திரனே! நீ புவியின் மேடுகளைச் சமப்படுத்தினாய். வானுலகின் மூலத்தைப் பலப்படுத்தினாய். 713

6. அந்த அழகான இந்திரனின் செயல்கள் மிக்க அழகாயிருக்கின்றன. அவனுடைய வீரச் செயல்கள் போற்றத் தக்கவை. புவியிலே ஸ்தாபிக்கப்பட்ட இனிய சலமுள்ள நதிகளை அவன் நிரப்பினான்.

7. போர்ச் செயல்களால் பற்றப்படாத அவன் துதிகளால் போற்றுபவர்களுக்கு இணக்கமாகிறான். அவன் சேர்ந்திருந்த சோதியையும், புவியையும் தனிப்



vedicfastro.blogspot.com

Astrologer Hariram Thejus

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



படுத்தித் திரப்படுத்தினன். சுபச் செயலுள்ள இந்திரன் சுத்தரமாயும், சிறப்பாயுமுள்ள வானிலே சூரியனைப் போல் சோதியையும், புவியையும் ஏந்தினன்.

8. வெவ்வேறு நிறமுள்ளவர்களும், மீண்டும் மீண்டும் பிறப்பவர்களும், எப்பொழுதும் இளைஞர்களுமான இரவு, தன் கருப்பங்கத்தோடு, பகல் தன் வெளுப்பங்கத்தோடு சோதியையும், புவியையும் பூர்வ காலத்திலிருந்தே மாறி மாறிச் சுற்றி வருகிறார்கள்.

9. பலத்தின் புதல்வனும், உத்தமச் செயல்களில் செல்வனும், நடத்தும் ஆற்றலுள்ளவனுமான இந்திரன், பழைய நட்பைப் பாலித்து வருகிறன். இந்திரனே! நீ அபக்குவப் பசுக்களிலே கருப்பிலும், சிகப்பிலும், பக்குவமாயும், வெளுப்பாயுமுள்ள பாலை நிறைக்கிறாய்.

10. பூர்வகாலத்திலிருந்தே ஒரே இடத்தில் நிலைத்திருப்பவையான விரல்கள் தங்கள் ஆற்றல்களால் அமிருதமான விரதங்களைப் பாலிக்கின்றன. சகோதரிகள் பல்லாயிரக் கணக்கான செயல்களோடு பெருமைப்படும் இந்திரனுக்கு, மனைவிகளைப் போலும், தேவ பத்தினிகளைப் போலும் சேவை செய்கிறார்கள். 718

11. அழகான இந்திரனே! நீ வணக்கத்தோடு மந்திரங்களால் போற்றப்படுகிறாய். நித்தியச் செயல்களை விரும்புவர்களும், செல்வங்களை நாடுபவர்களும், அறிஞர்களும் உன்னிடமே வருகிறார்கள். மிக்க ஆற்றலுள்ள இந்திரனே! அவர்களுடைய மனங்கள், விரும்பும் கணவனை அன்பு மிகுந்த மனைவிகளைப் போல் உன்னைப் பற்றுகின்றன.

12. சுந்தரனே! உன்னுடைய கைகளில் வெகு காலமாக ஏந்தப்பட்டிருக்கும் செல்வங்கள் அழியவில்லை. தேயவில்லை. இந்திரனே! நீ தீரன்; துலங்குபவன்; செயலாளன். ஆற்றலுள்ளவனே! உன்னுடைய ஆற்றல்களால் எங்களுக்குச் செல்வத்தையளிக்கவும்,

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



18. ஆற்றலுள்ள இந்திரனே! கோதமனின் புதல்வனை நோதஸன், நித்தியமாயிருப்பவனும், உன்னுடைய தேருக்குக் குதிரைகளை இணைப்பவனும், நிலையான தலைவனுமான உனக்கு இந்தப் புதிய துதியை எங்களுக்காகக் கற்பித்தான். செயல்களால் செல்வத்தைப் பெற்ற அவன் இங்கு காலையிலே துரிதமாய் எங்களிடம் வருவானாக. 721

## 63. இந்திரன்

### 63. கோதம கௌதமன்

1. இந்திரனே! மகானான நீ, இங்கு பயம் தோன்றியவுடன் புலனுகி உன்னுடைய ஆற்றல்களால் சோதியையும் புவியையும் தாங்கினாய். பிறகு உன்னால் பயமடைந்து எல்லாப் பிராணிகளும், மலைகளும், வேறு பரந்த, கனத்த எல்லாப் பொருள்களும் சூரியனின் கதிர்களைப் போல் நடுங்கின.

2. இந்திரனே! நீ பலவித செயல்களுள்ள குதிரைகளைத் தேரிலே இணைக்குங்கால் உன்னுடைய கைகளிலே வச்சிராயுதத்தைத் தொழுபவன் தருகிறான். அதனால் பகைவர்களை எதிர்க்கும் விரும்பத்தகாத செயல்களைச் செய்து ஜயிக்கிறாய். பலரால் போற்றப்படும் நீ, அவர்களுடைய பல கோட்டைகளை இடிக்கிறாய்.

3. இந்திரனே! நீ அனைவரிலும் உத்தமன்; பகைவர்களை எதிர்த்துத் தாழ்த்துபவன்; ரிபுக்களின் தலைவன்; மனிதர்களின் நண்பன்; சத்துருக்களை யழிப்பவன்; நீ, புகழுள்ள இளைஞனை ருத்ஸனைப் பாலித்தாய்; போர்க்களத்திலே நீ, குதிரையோடும், தேரோடும் சுஷ்ணனைக் கொன்றாய்.

4. அனுயாஸமாய்ப் பகைவர்களை ஜயித்து, தஸ்யுக்களைப் புறப்படுத்தி, பொழியுமனமுள்ள சூரனான நீ, விருத்திரனைக் கொன்ற போது, மழை தருபவனும், வச்சிராயுதம் ஏந்துபவனுமான நீ, பெற்ற புகழை ருத்ஸன் பெற, நீ அவனை ஊக்கப்படுத்தினாய்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5. இந்திரனே! எந்தத் தீரனையும் துன்புறுத்த விருப்பமில்லாமலிருக்கும் நீ, நாங்கள் பகைவர்களின் வெறுப்புக் குட்பட்டால், உன்னைப் போற்றும் எங்களுடைய குதிரைகளுக்குத் திசைகளே யெல்லாம் பரத்துவாயாக. வச்சிராயுத மேந்துபவனே! எங்களுடைய சத்துருக்களே மட்பாண்டத்தை, தண்டத்தால் உடைப்பது போல் உடைக்கவும். 726

6. மனிதர்கள், போரின் முழக்கத்திலும், செல்வந்தரும் சமரிலும் உன்னை அழைக்கிறார்கள். வலியனை இந்திரனே! உன்னுடைய இந்தப் போரிலே வீரர்களால் நாடப்பட்டு, பெறுவதற்குரிய பாலனம் எங்களுக்குத் தோன்றுக.

7. இந்திரனே! வச்சிராயுதம் ஏந்துபவனே! நீ புருகுத்ஸனுக்காகப் போர்செய்து அவனுடைய ஏழு புரங்களே இடித்தாய். நீ ஸுதாஸனுக்காக அன்ஹஸனின் செல்வத்தைத் தருப்பையின் நுனியைப் போல் நறுக்கினாய். அரசனே! உனக்கு அவிகளே அளித்து உன்னைத் திருப்தி செய்யும் அவனுக்குச் செல்வத்தை யளித்தாய்.

8. தேவனை இந்திரனே! நீ எங்களுக்குப் புவியெங்கும் பரந்த உணவை, சலத்தைப் போல் பெருகச் செழிப்பிக்கவும். சூரனே! நீ எங்கும் பெருக சலத்தை யளிப்பதுபோல் எங்களுக்கு உணவைச் சீவிக்க அளிக்கவும்.

9. இந்திரனே! கோதமர்களால் உனக்குத் தோத்திரம் கூறப்பட்டது. மந்திரங்கள், வணக்கத்தோடு குதிரைகளால் ஏந்திவரப்பட்ட உனக்கு மொழியப்பட்டது. செயல்களால் செல்வத்தைப் பெற்ற அவன் இங்கு காலையில் துரிதமாய் எங்களிடம் வருவானாக. 780

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 64. மருத்துக்கள்

### 64. நோதா கௌதமன்

1. நோதனே! துதியார்களும், மழையைப் பொழிபவர்களும், பழங்களைப் பக்குவப் படுத்துபவர்களுமான மருத்துக்களுக்கு–அவர்களுடைய சமூகத்துக்கு ஸ்தோத்திரத்தைக் கூறவும். தீரனான நான், இணங்கிய கைகளோடு யக்ஞங்களிலே வாய்மை யுள்ளவையும், சலங்களைப் போல் பெருகுபவையும், என் மனத்தில் தோன்றுபவையுமான மொழிகளைக் கூறுகிறேன்.

2. அவர்கள் வானிலிருந்து பிறந்தார்கள். அழகர்கள்; காளைகள்; ருத்திரப் புதல்வர்கள்; பகைவர்களை ஜயிப்பவர்கள்; பாபமற்றவர்கள்; சுத்தப்படுத்துபவர்கள்; சூரியனைப் போல் பிரகாசிப்பவர்கள்; பூதகணங்கள் போல் பராக்கிரமர்கள்; மழை பிந்துக்களைப் பரப்புவர்கள்; உக்கிரவடிவ முள்ளவர்கள்.

3. குத்திரப் புதல்வர்கள் தருணர்கள்; மூப்பற்றவர்கள்; துதிக்காதவர்களைத் தாழ்த்துபவர்கள்; தடைபடாமல் செல்லுபவர்கள்; மலைகளைப் போல் திடாங்கர்கள்; தொழுபவனின் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவர்கள். தங்கள் பலத்தால் சோதியிலோ, புவியிலோ உள்ள எல்லாப் பொருள்களையும் ஆட்டுபவர்கள்.

4. அவர்கள் தங்கள் தேகங்களைப் பலவித நகைகளால் அலங்காரஞ் செய்து கொள்கிறார்கள். அவர்கள் எழிலுடனைத் தங்கள் மார்புகளில் மின்னும் மாலைகளே அணிந்தார்கள். தோள்களிலே ஈட்டிகள் ஏந்தப்படுகின்றன. தலைவர்கள், அவற்றேடும் சொந்த பலத்தோடும் வானிலிருந்து பிறந்தார்கள்.

5. பகைவர்களைப் புசிக்கும் மருத்துக்கள், தொழுபவனைச் செல்வப்படுத்தி, மேகங்களைக் கலக்கி, காற்றுக்களையும் மின்னல்களையும் தங்கள் பலத்தால் பிறப்பிக்



hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



கிறார்கள். ஆட்டுடவர்களும், சுற்றி வருபவர்களுமான அவர்கள் சோதியின் ஆவினங்களைக் கறந்து, புவியைப் பாலால் நிரப்புகிறார்கள். 735

6. உத்தமதானச் சீலர்களான மருத்துக்கள், புட்டியளிக்கும் சலங்களை, நெய்யை யக்ஞங்களில் பொழியும் ரித்விஜர்களைப் போல் பொழிகிறார்கள். அவர்கள் குதிரையைச் செலுத்தும் வீரர்களைப் போல் மேகத்தை அதீனப்படுத்துகிறார்கள். கர்ச்சிப்பதும், குறையாததுமான மேகத்தைக் கறக்கிறார்கள்.

7. மகான்களும் பேரறிஞர்களுமான நீங்கள், மலைகளைப் போல் சொந்த பலமுள்ளவர்கள்; சலனத்திலே துரிதர்கள். சிகப்பாயுள்ள சுவாலைகளிலே உங்கள் சக்தியைச் செலுத்துங்கால், நீங்கள், யானைகளைப் போல் காடுகளைப் புசிக்கிறீர்கள்.

8. பேரறிஞர்களான மருத்துக்கள் சிங்கங்களைப் போல் கர்ச்சிக்கிறார்கள். சர்வக்ஞர்களான அவர்கள் புள்ளிமான்களைப் போல் அழகாயிருக்கிறார்கள். பகைவர்களை அழிக்கிறார்கள். வழிபடுபவர்களை இன்புறுத்துகிறார்கள். அவர்கள் மிக்க உக்கிரவேகமுடனும், மான்களோடும் ஆயுதங்களோடும் தடையை விலக்க, வழிபடுபவனைப் பாலிக்க வருகிறார்கள்.

9. படைச் செல்வர்களும், மானிடர்களுக்கு நலத்தைச் செய்பவர்களும், வீரர்களும், உங்கள் கோபத்தில் கொல்லும் உக்கிரமிருப்பவர்களுமான நீங்கள் வருங்கால், சோதியையும், புவியையும் உங்கள கோஷத்தால் நிரப்புகிறீர்கள். உங்களுடைய தேஜசு பீடங்களிருக்கும் தேர்களில் அமர்கிறது. அது சுந்தர வடிவத்தைப் போலும், அழகிய மின்னலைப் போலும் விளங்குகிறது.

10. அன்னத்தையுமறிபவர்களும், செல்வத்தோடு சேர்ந்து வகிப்பவர்களும், சக்தியோடு பொருந்துபவர்களும். முழங்குபவர்களும், பகைவர்களை விலக்குபவர்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



களும், அனந்தமான ஆற்றலுள்ளவர்களும், இந்திரனைப் படையாக அடைந்தவர்களும், மனிதர்களின் தலைவர்களுமான மருத்துக்கள் தங்கள் கைகளிலே சரத்தை ஏந்துகிறார்கள். 740

11. பாலிப் புட்டி செய்பவர்களான மருத்துக்கள், தங்களுக்கு வழியைச் செய்து கொள்ள மரங்களை அழித்துச் செல்லும் யானைகளைப் போல், தங்களுடைய தங்கச் சக்கரங்களால் மேகங்களைக் கிழித்துச் செல்லுகிறார்கள். யக்ஞஸதனத்துக்கு வருபவர்களும், தாமாகவே பகைவர்களை எதிர்ப்பவர்களும், திரமுள்ளவற்றை ஆட்டுபவர்களும், பகைவர்களால் அசைக்கப்படாதவர்களும், துலங்கும் படைகளை ஏந்துபவர்களுமான மருத்துக்கள் யக்ஞங்களில் போற்றப்படுகிறார்கள்.

12. நாங்கள் பகையழிப்பதும், தடுத்தப்படுத்துவதும், மழையளிப்பதும், அன்னத்தையுங்காண்பதும், ருத்திரனின் சந்ததியுமான மருத்துப் படையை அவியோடு போற்றுகிறோம். அறிஞர்களே! நீங்களும் புழுதியை எழுப்புவதும், உக்கிரமுள்ளதும், ஊக்கமிருப்பதுமான மருத்துக்களின் வலிய படையைச் செல்வத்துக்காகப் போற்றுங்கள்.

13. மருத்துக்களே! உங்கள் பாலனத்தால் பாலிக்கப்படும் மனிதன் பலத்திலே எல்லா சனங்களையும் முந்துகிறான். அவன் குதிரைகளால் உணவையும், மனிதர்களால் செல்வங்களையும் அடைகிறான். அவன் போற்றத்தகுந்த செயலை நடத்துகிறான்; செழிக்கிறான்.

14. மருத்துக்களே! உங்களை ஏந்தும் துதிச் செல்வர்களுக்கு நற்செயல்களில் சிறந்தவனும், போர்க்களத்தில் ஜயிக்கப்படாதவனும், புகழுள்ளவனும், பகைவர்களை யளிப்பவனும், செல்வங்களைப் பற்றுபவனும், துதியாகனும், சர்வக்ஞனுமான புதல்வனை அளியுங்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



15. மருத்துக்களே! நீங்கள் எங்களுக்கு, திரமுள் ளவையும், மனிதர்கள் நிறைந்தவையும், பகைவர்களே எதிர்ப்பவையுமான செல்வங்களே எங்களுக்கு அளியுங் கள். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, எப்பொழு தும் செழிப்பவையான செல்வங்களே அளியுங்கள். செயல்களால் செல்வர்களான அவர்கள் காலையிலே இங்கு துரிதமாய் வருவார்களாக. 745

## 65. அக்கினி

### 65. பராசரசாக்தியன்

1-2. அக்கினியே! புலவர்களும், பரஸ்பரம் அன் புள்ளவர்களுமான தேவர்கள்-நீ பசுவைத் திருடிய திரு டனைப்போல் சலங்களின் குகையிலே-குழியிலே பதுங்கியிருக்கும் போது உன்னைக் காலடிச்சுவடுகளால் அறிந்து தொடர்ந்தார்கள்.

3-4. தேவர்கள் ருதத்தின் வழிகளே அணுகினர்கள். ஓடியவனின் அடையாளங்களைப் பற்றினர்கள். சோதனை எங்கும் பரந்தது. புவி, சுவர்க்கம் போலாயிற்று. சலங் கள், துதியால் வளர்ந்தவனும், ருதத்தின் மூலமான நீரின் கருப்பத்தில் புலனுமான அக்கினியைப் பாலித்தன.

5-6. அக்கினி, புட்டியைப் போல் போற்றத் தக்க வன்; புவியைப் போல் பரந்தவன்; மலையைப் போல் விளைவிப்பவன்; சலங்களைப் போல் சுகப்படுத்துபவன்; போரிலே எதிர்க்கச் செலுத்தப்பட்ட குதிரையைப் போலிருப்பவன்; சலங்களைப் போல் பாய்பவன். அவனை எவன் தடுக்க இயலும்?

7-8. அவன் சகோதரிகளுக்குச் சகோதரனைப் போல், சலங்களுக்குப் பிரியமான பந்துவாகிறான். அவன், தன் பகைவர்களை யழிக்கும் அரசனைப் போல் காடுகளைத் தகிக்கிறான். காற்றினுல் ஊக்கமாகுவதால் காடுகளிலே திரிகிறான். புவியின் ரோமங்களைக் கழிக்கி கிறான்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



9-10. அவன் உட்கார்ந்துள்ள அன்னத்தைப் போல் சலங்களின் நடுவே சுவாசிக்கிறான். காலையில் எழுப்பப் பட்ட அவன், ஒளியால் அனைவருக்கும் சைதன்யத்தை யளிக்கிறான். சோமனைப்போல் சான்றேனையிருக்கும், திருட்டிப்பவனையிருக்கும் அவன், ருதத்திலிருந்து – நீரிலி ருந்து பிறந்தான். அங்கு-அச்சலங்களில், அவன் சுருண்ட அங்கங்களோடு மிருகத்தைப் போல் பதுங்கியிருந்தான்– மறைந்திருந்தான். தோன்றிய பிறகு அவன் வளர்ந்தான் அவனுடைய ஒளி வெகுதூரம் பரந்தது. 755

## 66. அக்கினி

### 66. பராசரசாக்தியன்

1-2. விசித்திரச் செல்வத்தைப் போலும், அனைத் தையும் நோக்கும் சூரியனைப் போலும், பலிக்கும் பிராணவாயுவைப் போலும், பிரியமுள்ள புதல்வனைப் போலும், சவாரியை ஏந்தும் குதிரையைப் போலும், பாலைத் தரும் பசுவைப் போலுமுள்ள அக்கினி, சுத்தனை யும் மிக்க சோதியுள்ளவனுமிருக்கிறான். அவன் காடுகளை எரிக்கிறான்.

3-4. பத்திரமான மனையைப் போல் அவன் செல் வத்தைப் பாலிக்கிறான். அவன் யவத்தைப் போல் சனங் களைப் புட்டிப்படுத்துகிறான். அவன் பகை சனங்களை ஜயிப்பவன். அவன் ரிஷியைப் போல் தேவர்களைத் துதிப்பவன். மனிதர்களின் நடுவே புகழுள்ளவன். போருக்குச் செல்லும் உற்சாகக் குதிரையைப் போலுள்ள அவன், யக்ஞ சதனத்துக்கு உற்சாகமாய் வருகிறான். அவன் எங்களுக்கு உணவை யளிப்பானாக.

5-6. அரிதான பிரகாசமுள்ள அக்கினி செயலா ளனைப் போலிருக்கிறான். அனைவருக்கும் ஆபரணமா யிருக்கும் அவன், மனையிலிருக்கும் வனிதையைப் போலி ருக்கிறான். அவன் அற்புத ஒளியோடு பிரகாசிக்கும் போது வெண்மையான பரிதியைப் போலிருக்கிறான்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



மனிதர்களின் நடுவே தங்கத் தேரைப் போலிருக்கும் அவன், போர்க்களங்களிலே துலங்குகிறான்.

7-8. அவன் பகைவர்களை, எதிரியின்மீது செலுத்தப்பட்ட படையைப் போலும், வில்லாளனின் கனல்கூர் அம்பைப் போலும் பயமுறுத்துகிறான். அக்கினி, பிறந்துள்ள அனைவர்க்கும் யமனைப் போலிருக்கிறான். பிறக்கப் போகும் அனைவர்க்கும் அவன் யமனைப் போலாகிறான். அவன் கன்னிகைகளின் காதலன். மனைவிகளின் கணவன்.

9-10. நாங்கள் தாவர, ஜங்கம அவிகளோடு கொட்டங்களுக்குச் செல்லும் பசுக்களைப் போல் எரியும் அக்கினியிடம் செல்வோமாக. சலங்களின் பாய்ந்தோடும் தாரைகளைப் போல் அவன் தன் சுவாலைகளை எங்கும் உந்துகிறான். அவனுடைய கதிர்கள் வானில் தோன்றும் காந்தியோடு சேர்கின்றன. 765

## 67. அக்கினி

### 67. பராசரசாக்தியன்

1-2. மனிதர்களின் நண்பனான அக்கினி, வனங்களில் பிறந்து, வலிமையுள்ளவனை விரும்பும் அரசனைப் போல் தொழுபவனைப் பாலிக்கிறான். துணைவனைப் போல் பிரியமாயிருக்கிறான். நல்ல செயலாளனைப் போல் போற்றத் தகுந்தவன். தேவர்களின் ஹோதாவும், அவிவகிப்பவனுமான அவன், எங்களிடம் நல்லதியானமுடன் தோன்றுக.

3-4. தன் கையிலே எல்லாச் செல்வத்தையும் ஏந்துபவனும், சலங்களின் குகைகளினுள்-குழிகளில் மறைந்திருப்பவனுமான அக்கினி, தேவர்களைப் பயத்திலே ஸ்தாபித்தான். பிறகு தேவர்களும் செயல்களை ஏந்துபவர்களுமான தேவர்கள், இருதயத்திலே கற்பித்த மந்திரங்களைக் கூறியவுடன் அக்கினியைக் கண்டார்கள்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



5-6. அவன், அஜனை-பிறப்பற்றவனைப்போல் வானையும், விண்ணையும் தாங்குகிறான். சத்திய மந்திரங்களால் ஒளி உலகை ஏந்துகிறான். அக்கினியே! விசுவ உணவைத் தாங்கும் நீ, பிராணிகளுக்குப் பிரியமான இடங்களைப் பாலிக்கவும். பசுக்கள் செல்லத் தகுதியற்ற இடங்களுக்குச் செல்லவும்.

7-8. குகைகளில் மறைந்திருக்கும் அக்கினியை யறிபவனுக்கும், சத்தியத்தைப் பாலிப்பவனுக, அவனை அணுகுபவனுக்கும், யக்ஞங்களைச் செய்து அவனுக்குத் துதிகளைக் கூறுபவர்களுக்கும் அவன் செல்வத்தைப் புலப்படுத்துகிறான்.

9-10 அறிஞர்கள், ஓஷதிகளில் தன் தன்மைகளை ஸ்தாபிப்பவனும், தாய்மார்களான செடி கொடிகளிலே, மலர்களையும் காய் கனிகளையும் வைப்பவனும், அறிவையும் எல்லா உணவையும் தருபவனும், சல மனையில் இருப்பவனுமான அக்கினியை மனையைப் போல் மதித்துப் போற்றுகிறார்கள். 775

## 68. அக்கினி

### 68. பராசர சாக்தியன்

1-2. அவிகளை ஏந்திச் செல்லும் அக்கினி அவற்றை வேறு பொருள்களோடு கலந்து சோதிக்கு ஏறுகிறான். அவன் இரவுகளையும், அசையும் அசையாத எல்லாப் பொருள்களையும் ஒளிப்படுத்துகிறான். தேவர்களின் நடுவே துலங்கும் அவன் ஒருவனே இந்தத் தாவர, சங்கமப் பொருள்களில் எல்லாம் பரவுகிறான்.

3-4. தேவனான அக்கினியே! நீ காய்ந்த கட்டையிலிருந்து-மந்தனத்தால் சொலித்துப் பிறந்த பிறகு உன்னை வழிபடுபவர்கள் எல்லாம், யக்ஞத்தைச் செய்கிறார்கள். அவர்கள் அமுதனைய உன்னை உன்னிடம் சேரும் துதிகளோடு துதித்து, சத்தியமான தேவத் தன்மையை அடைகிறார்கள்.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5-6. ஸத்தியத்துக்குச் சென்றவனுக்குத் துதிகள் கூறப்படுகின்றன. யக்ஞத்துக்குச் சென்றவனுக்கு அவிகள் அளிக்கப்படுகின்றன. அவனில் எல்லா உணவு முண்டு, அறிஞர்கள் அவனுக்கு எல்லாச் செயல்களையும் நடத்துகிறார்கள். அக்கினியே! நீ வழிபடுபவனுடைய எண்ணங்களை அறிந்து, உனக்கு அவிகளை அளிப்பவனுக்கும், அளிக்க விரும்புபவர்களுக்கும் செல்வங்களை அளிக்கவும்.

7-8. நீ மனுஷிலிருந்து தோன்றிய மக்களிடம் தேவர்களின் தூதாவாக வசிக்கிறாய். நீயே அவர்களுடைய செல்வங்களின் தலைவனுயிருக்கிறாய். அவர்கள் உன்னிடம் தங்கள் தேகங்களுக்கு, பிறப்பிக்கும் ரேதஸை விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த ஆற்றல்களோடு சேர்ந்து தடைபடாமல் எல்லாப் பொருள்களையும் அறிகிறார்கள்.

9-10. அவர்கள், தந்தையினுடைய சொற்களைப் புதல்வர்களைப் போல் அக்கினியின் ஆக்ஞைகளை நிறைவேற்றத் துரிதமாகி, அவனுக்கு யக்ஞத்தை நடத்துகிறார்கள். மிக்க உணவுள்ள அவன் யக்ஞக் கதவுகளான செல்வங்களைப் புலப்படுத்துகிறான். மனையின் மனமுள்ள அவன் வானிலே நட்சத்திரங்களைப் பதித்தான். 785

## 69. அக்கினி

### 69. பராசர சாக்தியன்

1-2. சூரியனைப் போல் வெண்மையாய்ப் பிரகாசிப்பவனும், உஷையை மாய்ப்பவனுமான அக்கினி அனைத்தையும் ஒளிப்படுத்துகிறான். அவன் இணைந்துள்ள வானையும், விண்ணையும், சூரியனுடைய சோதியால், தன் ஒளியால் நிரப்புகிறான். நீ பிறந்தவுடன் உன் ஆற்றலால் எங்கும் பரவுகிறாய். நீ தேவர்களின் புதல்வனுகி, தந்தையுமாகிறாய்.

3-4. மேதாவியும், பணிவுள்ளவனும், பருத்துணர்பவனுமான அக்கினி உணவுக்குச் சுவையைப் பசுக்களின்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



ஆபினத்தைப் போல் தருகிறான். அவன் அழைக்கப்பட்டு யக்ஞசதனத்தில் அமர்கிறான். மனிதர்களின் நடுவே அன்புள்ளவனைப் போல் சுகத்தைப் பரத்துகிறான்.

5-6. அவன் மகாயிலே, பிறந்த புதிய புதல்வனைப் போல் இன்புறுத்துகிறான். அவன் ஊக்கமடைந்த குதிரையைப் போல் பகைவர்களை ஜயிக்கிறான். அக்கினியே! நான் மனிதர்களோடு சமமான இடத்தில் வசிக்கும் தேவர்களையெல்லாம் அழைக்குங்கால் நீயே அந்தத் தேவர்களாக மாறுகிறாய்.

7-8. அரக்கர்கள் உன்னுடைய இந்த விரதங்களைப் பங்கப்படுத்தார்கள். ஏனெனில் விரதங்களைப் பற்றி வழிபடுபவர்களுக்கு யக்ஞத்தின் பயனான சுகத்தைத் தருகிறாய். அவர்கள் உன்னுடைய விரதங்களைப் பங்கப்படுத்தினால் நீ தலைவர்களான மருத்துக்களோடு சேர்த்து அவர்களைப் புறப்படுத்துகிறாய்.

9-10. மனைகளையளிப்பவனும், அறியத்தக்க விஷயமிருப்பவனும், உஷையை மறைக்கும் சூரியனைப் போல் மிக்க ஒளியுள்ளவனுமான அக்கினி இந்த வழிபடுபவனின் விருப்பங்களை அறிவானுக. பிறகு அக்கினியின் கிரணங்கள் தாமாகவே அவிகளை வகித்து யக்ஞக் கதவுகளினிடம் செல்லுகின்றன. அப்பால் தெரியும் வானில் பரவுகின்றன. 795

## 70. அக்கினி

### 70. பராசர சாக்தியன்

1-2. நாங்கள் புத்தியால் பற்றப்படுபவனும் சுத்த ஒளியோடு பிரகாசிப்பவனும், தேவர்களுக்கு நடத்தப்படும் செயல்களை அறிபவனும், மானிட குலத்தின் பிறப்பைக் கிரமப்படுத்தும் நடத்தைகளையறிபவனுமான அக்கினியினிடம் மிக்க உணவை நாடுகிறோம்.

3-4. அவர்கள், சலங்களிலும், வனங்களிலும், எல்லா தாவர சங்கமப் பொருள்களின் இருப்பவனும்,

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



அமுதனும், எல்லா நல்ல செயல்களைப் பிரஜைகளின் நடுவே அன்புமிகுந்த அரசனைப்போல் நடத்துபவனுமான அக்கினிக்கு மலையிலே-மனையிலே அவிகளை அளிக்கிறார்கள்.

5-6. இரவில் தோன்றும் அக்கினி, சூக்தங்களோடு நன்றாய்ப் போற்றுபவனுக்குச் செல்வங்களைத் தருகிறான். அனைத்தையும் அறிபவனே! தேவர்களுடையவும், மனிதர்களுடையவும் பிறப்பை-மூலத்தை அறியும் நீ, புவியின் மீது வசிக்கும் இந்த எல்லா சீவன்களையும் பாலிக்கவும்.

7-8. பலவித வடிவங்களுள்ள வைகறைகளாலும், இரவுகளாலும், வளர்பவனும், ருதத்தோடு சூழ்ந்தவனும், தாவர ஜங்கமப் பொருள்களால் செழிப்பவனுமான அக்கினி போற்றப்பட்டு, யக்ஞத்திலே ஹோதாவாக அமருகிறான். எல்லாச் செயல்களையும் சித்தப்படுத்துகிறான்.

9-10. நீ எங்கள் பசுக்களையும், வனங்களையும் செல்வப்படுத்துகிறாய். எல்லா மனிதர்களும் போற்றத்தகுந்த பலியை-திறையை, செல்வத்தை எங்களுக்களிப்பார்களாக. அக்கினியே! மனிதர்கள் உன்னைப் பல இடங்களில் மேம்படுத்தி, உன்னிடமிருந்து செல்வங்களை வயது சென்ற தந்தையினிடமிருந்து புதல்வர்களைப் போல் பெறுகிறார்கள்.

11. எடுத்த செயல்களை வெற்றியுடன் முடித்து விரும்புவதைப் பெறுபவனைப் போலும், சரத்தை எய்யும் வீரனைப் போலும், பயங்கரப் பகைவனைப் போலும், போர்களில் பிரகாசிப்பவனுமான அக்கினி எங்களுக்கு நண்பனைத் தேன்றுக. 806.

## 71. அக்கினி

### 71. பராசர சாக்தியன்

1. சகோதரிகளான விரல்கள் அன்புள்ள அக்கினியைத் தங்கள் சொந்தக் கணவர்களை விரும்பும் மனைவிகளைப் போல் விரும்பி, அவிகளால் இன்புறுத்துகின்றன.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



அவை போற்றத்தகுந்த அவனுக்குக் கருப்பாயும், மினுங்குவதாயும், பிரகாசிப்பதாயுமுள்ள உஷைக்கு சேவை செய்யும் ஒளிக்கிரணங்களைப் போல் சேவை செய்கின்றன.

2. நம்முடைய பிதாக்களான அங்கிரஸர்கள் மந்திரங்களால் அக்கினியைத் துதித்து, பலிட்டனும், திடாங்கனும், தின்பவனுமான-பணியை-சத்தத்தால் பயமுறுத்தினார்கள். அவர்கள், மகத்தான சோதிக்குச் செல்லும் வழியை நமக்குச் செய்தார்கள். அவர்கள் சுகமாய்ச் செல்வதற்கான தினத்தையும், நாளின் கொடியான ஆதித்தியனையும், திருடப்பட்ட பசுக்களையும் அடைந்தார்கள்.

3. அவர்கள் ருதத்தை ஏந்தினார்கள். செல்வத்தைப் பற்றினார்கள். பிறகு துதிச் செல்வர்கள் அனல்களைப் பாலிக்கிறார்கள். யக்ஞங்களை நடத்துகிறார்கள். எல்லா விருப்பங்களிலிருந்தும் நீங்கிய அவர்கள் செயலிலேனக்கமாகி, தங்கள் அவிகளால் தேவர்களையும், மனிதர்களையும் செழிப்பிக்கிறார்கள். அவனிடம் செல்லுகிறார்கள்.

4. வியானன், அக்கினியை மந்தனஞ் செய்யுங்கால் அவன் பிரகாசமாகி ஒவ்வொரு மனையிலும் புலனாகிறான். வழிபடுபவன் பிருகுவைப் பின்பற்றி அக்கினியைத் தூதச் செயலே நடத்த, தன்னிலும் மிக்க வலிய அரசனிடம் தூதனைச் செலுத்தும் நண்பனை மன்னனைப்போல் நியமிக்கிறான்.

5. வழிபடுபவன், பெரியவனும் பிரகாசிப்பவனுமான பாலகனுக்கு ரஸத்தையளிக்குங்கால், பற்றும் அரக்கள், அக்கினியே! உன்னை அறிந்து புறமோடிஞன். ஆனால் வில்லியான அக்கினி, தன்னுடைய பயங்கர வில்லிலிருந்து சுடரம்பை அவன் மீது செலுத்துகிறான். தேவன் தன் சொந்தப் பெண்ணிலே ஒளியை ஸ்தாபிக்கிறான். 811

6. தன்னுடைய சொந்த மனையிலே உன்னை எழுப்பி, தினந்தோறும் விரும்பப்படும் அவியை அளிப்பவனுக்கு

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



அக்கினியே! இரட்டைப் பலமடைந்த நீ, அவனுடைய உணவைப் பெருக்கவும். உன்னால் போருக்குத் தேரோடு செலுத்தப்படுபவன் செல்வத்தோடு திரும்புவானாக.

7. எல்லா உணவுகளும் அக்கினியிலே கடலில் பாயும் ஏழு பெரிய நதிகளைப்போல் சேர்கின்றன. எங்களிடம் போதுமான உணவில்லை. அதனால் பந்துக்கள் எங்கள் உணவைப் புசிக்கவில்லை. அனைத்தையும் அறியும் நீ, எங்கள் விருப்பங்களைத் தேவர்களிடம் தெரிவிப்பாயாக.

8. செழிக்க, நரர்களின் தலைவனில் தேஜசு நிறையுங்கால் சுத்தமான ரேதஸு சோதியிலிருந்து பொழிகிறது. அவனிடம் அக்கினி, வலியனும் குற்றமற்றவனுமாகப் பிறந்து, தருணனும், அறிஞனான புதல்வனுமான அவனை ஊக்கப்படுத்துவானாக.

9. சோதியின் வழியிலே மனோவேகத்தோடு தனியனாய்ச் செல்லும் சூரியன் தோன்றியவுடன் எல்லாச் செல்வங்களுக்கும் தலைவனாகிறான். இரு அரசர்களாகி மித்திரனும், வருணனும் ஈகைக் கைகளோடு எங்களுடைய பசுக்களிலிருக்கும் பிரியமான அமுதத்துக்குப் பாலகர்களாகிறார்கள்.

10. அக்கினியே! எங்களுடைய தந்தையின் வழியால் வந்த நட்புக்களைப் பங்கப்படுத்தாதே. நீ இருந்ததையும், இருப்பதையும் அறிகிறாய். உருவாகும் மேகத்தைப் போல் மூப்பு என் தேகத்தைத் தளர்த்துகிறது. கேடு வருவதற்கு முன்னே என்னைப் பாலிக்க நினைக்கவும். 816

## 72. அக்கினி

### 72. பராசர சாக்தியன்

1. மானிடர்களுக்கு நல்ல பொருள்களைத் தன் கைகளில் ஏந்தியுள்ள அக்கினி, நித்தியனான இறைவனுக்களிக்கப்படும் ஸ்தோத்திரங்களைப் பற்றுகிறான். எல்லா அமுதங்களையும் துரிதமாயளிக்கும் அக்கினி செல்வங்களின் தலைவனாயிருக்கிறான்.

vedicfastro.blogspot.com



2. எல்லா அமுதர்களும், மயக்கமற்ற மருத்துக்களும், நம்மிடம் புதல்வனைப்போல் பிரியனாயிருப்பவனும், நம்மைச் சுற்றிலும் எங்கும் இருப்பவனை–நாட–விரும்பித் தேடினார்கள். ஆனால் அவனைக்காணவில்லை. அவர்கள் கனைப்படைந்து, கால்களால் நடந்து, அவனுடைய செயல்களை அறிந்து, அக்கினியின் சுந்தரமான, கடையான மறைந்திருந்த இடத்திலே வந்து நின்றார்கள். சிரமத்தால் களைப்படைந்து அவனுடைய அடிச்சுவட்டைத் தொடர்ந்து, சிரத்தையுள்ள அவர்கள் அக்கினியின் அழகான உத்தம ஸ்தானத்துக்குச் சென்றார்கள்.

3. அக்கினியே! சுத்தர்களான மருத்துக்கள் சுத்தமான உன்னை மூன்று வருடங்கள் நெய்யோடு போற்றினார்கள். அதனால் அவர்கள் யக்ஞங்களிலே போற்றத் தகுந்த நாமங்களைப் பெற்றார்கள். அவர்கள் மீண்டும் பிறந்து தேவத்தன்மைகளுள்ள தேகங்களை அடைந்தார்கள்.

4. யக்ஞர்களான தேவர்கள் மகத்தான சோதி புவிகளின் நடுவே, அக்கினியை எங்கே, எங்கே எனத் தேடினார்கள். ருத்திரனுக்குரிய சிக்குகளைக் கூறினார்கள். அவியின் பாதி பாகத்துக்குரிய இந்திரனோடு மருத்துக்களின் கணம், அக்கினி பரம பதத்தில் மறைந்திருப்பதை அறிந்து அவனை அடைந்தார்கள்.

5. தேவர்கள் உன்னைக் கண்டுபிடித்து அங்கே உட்கார்ந்தார்கள். அவர்கள் தேவபத்தினிகளோடு முழந்தாள்களை வளைத்து உனக்குத் துதியாகிய வணக்கத்தைச் செலுத்தினார்கள். நண்பனை உன்னுடைய காட்சியிலே பாலிக்கப்படும் நண்பர்களான தேவர்கள், தங்கள் தேகங்களைத் தாபப்படுத்தி யக்ஞங்களைச் செய்தார்கள். 821

6. யக்ஞாகர்கள், உன்னில் மூவேழு மர்ம யக்ஞங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிகிறார்கள். அவற்றில் அமுதனை உன்னைப் பாலிக்கிறார்கள்.

Astrologer Hariram Thejus hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



ஆதலால் நீயும் அத்தகைய நட்போடு அவர்களுடைய பசுக்களையும், எல்லாத் தாவர ஜங்கமப் பொருள்களையும் பாலிக்கவும்.

7. அக்கினியே! அறிவதர்க்குரிய எல்லாப் பொருள்களை அறியும் நீ, மானிடர்கள் உயிருடனிருக்கப் பசிப் பிணியை நீக்கும் உணவை அளிக்கவும். சோதி புவிகளின் நடுவே தேவர்கள் செல்லும் வழிகளை அறிந்து தளராமல் தேவ தூதனுகவும்–அவிகளை ஏந்தவும்.

8. அக்கினியே! சோதியிலிருந்து பாயும் ஏழு சுத்தமான நதிகள் உன்னுல் செலுத்தப்படுகின்றன. ருதத்தை உணர்பவர்கள் செல்வத்தின் கதவுகளை அறிந்தார்கள். பசுக்கள் மறைக்கப்பட்டிருந்தன. ஸரமை, உனக்காகப் பசுக்களின் திடமாய்க் கட்டப்பட்ட சிறையை–மடியை, மிகுந்த பாலைக் கண்டாள். அதனுல் மானிட வம்சம் இன்னும் பாலனமாகிறது.

9. ஆதித்தியர்கள், அமுதத்வத்துக்கு வழியைச் செய்யக் கருதி யக்ஞங்களை யெல்லாம் தோற்றுவித்தார்கள். அவற்றுல் விழாமல் தப்பித்தார்கள். தாயும் தரணியுமான அதிதி, தன் மகிமையால், தன் மகத்தான புதல்வர்களோடு உலகத்தைத் தாங்க இயங்கினுள். அக்கினியே! நீ அக்காலத்திலிருந்தே அவிகளைப் பெற்றுய்.

10. வழிபடுபவர்கள் இந்த அக்கினியிலே யக்ஞத்தின் மங்களச் செல்வங்களை ஸ்தாபித்தார்கள். கண்களான நெய்யையும் அளித்தார்கள். பிறகு அமுதர்கள் சோதியிலிருந்து வருகிறார்கள். அக்கினியே! உன்னுடைய பிரகாசமான சுவாலைகள் எல்லாத் திசைகளிலும் பாயும் நதிகளைப் போல் பரவுகின்றன. தேவர்கள் சுவாலைகளைப் பார்த்து இன்புறுகிறார்கள். 826

## 73. அக்கினி

### 73. பராசர சாக்தியன்

1. அக்கினி, தந்தையின் வழி வந்த செல்வத்தைப் போல் உணவைத் தருபவன். அறிஞனின் கற்பனையைப் போல் புலப்படுத்துபவன். அதிதியைப் போல் விரும்பப் படும் அவன், இனிமையான இடத்தில் சயனிக்கிறான். அவன் ஹோதாவைப் போல் வழிபடுபவனின் மனையைச் செல்வப்படுத்துகிறான்.

2. சத்தியத்தைக் காணும் அக்கினி, தேவனுன ஸவிதாவைப் போல் தன் ஆற்றலால் வழிபடுபவர்களை எல்லாப் போர்களிலிருந்தும் பாலிக்கிறான். அவன் இயல்பைப் போல்-சூரியனைப் போல் சத்தியன். ஆத்மாவைப்போல் சுகப்படுத்துபவன். அவனே எப்பொழுதும் போற்றத் தருந்தவன்.

3. அவன் தேவனுன சூரியனைப் போல் விசுவத்தைத் தாங்குபவன். அவன் அனுகூல நண்பர்களோடுள்ள அரசனைப் போல் புவியிலே வசிக்கிறான். மனிதர்கள் அவனுடைய முகப்பிலே தந்தையின் மனையில் வசிக்கும் புதல்வர்களைப் போல் அமர்கிறார்கள். குற்றமற்றவளும், கணவனுல் விரும்பப்படுபவளுமான மனைவியைப் போல் அவன் சாந்தமாயிருக்கிறான்.

4. அக்கினியே! அத்தகைய உன்னை மனிதர்கள் தங்கள் மனைகளின் பத்திரமான இடங்களில் எப்பொழுதும் ஒளிப்படுத்திப் பாலிக்கிறார்கள். உனக்கு மிக்க உணவையளிக்கிறார்கள். நீ விசுவான்னமாகி எங்களுக்குச் செல்வங்களை ஏந்துபவனுகவும்.

5. அவிச் செல்வர்கள் உணவைப் பெறுவார்களாக. உன்னைப் போற்றி உனக்கு அவிகளையளிக்கும் அறிஞர்கள் நீடித்த ஆயுளைப் பெறுவார்களாக. நாங்கள் போர்களிலே பகைவர்களிடமிருந்து செல்வங்களை ஜயிப்போமாக. புகழுக்காக அவர்களுடைய பாகத்தைத் தேவர்களுக் களிப்போமாக. 831

6. பசுக்கள், அக்கினியை விரும்பி அவனுடைய ஒளியில் பாகமடைந்து, பருகுவதர்க்காகப் பாலைப்பூர்ண ஆபினங்களோடு ஏந்தி வருகின்றன. நதிகள் அவனுடைய ஸுமதியை விரும்பி தூரத்திலிருந்து மலையின் அருகில் பாய்கின்றன.



vedicfastro.blogspot.com

Astrologer Hariram Thejus

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



7. அக்கினியே! யக்ஞர்களான தேவர்கள் உன்னுடைய ஸுமதியை விரும்பி, பிரகாசிக்கும் உன்னிலே அவியை ஸ்தாபித்தார்கள். அவர்கள் இரவையும், உஷையையும் வெவ்வேறு ரூபங்களுடன் செய்தார்கள். கருப்பையும் சிகப்பையும் ஒருமைப் படுத்தினர்கள்.

8. செல்வங்களுக்காக உன்னால் செலுத்தப்பட்ட மானிடர்களான நாங்கள், செல்வர்களாவோமாக. நீ, உன் ஒளியால் சோதியையும், வானையும். புவியையும் நிரப்பி, உலகத்தையெல்லாம் நிழலைப் போல் பற்றுகிறாய்.

9. அக்கினியே! உன்னால் பாலிக்கப்படும் நாங்கள், குதிரைகளைக் குதிரைகளாலும், மனிதர்களை மனிதர்களாலும், வீரர்களை வீரர்களாலும் ஜயிப்போமாக. தந்தை வழியில் வந்த செல்வத்தையடைந்தவர்களும் அறிஞர்களுமான எங்களுடைய புதல்வர்கள் நூறு வருடங்கள் வாழ்வார்களாக.

10. அறிஞனான அக்கினியே! எங்களுடைய இந்தத் துதிகள் உன் மனத்துக்கும், இருதயத்துக்கும் பிரியமுள்ளவையாகுக. தேவர்களால் போற்றத் தகுந்த அவியை உனக்களித்து, நாங்கள் உன்னுடைய வறுமை நீக்கும் செல்வத்தைப் பாலிப்பவர்களாவோமாக. 886

## 74. அக்கினி

### 74. கோதம ராஹூகணன்

1. நாங்கள் யக்ஞத்துக்குத் துரிதமாகி, தூரத்திலே எங்களைச் செலுத்தும் அக்கினிக்கு மந்திரத்தைக் கூறுவோமாக.

2. துன்புறுத்தும் பகைவர்கள் ஒன்று சேருங்கால் எந்தப் பழையவன் வழிபடுபவனுக்குச் செல்வத்தைப் பாலிக்கிறான்?

3. மானிடர்கள், விருத்திரனைக் கொல்பவனும், பல போர்களிலே செல்வத்தைச் ஜயிப்பவனுமான அக்கினி பிறந்தவுடன் அவனைப் போற்றுவார்களாக.



hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



4-5. அங்கிரஸனே! ஆற்றல் மகனே! நீ எந்த யஜிப்பவனுடைய மனையிலே தேவ தூதனுகையிருக்கிறாயோ, எவனுடைய அவியை நீ தேவர்கள் புசிக்க ஏந்திச் செல்கிறாயோ, எவனுடைய யக்ஞத்தை விரும்பத் தக்கதாகச் செய்கிறாயோ, அவனை-எல்லா மனிதர்களும் யக்ஞத்திலும், தேவதையிலும், அவிகளிலும் செல்வன் எனக் கூறுகிறார்கள். 841

6. மிக்கப் பிரகாசிக்கும் அக்கினியே! எங்களுடைய துதியையும், புசிக்க எங்களுடைய அவிகளையும் பெற்றுக் கொள்ள இங்கு தேவர்களை அழைத்து வா.

7. அக்கினியே! நீ தூதனுகச் செல்லும் போதெல்லாம் உன் தேரினுடைய, குதிரைகளினுடைய கேட்பதற்குரிய சத்தம் கேட்கவில்லை.

8. அக்கினியே! ஒரு தலைவனுக்கு அடிமைப்பட்டிருந்த அவன் உன்னால் பாலனமாகி உன் முகப்பிலே அவிகள் அளிப்பவனுக நிற்கிறான். அவனிடம் கூச்சமில்லை. அவன் உணர்வோடு இருக்கிறான்.

9. தேவனான அக்கினியே! நீ, தேவர்களுக்கு அவிகளை அளிப்பவனுக்கு, பிரகாசிப்பதும், பலத்தையுந் தருவதுமான மகத்தான செல்வத்தைப் பொழிய விரும்புகிறாய். 845

## 75. அக்கினி

### 75. கோதம ராஹூகணன்

1. எங்களுடைய அவியை வாயால் ஏற்கவும். தேவர்களைத் திருப்தி செய்யும் பரந்த தோத்திரத்தைக் கேட்கவும்.

2. அக்கினியே! பேரறிஞனே! அங்கிரஸர்களின் தலைவனே! நாங்கள் இப்பொழுது விரும்பத் தருந்ததும், இன்புறுத்துவதுமான ஸ்தோத்திரத்தை உனக்குக் கூறுவோமாக.

vedicfastro.blogspot.com



3. அக்கினியே! மனிதர்களின் நடுவே உன் பந்து எவன்? எவன் உனக்கு யக்ஞத்தை யளிக்கத் தகுந்தவன்? நீ யார்? நீ எங்கு வசிக்கிறாய்?

4. அக்கினியே! நீ எல்லா சனங்களுக்கும் பந்துவாயிருக்கிறாய். அவர்களுக்குப் பிரிய நண்பனுமிருக்கிறாய். போற்றத் தகுந்த நீ, நண்பர்களுக்கு நண்பனுயிருக்கிறாய்.

5. அக்கினியே! நீ எங்களுக்காக மித்திரா வருணர்களை யழிக்கவும். தேவர்களை யழிக்கவும். ருதத்தை யழிக்கவும். நீ உன்னுடைய சொந்த மனைக்குச் செல்லவும். 850

## 76. அக்கினி

### 76. கோதம ராஹூகணன்

1. அக்கினியே! நீ எங்களிடம் வர உன் மனத்தை எங்ஙனம் இசைப்பது? சுகப்படுத்தும் தோத்திரம் எது? யக்ஞங்களால் எவன் பலத்தை அடைந்தான்? உனக்கு நாங்கள் அவிகளை எந்த மனத்தோடு அளிக்கவேண்டும்?

2. அக்கினியே! இங்கு வா. ஹோதாவாக அமரவும். நீ எங்களுடைய தலைவனுகவும். ஏனெனில் உன்னைத் தடை செய்பவன் எவனுமில்லை. எங்கும் வியாபகமாகும் சோதியும், புவியும் உன்னைப் பாலிப்பார்களாக. தேவர்கள் மிக்க அனுகூல மனமுடன் அவர்களை யழிக்கவும்.

3. அக்கினியே! எல்லா அரக்கர்களையும் பற்பப்படுத்தவும். எங்கள் யக்ஞங்களைப் பழிச் செற்களிலிருந்து பாலிக்கவும். சோம பாலகனை அவனுடைய குதிரைகளோடு இங்கு அழைத்து வா. தாராளமாயளிக்கும் அவனுக்கு நல்ல வரவேற்பை யளிக்கிறோம்.

4. நான் பிரஜையை யளிக்கும் துதியோடு சுவாலையால் அவிகளை ஏந்திச் செல்லும் அக்கினியை யழைக்கிறேன். இங்கு நீ தேவர்களோடு அமரவும். யக்ஞரு

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



குகனை நீ, ஹோதாவாகவும், போதாவாகவும் இருக்கவும். செல்வத்தை யளிப்பவனும், தோற்றுவிப்பவனுமான நீ எங்களை எழுப்பவும்.

5. கவிகளின் நடுவே கவியாயிருக்கும் நீ, விப்பிரனை மனுவின் யக்ஞத்திலே அவிகளோடு தேவர்களை யழித்தாய். அக்கினியே! சத்தியம் மிக்க நிறைந்துள்ள ஹோதாவான நீ, அங்ஙனம் இன்று அவிகளை மகந்தரும் துடுப்பால் அளிக்கவும். 855

## 77. அக்கினி

### 77. கோதம ராஹூகணன்

1. நாங்கள், அமுதனும், சத்தியவானும், ஹோதாவும், யழிப்பவனும், மனிதர்களின் நடுவில் இருப்பவனும், தேவர்களுக்கு அவிகளை ஏந்திச் செல்பவனுமான அக்கினிக்கு அவியை எங்ஙன மளிப்போம்? தேவர்களால் போற்றத் தகுந்தவனும், பிரகாசிப்பவனுமான அக்கினிக்கு எந்தத் தோத்திரம் கூறப்படுகிறது?

2. யக்ஞங்களில் சுகப்படுத்துபவனும், சத்தியவானும், ஹோதாவுமான அக்கினியை, தோத்திரங்களோடு முற்படுத்துங்கள். ஏனெனில், மானிடர்களுக்காகத் தேவர்களிடம் செல்லும் அவன், அவர்களை நன்கறிகிறான். அவர்களை மனத்தால் போற்றுகிறான்.

3. அக்கினி, செயலை நடத்துபவன். அவன் அழிப்பவன், பிறப்பிப்பவன், நண்பனைப் போல் அற்புதச் செல்வத்தைத் தருபவன். எல்லா சனங்களும் தேவர்களை விரும்பி அழகான அக்கினியை அணுகி யக்ஞங்களிலே அவனுடைய நாமத்தையே முதலில் கூறுகிறார்கள்.

4. பகைவர்களை யழிப்பவனும், மனிதர்களின் நடுவே மிக்கப் பெரிய தலைவனுமான அக்கினி, எங்களுடைய துதியையும், வணக்கத்தையும், அவிகளோடு விரும்புவானுக. மிகுந்த செல்வமுள்ள, மிகுந்த வலிமையுள்ள அவியைத் தோற்றுவித்த அறிஞர்கள் வணக்கத்தையளிக்க விரும்புவார்களாக.

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



5. இங்ஙனம் சத்தியவானும், ஜாத வேதஸனுமான அக்கினி கோதமர்களால் துதிக்கப்பட்டான். அவன் அவர்களைப் புகழாலும், பலத்தாலும் புட்டிப்படுத்து வானாக. அவன் எங்கள் சேவையை அறிந்து செழிப் பானாக. 860

## 78. அக்கினி

### 78. கோதம ராஹூகணன்

1. ஜாத வேதஸனே! அனைத்தையுங் காண்பவனே! அக்கினியே! கோதமன் உன்னைத் துதியோடு போற்று கிறான். நாங்களும் உன்னைப் புகழுரைகளோடு அடிக்கடி பாடுகிறோம்.

2. நாங்கள் புகழுரைகளோடு, செல்வங்களை விரும்பி, துதியோடு கோதமனால் போற்றப்படும் உன்னை அடிக்கடி பாடுகிறோம்.

3. நாங்கள் மிகுந்த உணவையளிக்கும் அத்தகைய உன்னை, அங்கிரஸனைப் போல் அழைக்கிறோம். நாங்கள் புகழுரைகளோடு உன்னை அடிக்கடி பாடுகிறோம்.

4. நாங்கள் புகழுரைகளோடு, விருத்திரர்களைக் கொல்பவனும், தஸ்யுக்களைத் துரத்துபவனுமான உன் னைப் பாடுகிறோம்.

5. ரஹூகணப் புதல்வர்களாயிருக்கும் கோதமர் களான நாங்கள், அக்கினிக்கு இனிய மொழிகளைக் கூறி னோம். நாங்கள் புகழுரைகளோடு அவனைப் பாடுகிறோம். 865

## 79. அக்கினி

### 79. கோதம ராஹூகணன்
### வானக்கினி

1. பொன் கேசமுள்ள அக்கினி–மின்னல் அழிப்பவ னுகி மேகத்தை ஆட்டுகிறான். காற்றைப்போல் துரித னுகிறான். அவன் சுந்தர ஒளியுள்ளவனுகி மேகத்தால்



மழையைப் பெய்விக்க ஆதிகிறான். உஷைகள் இதை அறியார்கள். அவர்கள் உணவிருப்பவர்களும், தங்கள் சொத்த வேலைகளில் மனத்தைச் செலுத்துபவர்களுமான சாதுப் பிரஜைகளைப் போல் இருக்கிறார்கள்.

2. உன்னுடைய கதிர்கள் சனனமாகும் மருத்துக் களோடு சேர்ந்து மேகத்தை அடிக்கின்றன. கருத்த காணை கர்ச்சித்தது. தாரை சுகந்தருபவையும், காந்தி யால் சிரிப்பவையுமான பிந்துக்களோடு வருகிறது. மழை பொழிகிறது. மேகங்கள் முழங்குகின்றன.

3. மின்னலான அக்கினி, ருதத்தின் பாலால்— மழையின் சலத்தால் உலகத்தைச் செழிப்பிக்கிறது. அது ருதத்தின் நேரான வழிகளால்–அதை–சலத்தைப் பிராணிகள் சுகப்படச் செலுத்துகிறது. அப்பொழுது அர்யமானும், மித்திரனும், வருணனும், எங்குஞ் செல்லும் மருத்துக்களும், மேகத்திலிருக்கும் சலத்தின் மூலஸ்தானத்தின் மறைப்பைத் துளைக்கிறார்கள்.

### அக்கினி

4. அக்கினியே! ஜாத வேதஸனே! பலத்தின் மகனும், பசுச் செல்வத்தின் தலைவனுமான நீ, எங்க களுக்கு மகத்தான புகழையளிக்கவும்.

5. அறிஞனும், மனைகளை அளிப்பவனும், ஒளியுள்ள வனுமான அக்கினி, நம்முடைய துதிகளால் போற்றத் தகுந்தவன். பல சுவாலைகளோடு மின்மினுக்கும் வாயுள்ள நீ, எங்களுக்கு உணவைத் தரும் செல்வம் தோன்றப் பிரகாசிக்கவும். 870

6. பிரகாசிக்கும் அக்கினியே! நீயாகவோ அல்லது உன் ஆட்களாலோ, இரவிலோ, பகலிலோ துன் புறுத்துபவர்களை யெல்லாம் துரத்தவும். கூரிய வாயுள்ள அக்கினியே! அரக்கர்களை யெல்லாம் பற்பப் படுத்தவும்.

Astrologer Hariram Thejus
hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



7. எல்லாச் செயல்களிலும் போற்றத் தகுந்த அக்கினியே! நீ காயத்திரிச் சந்த சூக்தத்தால் போற்றப்பட்டு, உன் பாலனத்தால் எங்களைப் பாலிக்கவும்.

8. அக்கினியே! வறுமையை நீக்குபவையும், அனைவராலும் விரும்பத் தகுந்தவையும், போர்களிலே ஜயிக்கப்படாதவையுமான செல்வங்களை எங்களுக்களிக்கவும்.

9. அக்கினியே! நாங்கள் சீவிக்க சுகத்தைத் தருவதும், எங்களாயுளை யெல்லாம் ஆதரித்து ஞானத்தோடிருப்பதுமான செல்வத்தை எங்களுக்களிக்கவும்.

10. கோதமன், செல்வத்தை விரும்பி, சுத்தமான துதிகளையும், தோத்திரங்களையும் கூறிய சுவாலையுள்ள அக்கினிக்குக் கூறுகிறான். 875

11. அக்கினியே! எங்களைத் தூரத்திலோ, அருகிலோ துன்புறுத்துபவன் அழிவானாக. நீ எங்களைச் செல்வப்படுத்துவாயாக.

12. அனைத்தையுங்காணும் ஆயிரங்கண்களுள்ள அக்கினி, அரக்கர்களை நீக்குகிறான். துதிகளால்-துதிக்கப்பட்டு, ஹோதாவான அக்கினி தேவர்களைத் துதிக்கிறான். 877

## 80. இந்திரன்

### 80. கோதம ராஹூகணன்

1. மிக்க வலியனே! வச்சிராயுதம் ஏந்துபவனே! இங்ஙனம் மதத்திலே, சோமத்திலே அறிஞன் உனக்குத் துதியைக் கூறினான். நீ உன் பயத்தால் அஹியைப் புவியிலிருந்து பிரித்தாய். நீ உன்னுடைய சொந்தத் தகுமைத் தன்மையை-சுவராஜ்யத்தைப் புலப்படுத்தினாய்.

2. பொழிவதும், மதமளிப்பதும், பருத்தால் ஏந்தி வரப்பட்டதும், பொழியப்பட்டதுமான சோமம் உன்னை இன்புறுத்தியது. வச்சிரனே! உன் பலத்தால் வானி

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



லிருந்து நீ விருத்திரனை விலக்கினாய். நீ உன்னுடைய சுயராஜ்யத்தை-சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்தினாய்.

8. முன்னேறவும், பகைவர்களை எதிர்க்கவும், ஜயிக்கவும் உன்னுடைய வச்சிராயுதம் வீணாகாது. இந்திரனே! உன்னுடைய ஆற்றலின் ஆண்மைத் தன்மையுண்டு. நீ விருத்திரனைக் கொல்லவும், சலங்களைத் ஜயிக்கவும், நீ உன்னுடைய சுயராஜ்யத்தை-சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்தவும்.

4. நீ புவியிலிருந்தும், சோதியிலிருந்தும் விருத்திரனை விலக்குகிறாய். நீ மருத்துக்களோடிருப்பவையும், பிராணிகளைப் பாலிப்பவையுமான மழை சலங்களைப் பெய்விக்கவும். உன்னுடைய சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்தவும்.

5. கோபமடைந்த இந்திரன், பகைவன் மீது பாய்ந்து, தன் வச்சிரத்தால் நடுங்கும் விருத்திரனைத் தாடையிலடித்தான். சலங்களைப் பெருகச் செய்தான். அவன் தன்னுடைய சுயராஜ்யத்தை-சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்தினான். 882

6. இந்திரன் தன்னுடைய நூறு கணுக்களுள்ள வச்சிரத்தால் விருத்திரனை - அவனுடைய கதுப்பிலே அடித்தான். அவன் மகிழ்ந்து நண்பர்களுக்கு உணவு தோன்றும் வழியை விரும்புகிறான். அவன் தன்னுடைய சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்துகிறான்.

7. இந்திரனே! வச்சிரனே! மேகத்தில் வருபவனே! உன்னுடைய ஆற்றல் தடைபடாதது. நீ உன்னுடைய தந்திரத்தால் வஞ்சகமான மிருகத்தைக் கொன்றாய். நீ உன்னுடைய சொந்தத் தகுமைத் தன்மையைப் புலப்படுத்தினாய்.

8. உன்னுடைய வச்சிராயுதம், தொண்ணூற்றொன்பது நதிகளின் மீது எங்கும் பரந்தது. உன்னுடைய ஆற்றல் மகத்தானது. உன்னுடைய கைகள்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



பலத்தை ஏந்துகின்றன. நீ உன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்துகிறாய்.

9. ஆயிரம் சனங்கள் இந்திரனை ஒருமிக்கத் துதித்தார்கள். இருபது மனிதர்கள் அவனை உயர்த்தினார்கள். நூறு ரிஷிகள் அவனை அடிக்கடி போற்றுகிறார்கள். இந்திரனுக்காக அவி எழுகிறது. இந்திரன் தன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்துகிறான்.

10. இந்திரன் தன் வலிமையால் விருத்திரனுடைய வலிமையை யழித்தான். அவனுடைய பலம் பெரிது. அதனால் அவன் விருத்திரனைக் கொன்று தடைபட்ட சலங்களை விடுவித்தான். அவன் தன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினான் 887

11. வச்சிரனே! மருத்துக்களோடுள்ள நீ, உன் கோபத்திலே, உன் பலத்தால் நீ விருத்திரனைக் கொன்றபோது இப்புவியும் சோதியும் நடுங்கிற்று. நீ உன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினாய்.

12. விருத்திரன் தன் ஆட்டத்தாலும், ஆரவாரத்தாலும் இந்திரனை அசைக்க இயலவில்லை. பல கூர்களுள்ள இரும்பினாலான வச்சிராயுதம் அவன் மீது வீழ்ந்தது. இந்திரன் தன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினான்.

13. நீ உன்னுடைய வச்சிராயுதத்தால் விருத்திரனையும், அவனுடைய இடிப்படையையும் எதிர்க்குங்கால், உன்னுடைய அஹியை அழிக்க விரும்பிய மனத்திண்மை சோதியெங்கும் பரந்தது. நீ உன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினாய்.

14. இந்திரனே! வச்சிராயுதனே! உன் கர்ச்சனையிலே தாவர ஜங்கமப் பொருள்கள் எல்லாம் நடுங்கின. இந்திரனே! உன் கோபத்துக்கு துவஷ்டாவும் பயத்தால் கலங்கினான். நீ உன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினாய்.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



15. எங்கும் வியாபகமாயிருக்கும் இந்திரனை நாங்கள் நிச்சயமாக அறியோம். பரத்திலே பலத்தோடிருக்கும் அவனை எவன் அறிகிறான்? தேவர்கள் அவனில் செல்வத்தையும், வீரியச் செயலையும், ஆற்றலையும் ஸ்தாபித்தார்கள். அவன் தன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினான். 892

16. அதர்வனும், பிரஜைகளின் தந்தையான மனுவும், தத்யங்களும் நடத்திய யக்ஞங்களில் தோன்றிய அவிகளும், தோத்திரங்களும், பூர்வயக்ஞங்களில்போல் இந்திரனிடம் சேர்ந்தன. அவன் தன்னுடைய சொந்தத் தலைமைத் தன்மையைப் புலப்படுத்தினான். 893

## 81 இந்திரன்

### 81. கோதம ராஹூகணன்

1. மனிதர்கள் விருத்திரனைக் கொல்லும் இந்திரனை, பலத்துக்கும், மதத்துக்கும் உயர்த்தினார்கள். நாங்கள் அவனைப் பெரிய போர்களிலும், சிறிய போரிலும் அழைக்கிறோம். அவன் எங்களைப் போர்களிலே பாலிப்பானாக.

2. வீரனே! நீ சேனைக்கு ஒப்பானவன். நீ சத்துருக்களின் செல்வத்தைத் தருபவன். நீ தாழ்த்துபவனை உயர்த்துபவன். யக்ஞத்தைச் செய்து பொழிபவனுக்கு நீ செல்வத்தைத் தருகிறாய். உன்னிடத்தில் மிகுந்த செல்வமிருக்கிறது.

3. போர்கள் நடைபெறுங்கால் வீரனின் முன்னிலையில் பகைவர்களின் செல்வம் வைக்கப்படுகிறது. உன்னுடைய மதத்தோடு பாயும் குதிரைகளை இணைக்கவும். எவனை நீ கொல்வாய்? எவனை நீ செல்வப்படுத்துவாய்? இந்திரனே! நீ எங்களைச் செல்வப்படுத்தவும்.

4. செயலில் சிறந்தவனும், பகைவர்களுக்குப் பயங்கரனுமான இந்திரன் யக்ஞான்னத்தைப் புசித்து, தன்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



பலத்தைப் படுத்தினுன். சுந்தரத் தோற்றமுள்ளவனும், அழகிய தாடையிருப்பவனும், குதிரைச் செல்வனுமான அவன் நம்முடைய செல்வத்துக்காகத் தன் இசைந்த கைகளிலே இரும்பாலான வச்சிராயுதத்தை ஏந்துகிருன்.

5. அவன் தன் புகழால், புவியின் வெளியையும் வானையும் நிரப்பினுன். அவன் விண்ணிலே நட்சத்திரங்களைப் பதித்தான். இந்திரனே! உன்னைப் போல் எவனும் பிறந்ததில்லை; பிறக்கப்போவதுமில்லை. நீ விசுவத்தைத் தாங்குகிருய். 898

6. பாலிப்பவனும், அவிகளை யளிப்பவனுக்கு மனிதருக்குரிய உணவைத் தருபவனுமான இந்திரன், எங்களுக்கு அத்தகைய உணவை அளிப்பானுக. நான் உன்னுடைய செல்வங்களிலே பாகத்தைப் பெற நீ உன்னுடைய மிகுந்த செல்வத்தைப் பங்கிடவும்.

7. தெறிச் செயல்களை நடத்தும் அவன், ஒவ்வொரு மதத்தைப் பெறுங்கால் எங்களுக்குப் பசுக்களின் மந்தைகளைத் தருகிருன். இந்திரனே! உன்னுடைய இரு கைகளால், பல நூற்றுக்கணக்கான தானுவித செல்வங்களைப் பற்றவும். எங்களறிவைக் கூர்மைப் படுத்தவும். எங்களுக்குச் செல்வத்தையளிக்கவும்.

8. சூரனே! எங்களுடைய செல்வத்தையும், சக்தியையும் செழிப்பிக்கப் பொழியப்பட்டுள்ள ஸோமத்தை எங்களோடு பருகி திருப்தியாகவும். உன்னிடம் பெரும் செல்வம் உண்டு என்பதை நாங்கள் அறிகிறேம். நாங்கள் எங்கள் விருப்பங்களை உன்னிடம் கூறுகிறேம். ஆதலால் நீ எங்களுடைய பாலகனுயிருக்கவும்.

9. இந்திரனே! உன்னுடைய இந்த மனிதர்கள் அனைவராலும் புசிக்கத் தகுந்த யக்ஞான்னத்தைச் செழிப்பிக்கிறார்கள். நீ அளிக்காதவர்களிடமிருக்கும் செல்வங்களை யறிகிருய். அவர்களுடைய செல்வத்தை எங்களுக்களிக்கவும். 902

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



## 82. இந்திரன்

### 82. கோதம ராஹூகணன்

1. மகவானே! அருகிலாகவும். எங்களுடைய துதிகளைக் கேட்கவும். நீ எங்களிடம் முன்பு இருந்தது போலிருக்கவும். நீ எங்களை உண்மையே பேச ஊக்கப்படுத்தினுய். அச் சத்திய மொழியால் நீ யாகிக்கப்படுகிருய். இந்திரனே! இப்பொழுது நீ உன்னுடைய குதிரைகளை இணைக்கவும்.

2. தொழுபவர்கள் நீ அளித்த உணவைப் புசித்தார்கள். இன்பமடைந்தார்கள். அதிகமாய்ப் புசித்து, பேச முடியாமல் தங்கள் அங்கங்களை ஆட்டினுர்கள். தாமே துலங்கும் விப்பிரர்கள், தங்களுடைய புதிய துதியால் உன்னைப் போற்றினுர்கள். இந்திரனே! இப்பொழுது நீ உன்னுடைய குதிரைகளை இணைக்கவும்.

3. மகவானே! நாங்கள் காணக் கனகமாயிருக்கும் உன்னை வந்திக்கிறேம். இங்ஙனம் எங்களால் போற்றப்பட்டு நீ செல்வம் நிறைந்த தேரிலே உன்னை விரும்புபவர்களிடம் செல்லவும். இந்திரனே! இப்பொழுது உன்னுடைய குதிரைகளை இணைக்கவும்.

4. அவன் நலங்களைப் பொழிவதும், பசுக்களைத் தருவதும், தானியமும் ஸோமமும் சேர்ந்த கலவையால் நிறைந்ததுமான தேரிலே ஏறுவானுக. இந்திரனே! இப்பொழுது உன்னுடைய குதிரைகளை இணைக்கவும்.

5. சதக்கிரதுவே! உன்னுடைய குதிரைகள் தேரின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் இணைக்கப்படுக ஸோமான்னத்தால் மகிழ்ந்தவுடன் நீ தேரிலே அன்பு மிகுந்த மனைவியினிடஞ் செல்லவும். இந்திரனே! இப்பொழுது உன்னுடைய குதிரைகளை இணைக்கவும். 907

6. நான் கேசங்களுள்ள குதிரைகளை மந்திரங்களோடு உன் தேரிலே இணைக்கிறேன். புறப்படவும். கைகளில் வாய்வடங்களைப் பற்றவும். பொழியப்பட்டவையும், ஊக்கமளிப்பவையுமான ஸோமரசங்கள் உன்னை மதப்

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



படுத்தின. வச்சிரனே! இங்ஙனம் புட்டியடைந்து நீ உன் மகிமையோடு திருப்தியாகவும். 908

## 83. இந்திரன்

### 83. கோதம ராஹூகணன்

1. இந்திரனே! உன் பாலனங்களால் நன்கு பாவிக்கப்படும் மனிதன் குதிரைகளுள்ள மகிமையிலே வசிக்கிறான். முதல்வனுக்க பசுக்களுள்ள இடத்துக்குச் செல்லுகிறான். நீ, அவனை மிகுந்த செல்வத்தால், கடலை நிரப்ப நாலு திசைகளிலிருந்து ஞானத்தை ஏந்திப் பாயும் நதிகள் போல் நிரப்பவும்.

2. துலங்கும் சலங்கள் யக்ஞபாத்திரத்துக்குப் பாய்கின்றன. அப்பாத்திரத்தைத் தேவர்கள் காண்கிறார்கள். அவர்களுடைய திருஷ்டி கீழே வரும் பரந்த கிரணங்கள் பாத்திரத்தின் மீது வீழ்கிறது ஒரே பெண்ணை மணஞ் செய்து கொள்ள விரும்பும் பல யுவர்களைப் போல் தேவர்கள் ஸோமத்தால் நிறைந்ததும், தேவர்களை விரும்புவதுமான பாத்திரத்தை உத்தர வேதியினருகே செலுத்த விரும்புகிறார்கள்.

3. சுருக்கை உயர்த்தி, உன்னைப் போற்றிய தம்பதிகளை நீ வாழ்த்தினாய். தலைவன் தடைபடாமல் வசிக்கிறான். உன் விரதத்திலே அவன் செழிக்கிறான். பொழியும வனுக்கு மங்களமான சக்தி தோன்றுகிறது.

4. அங்கிரஸர்கள் முதலில் ஆற்றலைப் பெற்றார்கள். உத்தமச் செயல்களாலும், யக்ஞங்களாலும் அவர்களுடைய அனல்கள் எழுப்பப்பட்டன. பிறகு மனிதர்கள் பணியின் பசுக்களும், குதிரைகளும், வேறு பிராணிகளுமுள்ள எல்லாச் செல்வத்தையும் பற்றினார்கள்.

5. அதர்வன் முதலில் யக்ஞங்களால் திருடப்பட்ட பசுக்களின் வழியைக் கண்டான். பிறகு காந்தனும் விரத பாலகனுமான சூரியன் தோன்றினான். அதர்வன் பசுக்களை அடைந்தான். இந்திரனுக்குக் காவ்ய உசனன்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



துணையாயிருந்தான். நாம் அசுரர்களை வசப்படுத்தத் தோன்றிய அமிருதனனை இந்திரனைப் போற்றுவோமாக. 913

6. நலங்களைத்தரும் செயலுக்குத் தருப்பை நறுக்கப்படுங்காலும், ஹோதா யக்ஞத்திலே சுலோகத்தை அர்ச்சிக்குங்காலும், ஸோமத்தைப் பிழியுங்கால் தொழுபவனைப் போல் சந்திக்குங்காலும் இந்திரன் இன்புறுகிறான். 914

## 84. இந்திரன்

### 84. கோதம ராஹூகணன்

1. இந்திரனே! உனக்காக ஸோமம் பொழியப்பட்டுள்ளது. வலியனே! பகைவர்களைத் தாழ்த்துபவனே! இங்கு வா. வாகைத் தன் கதிர்களால் நிறைக்கும் சூரியனைப்போல் இங்கு இந்திரியம் உன்னை நிரப்புக.

2. குதிரைகள் அவனை ரிஷிகளுடைய, மனிதர்களுடைய ஸ்தோத்திரங்களுக்கும், யக்ஞத்துக்கும் ஏந்தி வருக

3. விருத்திரனைக் கொல்பவனே! தேரிலே ஏறவும். உன்னுடைய குதிரைகள் மந்திரத்தால் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஸோமத்தை யழுத்துங்கால் அதன் சத்தத்தால் உன் கவனத்தை இங்கு செலுத்துக.

4. இந்திரனே! அமுதமாயும், மதமளிப்பதாயும், மேன்மையாயிருக்கும் இந்த ஸோமத்தைப் பருகவும். ருதத்தின் ஸ்தானத்தில் உனக்குச் சுக்கிரனுடைய தாரைகள் பெருகுகின்றன.

5. இந்திரனுக்குத் துரிதமாய் வணக்கத்தை யளியுங்கள். துதிகளைக் கூறுங்கள். பொழியப்பட்ட ஸோமங்கள் அவனை இன்புறுத்துக. அவனுடைய உத்தம பலத்தைப் போற்றுங்கள். 919

6. இந்திரனே! நீ குதிரைகளை இணைக்கிறாய். உனக்கு நிகராக எந்தத் தேர்ப்பாகனுமில்லை. பலத்தி

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



லும் உனக்கு ஒப்பாக வேறு எவனுமில்லை. தல்ல குதிரை களிருந்தாலும் உன்னை முந்திச் செல்ல எவனுலும் இயலாது.

7. அவிகளை அளிக்கும் மானிடனுக்குச் செல் வத்தைத் தரும் தனியனே அவன். மாறுபாடற்றவன்; எதிர்ப்பற்றவன். இந்திரனே துரிதமாக அனைவர்க்கும் தலைவனுகிருன்.

8 அவியளிக்காதவனை அவன் தன் காலால் காளை னைப் போல் எப்போது மிதிப்பான்? எங்கள் துதிகளை இந்திரன் எப்போது கேட்பான்?

9. பல்லின் நடுவே ஸோமத்தைப் பொழிந்து போற்றுபவனுக்கு இந்திரன் உக்கிரபலத்தை யளிக் கிருன்.

10. சுவைக்கு இனிமையாக யிருப்பதும், இங்ஙனம் பெருகியுள்ளதுமான ஸோமத்தை வெண்மையான பசுக் கள் பருகுகின்றன. எழிலுக்காக அவை வள்ளலான இந்திரனேடு சென்று களிப்புறுகின்றன. கொட்டங்களில் வசிக்கும் அவை இந்திரனுடைய சுயராஜ்யத்துக்கு சொந்த தலைமைத் தன்மைக்குக் காத்திருக்கின்றன. 924

11. பல்வித நிறமுள்ள பசுக்கள் அவனுடைய பரி சத்தை விரும்பி ஸோமரஸத்தைப் பாலோடு சேர்க்கின் றன. இந்திரனுடைய பிரியமான பசுக்கள், வெட்டும் வச்சிராயுதத்தை அவனுடைய பகைவர்கள் மீது செலுத்துகின்றன. அப்பசுக்கள் "இந்திரனுடைய சுய ராஜ்யத்துக்குக் காத்திருக்கின்றன.

12. இந்தப் பேரறிவுள்ள பசுக்கள் அவனுடைய பலத்தைப் பாலான வணக்கத்தோடு போற்றுகின்றன. அப்பசுக்கள் போரை விரும்பும் பகைவர்கள் தெரிந் துள்ள இந்திரனின் பலவீரச் செயல்களைப் பாடுகின்றன. அவை இந்திரனுடைய சுயராஜ்யத்துக்குக் காத்திருக் கின்றன.

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



13. இந்திரன் ததீசியின் என்புகளால் 810 விருத்திரர் களைக் கொன்ருன் - 810 பகைவர்களைக் கொன்ருன்.

14. இந்திரன் மலைகளின் நடுவே மறைக்கப்பட் டிருந்த குதிரையின் தலையை விரும்பினுன். அதைச் சரியணுவதியிலே கண்டான்.

15. சனனமாகும் சந்திர மண்டலத்திலே மறைக்கப் பட்டுள்ள துவஷ்டாவின்-கற்பிப்பவனின் ஒளியை-சூரியனுடைய கதிர் என அவர்கள் இப்போது அறிந் தார்கள். 929

16. எவன் இன்று குதத்தின் தேரின் நுகத்திலே வலியவையும், விளங்குபவையும், எதிரிகளால் தாங்க முடியாத சீற்றமுள்ளவையும், வாய்களினுள் சரமுள்ள வையும், பகைவர்களின் இருதயங்களை மிதிப்பவையும், நண்பர்களை இன்புறுத்துபவையுமான குதிரைகளை இணைக்கிருன்? இவற்றின் செயல்களைப் போற்றுபவன் நீண்ட ஆயுளைப் பெறுகிருன்.

17. இந்திரன் அருகிலிருக்குங்கால் பகைவர்களைக் கண்டு எவன் ஓடுகிருன்? எவன் துன்பமாகிருன்? எவன் பயமாகிருன்? அருகில் இந்திரன் இருக்கிருன் என்பதை எவன் அறிகிருன்? அவனருகில் இருக்குங் கால் இந்திரனிடம் ஒருவன் ஏன் புதல்வனுக்கும், யானைக்கும், செல்வத்துக்கும், தனக்கும் தன் சனங்களுக் கும் கேட்க வேண்டும்? அவனே கேட்காமல் அவசிய மானவற்றைச் செய்கிருன்.

18. எவன் இந்திரனுக்காக ஒளிப்படுத்தப்பட்ட அக்கினியைத் துதிக்கிருன்? எவன் நித்தியமாய் வரும் ருதுக்களுக்கேற்றவாறு சுருக்கத்தில் நெய் அவியோடு அவனைப் போற்றுகிருன்? தேவர்கள், விரும்பப்படும் செல்வத்தை எவனுக்குத் துரிதமாயளிக்கிருர்கள்? எவனுமில்லை. இந்திரனே அளிக்கிருன். யக்ஞஞ் செய்ப வனும், தேவர்களால் விரும்பப் படுபவனுமான எவன் இந்திரனை நன்கறிகிருன்?

hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



19. தேவனே! வலிமையுள்ள இந்திரனே! உன்னைப் போற்றும் மனிதனை நீ போற்றவும். மகவானே! உன்னை யன்றி சுகப்படுத்துபவன் வேறு எவனுமில்லை. ஆதலால் இந்திரனே! நான் உனக்குத் துதியைக் கூறுகிறேன்.

20. மனைகளையளிப்பவனே! உன்னுடைய செல்வங் களும், பாலனங்களும் எங்களைத் தவிர்க்காமலிருக்க. மானிட நண்பனே! மந்திரங்களை அறியும் எங்களுக்கு எல்லாச் செல்வங்களையுமளிக்கவும். 934

## 85. மருத்துக்கள்

### 85. கோதம ராஹூகணன்

1. மருத்துக்கள் புறப்படுங்கால் பாலைகளைப் போல் தங்களைப் பாங்கு செய்து கொள்கிறார்கள்; வானில் சலனமாடும் அவர்கள் குத்திரப் புதல்வர்கள்; அவர்கள் தங்களுடைய நல்ல செயல்களால் வானையும் விண்ணை யும் செழிப்பிக்கிறார்கள்; பாறைகளைப் பொடிப்படுத்தும் அவர்கள் யக்ஞங்களில் இன்புறுகிறார்கள்.

2. தேவர்களால் பலப்படுத்தப்பட்ட அவர்கள் மகத்துவத்தை அடைந்தார்கள்; ருத்திரப் புதல்வர்கள் தங்கள் மனையை விண்ணிலே ஸ்தாபித்தார்கள்; அவர்கள் புகழுக்குரிய இந்திரனைப் புகழ்ந்தார்கள்; அவர்கள் அவனைப் பலத்தால் ஊக்கப்படுத்தினர்கள்; பிருசினிப் புதல்வர்கள் செல்வங்களை ஏந்தினர்கள்.

3. புவியின் புதல்வர்கள் தங்களை ஆபரணங்களால் அலங்காரஞ் செய்து கொள்ளுங்கால், பிரகாசமுட னிருக்கும் அவர்கள் தங்கள் அங்கங்களிலே சொலிக்கும் எழில்களை ஏந்துகிறார்கள்; அவர்கள் பகைவர்களை யெல்லாம் விலக்குகிறார்கள்; சலங்கள் அவர்களுடைய வழியைத் தொடர்கின்றன.

4. தகுதியாய்ப் போற்றப்படும் அவர்கள் பலவித ஆயுதங்களோடு பிரகாசிக்கிறார்கள்; தாழ்த்தப்படாத அவர்கள் தங்கள் திறத்தால் மலைகளைத் தாழ்த்து

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



கிறார்கள். மருத்துக்களே! மனவேகமுள்ளவர்களும் மழையைச் செலுத்தும் விரதமுள்ளவர்களுமான நீங்கள் உங்கள் தேரிலே புள்ளிமான இணையுங்கள்.

5. மருத்துக்களே! நீங்கள் உணவையளிக்க மேகத்தைச் செலுத்தி, புள்ளிமானைத் தேர்களிலே இணைத்தபோது காந்தியான மின்னலிலிருந்து தாரைகள் பொழிகின்றன. அவை சலத்தால் புவியை சர்மத்தைப் போல் நனைக்கின்றன. 939

6. மருத்துக்களே! வேகமாயும், விரைந்து பாய் பவையுமான உங்களுடைய குதிரைகள் உங்களை இங்கு ஏந்தி வருக. துரிதமாய்ச் செல்லும் நீங்கள் கைகளில் செல்வங்களை ஏந்தி வாருங்கள். தருப்பையினுல் பரந்த இடத்தில் அமருங்கள்; இனிய உணவால் இன்புறுங்கள்.

7. சொந்த பலமுள்ள மருத்துக்கள் பெருகினார்கள்.. தங்கள் மகிமையால் சுவர்க்கத்துக்குச் சென்றார்கள் அங்கு தங்களுடைய மனையைக் கற்பித்தார்கள். பொழி வதும், இன்பமளிப்பதுமான யக்ஞத்தை, விஷ்ணு மருத்துக்களுக்காகப் பலிக்குங்கால், அவர்கள் துரித மாய்ப் பறவைகளைப்போல் வந்து இனிமையான தருப் பையின் மீது அமர்கிறார்கள்.

8. துரிதமாய்ச் செல்லும் மருத்துக்கள் போர்களில் வீரர்களைப் போலும், நீர்களைப் போலும் போராடு கிறார்கள். எல்லாப் பிராணிகளும் தலைவர்களான மருத் துக்களிடம் பயமாகின்றன. அவர்கள் அரசர்களைப் போல் உக்கிர வடிவமுள்ளவர்கள்.

9. கைத்திறமுள்ள துவஷ்டா, நுட்பமாய்ச் செய்யப் பட்டதும், ஆயிரங் கூர்களுள்ளதும், பொன்னாலானது மான வச்சிராயுதத்தைக் கற்பித்தவுடன் அதை இந்திரன் விரச்செயல்களை நடத்தப் பெற்றுக்கொண்டான். அவன் விருத்திரனைக் கொன்றான். சலக்கடலைச் செலுத்தினான்.

10. மருத்துக்கள் தங்கள் பலத்தால் நிலத்தை -மேகத்தை மேலே உயர்த்தினார்கள். அவர்களுடைய



hariram1by9@gmail.com

vedicfastro.blogspot.com



வழியைத் தடுத்த மலையைப் பிளந்தார்கள். ஈகையர்களான மருத்துக்கள் வீணையை வாசித்தார்கள். சோமத்தால் மகிழ்ந்து விரும்பத்தக்க செல்வங்களை யளித்தார்கள். 944

11. அவர்கள் கோணலாக எங்கோ சென்ற மேகத்தை இங்கே செலுத்தினார்கள். தாகமடைந்த கோதமனுக்கு நீர் ஊற்றைப் பெர்மிந்தார்கள். விசித்திர ஒளியோடு விளங்கும் அவர்கள் பாலனத்தோடு அவனிடம் வந்தார்கள். விப்பிரனுடைய விருப்பத்தை சலங்களால் திருப்தி செய்தார்கள்.

12. உங்களுக்குத் துதியை யளித்து, உங்களைப் போற்றுபவனுக்கு இவ்வுலகங்களிலிருப்பவையும், அளிப்பார்க்கு விளங்குபவையுமான சுகங்களை-பாலனங்களை அளியளிப்பவனுக்குத் தாருங்கள். மருத்துக்களே! அவற்றை எங்களுக்குமளியுங்கள். பொழிபவர்களே! உத்தம வீரப் புதல்வர்களுள்ள செல்வத்தை எங்களுக்களியுங்கள். 946

## 86. மருத்துக்கள்

### 86. கோதம ராஹூகணன்

1. மிகுந்த பிரகாசமுள்ள மருத்துக்களே! நீங்கள் வானிலிருந்து இறங்கி எவனுடைய மனைக்குச் சென்று சோம பானஞ் செய்கிறீர்களோ, அவன் நல்ல பாலகர்களுடனுகிறன்.

2. யக்ஞங்களை ஏந்தும் மருத்துக்களே! யக்ஞங்களோடு போற்றப்படுபவனுடைய துதிகளையும் அல்லது விப்பிரனுடைய தோத்திரங்களையுங் கேட்கவும்.

3. தலைவனுடைய ரித்விஜர்கள் மருத்துக்களுக்கு அவிகளை அளித்து அவர்களை ஊக்கப்படுத்தினர்கள். தலைவன் பல பசுக்களுள்ள தொழுவத்துக்குச் செல்லுகிறன்.

4. யக்ஞ தினங்களில் நடத்தப்படும் யக்ஞத்திலே சூரர்களான மருத்துக்களின் கணத்துக்கு சோமம் ஊற்

Astrologer Hariram Thejus

vedicfastro.blogspot.com



றப்படுகிறது. துதி கூறப்படுகிறது. அவர்களுடைய இன்பம் மூட்டப்படுகிறது.

5. எல்லாப் பகைவர்களையும் ஜயிக்கும் மருத்துக்கள் இந்தத் தொழுபவனின் துதிகளைக் கேட்பார்களாக. அவர்களைப் போற்றுபவன் அதிக உணவைப் பெறுவானாக. 951

6. மருத்துக்களே! எல்லாவற்றையுமறிபவர்களான உங்களுடைய பாலனத்திலிருக்கும் நாங்கள் பல வருடங்களாக அவிகளை அளித்து வருகிறோம்.

7 யக்ஞராகுகர்களான மருத்துக்களே! எவனுடைய அவிகளை நீங்கள் பற்றுகிறீர்களோ, அவன் செழிப்பானாக.

8. சத்திய சக்தியுள்ளவர்களே! தலைவர்களே! உங்கள் ஆதரவைவிரும்பி உங்களை சேவிப்பதில் வியர்த்து, உங்களைத் துதிப்பவனின் விருப்பங்களை அறிந்து கொள்ளுங்கள்.

9. ஸத்திய சக்தியுள்ளவர்களே! நீங்கள் உங்களுடைய மகத்வத்தைப் புலப்படுத்தினீர்கள். அதன் பிரகாசத்தால் நீங்கள் அரக்கர்களை அழித்தீர்கள்.

10. எங்கும் பரவியுள்ள தமத்தை நீக்குங்கள். ஒவ்வொரு பட்சிகளையும் விலக்குங்கள். நாங்கள் விரும்பும் சோதியைப் புலப்படுத்துங்கள். 956

## 87. மருத்துக்கள்

### 87. கோதம ராஹூகணன்

1. பகையழிப்பவர்களும், மிகுந்த பலமுள்ளவர்களும், பலவித கோஷ மெழுப்புபவர்களும், தாழாத உத்தமர்களும், பிரியாதவர்களும், மலை அவியைப் புசிப்பவர்களும், ஸதா போற்றப்படுபவர்களுமான மருத்துக்கள், தங்கள் தேகத்துக்குரிய ஆபரணங்களோடு சில சூரிய கிரணங்களைப் போல் வானிலே பிரகாசிக்கிறார்கள்.

2. மருத்துக்களே! நீங்கள் பறவைகளைப் போல் எந்த வழியாலும் பறந்து சலனமாடும் மேகங்களை

hariram1by9@gmail.com